DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan Broker
Homelife/Future Reality Inc., Brokerage
Joy H. Selvanayagam Broker

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX
Realty Inc. Brokerage
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

25வது ஆண்டை நோக்கி

Towards 25th Year in Publishing

www.uthayannews.ca

# UTHAYAN உதயன்

திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

$1.00

Tel : 416-752-1524
Fax: 416-752-6703

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Affidavits for Immigration purposes;
Kokulan Baskaran
Tel : 647-344-6600

MORTGAGE மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

உதயம் 1288 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday December 11, 2020



## The Supreme Pontiff of Hinduism Jagatguru Mahasannidhanam, His Divine Holiness Nithyananda Paramashivam, joined us last Sunday to grace the 24th Year celebration of CANADA UTHAYAN

கடந்த 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று கனடாவிலிருந்து இணையவழி ஊடாக நடத்தப்பெற்ற எமது உதயன் பத்திரிகையின் 24வது ஆண்டு நிறைவு விழாவில் உலகெங்கிலும் இருந்து பல அறிஞர்கள் மற்றும் கவிஞர்கள் கலந்து கொண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள்.

அவர்களோடு எம்மோடு இணைந்து வாழ்த்துக்களையும் ஆசியையும் வழங்கி ஜெகக்குரு பகவான் ஸ்ரீ நித்தியானந்த பரமசிவம் அவர்கள் உரையாற்றினார்-: *கனடா உதயன் ஆசிரிய பீடம்*

(உள்ளே விபரமான செய்தி 3ம் பக்கத்தில்)

## Health Canada எனப்படும் கனடிய மத்திய சுகாதார பணியகம் முதலாவது கோவிட்-19 தடுப்பு மருந்தை அங்கீகரித்துள்ளது



கோவிட்-19 இற்கான முதல் தடுப்புமருந்துக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டதையடுத்துக் கோவிட்-19 இற்கு எதிரான போராட்டத்தின் முக்கிய மைல்கல் ஒன்றைக் கனடா அடைந்தது. இதனை கனடிய பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ அறிவித்தார். (உள்ளே 7ம் பக்கத்தில் விபரமான செய்தி)

AZ Drivers Wanted
Hiring AZ Driver For Single & Team DriverFor USA Runs.
Must Have Minimum 6 Months Driving Experience.
Please Call: Vije Bala
(437) 997-6478

## கனடா TORONTO VOICE OF HUMANITY மனித நேய அமைப்பின் சார்பில் யாழ்ப்பாணத்தில் பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசப் கொப்பிகள் வழங்க ஏற்பாடு

கனடாவின் TORONTO VOICE OF HUMANITY மனித நேய அமைப்பின் சார்பில் யாழ்ப்பாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்க 6 இலட்சம் ரூபாய்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

(விபரமான செய்தி உள்ளே 3ம் பக்கத்தில்)

Toronto Voice Of Humanity

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line (416) 489-2000
Visit GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7 905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905 794 4404

# MORTGAGE SOLUTIONS

## $50,000 EQUITY LOAN

GET APPROVED WITHIN 24 HOURS

416.298.2777

$375 Mo.

www.mortgageSolutions.ca

MONTHLY SAVING $2,478

SAVE UPTO 75% REFINANCE



KIRUBA THANABALASINGHAM

Mortgage Agent Lic# M12002440

Ultimate Mortgage Group Lic 11995

info@mortgageSolutions.ca

Off: 416.298.2777

Dir: 416.894.9122

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credt Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.39% | | $1,563.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,563.00 |

# MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## GHURUS TOWING

Forklift / Machinery move
Local / Long Distance Towing
Recovery Specialist
Flatbed Service
Lockout Specialist
Booster service
Flat Tire

We pay scrap up to $1000



NIRMALAN (ROGER):
(416) 990-7777
(416) 984-7777

## COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

VARUNAN:
(416) 894-6244

## BASEMENT வாடகைக்கு உண்டு

Birchmount / Eglinton
சந்திப்பிற்கு அருகில்
2 bedroom basement with separate entrance
மற்றும் எல்லாவித வசதிகளுடன் வாடகைக்கு உண்டு.
Close to TTC, subway, & shopping.
குடும்பம் விரும்பத்தக்கது.

Call: (416) 821-2181

## விசேட வாழைஇலைச் சாப்பாடு. ஓடர் செய்து பெற்றுச் செல்லுங்கள்

ஸ்காபுறோவில்
மோர்னிங்சைட் - செப்பர்ட்
சந்திப்புக்கு அருகில்
வாழை இலைச்சாப்பாடு மற்றும் Lumprice ஆகியவற்றை ஓடர் செய்து பெற்றுச் செல்லுங்கள்.
வெள்ளிக்கிழமைகளில்
வாழை இலையில் 6 மரக்கறிகளுடன் சாப்பாடு - $6.50.
சனிக்கிழமைகளில் மட்டன், சிக்கன் Lumprice - $14.00 மட்டுமே.

Call: (416) 832-6345

## பராமரிப்பாளர் தேவை

ஸ்காபுறோவில்
Stouffville பகுதியில் 70 வயதான மூதாட்டி ஒருவரை பராமரிக்க பெண் பராமரிப்பாளர் தேவை.

ஊதியம் வேலை நேரம் பற்றி பேசி தீர்மானிக்கலாம்.

RAJI:
(416) 558-4998




உதயன் கதிரோட்டம்

# மீண்டும் ஒரு தடவை தனது மதவெறியை நிருபித்துக் காட்டிய நரேந்திர மோடி

பொருளாதார வல்லுனர்களால் மிகுந்த அவதானிப்போடு தயாரிக்கப்பெற்ற பல வகையான புள்ளி விபரங்களின் படி இந்தியா என்னும் இந்துத்துவ தேசத்தில் பிரிவினைகள் அதிகரிப்பதாகக் கூறப்படுகின்றது. இந்து மதத்திற்கு முக்கியத்துவம் வழங்கப்படுவதை ஐம்பது வீதத்திற்கும் அதிகமான இந்திய இந்துக்களே விரும்பவில்லை என்றும் கணிப்புக்களின் ஆதாரத்தோடும் தெரிவிக்கப்படுகின்றது. பாபர் மசூதி தகர்க்கப்பட்டதற்கு, இந்தியாவில் வாழும் இஸ்லாமியர்கள் மாத்திரம் அதிர்ச்சியடையவில்லை. இந்துக்களும் தான் கலங்கினார்கள்.

இந்தியப் பொருளாதாரம் சரிந்து செல்கின்றது என்று மேற்படி பொருளாதார வல்லுனர்கள் அடித்துக் கூறுகின்றார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கின்றது. வங்கிகள் மற்றும் விமான சேவை நிறுவனங்கள் நஸ்டம் காரணமாக 'கதவுகளை' நிரந்தரமாக மூடுவதற்கு தயாராக உள்ளதாகவும் அறிக்கைகள் மூலமாக அறிவிப்புக்கள் வெளியாகிய வண்ணம் உள்ளன. ஏழைகள் வறுமை காரணமாக உயிர்களை துறக்கின்றார்கள். விவசாயிகள் பல்வேறு இயற்கை அழிவுகளாலும், அரசாங்கத்தின் புதிய 'வேளாண்' சட்டங்களாலும், தங்கள் இருப்பு தகர்க்கப்பட்டுவிடும் என்று அஞ்சி வீதிக்கு வந்து போராடத் தொடங்கியுள்ளார்கள்

இவ்வாறு பல நெருக்கடிகள் இந்தியாவை நோக்கி மெதுவாக நகர்ந்து கொண்டிருக்கையில், இந்தியாவின் புதிய பாராளுமன்றக் கட்டடத்திற்கு நேற்று அடிக்கல் நாட்டியுள்ளார் அந்நாட்டின் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள்.

அடிக்கல் நாட்டு விழாவிற்குப் பின்னர் உரையாற்றிய பிரதமர் மோடி, "புதிய நாடாளுமன்ற கட்டிடத்திற்கு அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளதால் இன்று ஒரு வரலாற்று நாள். நாடாளுமன்றத்தின் இந்த புதிய கட்டிடத்தை இந்திய மக்கள் அனைவரும் இணைந்து கட்டுவோம், இந்திய ஜனநாயக வரலாற்றில் இது முக்கியமான நாள், புதிய இந்தியாவின் புதிய அடையாளம்தான் இந்த நாடாளுமன்ற கட்டிடம்,," என்றெல்லாம் பொய்யான புகழுரைகளை எடுத்து விளாசினார். தொடர்ந்தும் அவர் வார்த்தைகளை அழகாக அடுக்கி மக்களையும் மந்திரிகளையும் ஈர்ப்பதற்காக இன்னும் பேசிக்கொண்டே போனார்

"நாடாளுமன்றம் கற்களாலும், தூண்களாலும் கட்டப்படுவதில்லை. அது ஜனநாயகத்தை உருவகப்படுத்துகிறது. அரசியல் பொருளாதார, சமூக சமத்துவத்தை உணர்த்துகிறது., குழுவாக இணைந்து பணியாற்றுபவர்களுக்கான அடையாளம் இந்த புதிய பாராளுமன்றக் கட்டடம் என்றார் பிரதமர்

ஆனால் இந்த உயர்ந்த மதிப்புகளை எல்லாம் மிதித்து நசுக்கிவிட்டுக் உணவு வழங்கும் விவசாயிகள் தங்கள் உரிமைகளுக்காகக் கடந்த 16 நாட்களாகச் சாலையில் போராடி வருகிறார்களே, அவர்களை பிரதமர் மோடி திரும்பிப் பார்க்கவில்லை. அமைச்சர்களை அனுப்பி பேச்சுக்களை நடத்தி, 'சமாளித்து' அனுப்பும்படி பணித்துள்ளாராம். மறுபக்கத்தில் இராணுவத்தையும் பொலிசையும் அனுப்பி அந்த உழைக்கும் விவசாயிகளை உதைத்து தள்ளுகின்றார் பிரதமர் மோடி.

ஆனால், பொதுநலத்துடன் மக்களுக்குச் சேவையாற்றுவதுதான் ஜனாநாயகத்தின் முதற்படி என்பதையும் மறந்து மோடி மக்களின் பணத்தை வீணடிக்கின்றார் என்று எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டுகின்றார்கள்.

மறுபுறத்தில் தனது அமைச்சர்களை ஏவி விட்டு "விவசாயிகளின் போராட்டத்திற்குப் பின்னால் பாகிஸ்தானும் சீனாவும் உள்ளன என்று போருக்கான அறைகூவலை கபடத்தனமாக எழுப்புகின்றார். போர் ஒன்று மூண்டால் மோடியின் உயிரா போகப்போகின்றது. ஏழைச் சிப்பாய்கள் போர்க்களத்தில் மடிய அவர்கள் குடும்பத்தினரே அனாதைகளாவார்கள்.

அதற்கு மேலாக, 'நேற்று நடைபெற்ற 'அடிக்கல்' நாட்டு விழாவில் இந்து மத குருமார்களை மாத்திரம் அழைத்து மந்திரங்கள் ஓதி தன்னை ஒரு இந்துத்துவத்தின் தலைவனாகவும், இந்தியாவை இந்து வலலரசாகவும் காட்டி, அந்நாட்டில் வாழும் எத்தனையோ இலட்ச இஸ்லாமியர்களையும், கிறிஸ்த்தவர்களையும் புறக்கணித்துள்ளதோடு, தனது மதவெறியையும் மீண்டும் ஒரு தடவை நிரூபித்தும் காட்டியுள்ளார் மோடி. இலங்கையில் கூட அரச வைபவங்களுக்கு பௌத்த பீடங்களின் தலைவர்களோடு, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்த்தவ மதத் தலைவர்களையும் அழைத்து பிரார்த்தனை செய்யவதற்கு வாய்ப்புக்களை வழங்குகின்றார்கள் என்பதையும் நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

# எமது உதயன் 24வது ஆண்டு விழாவில் ஜகக்குரு பகவான் ஸ்ரீ செ நித்தியானந்த பரமசிவம் அவர்கள் வாழ்த்துக்களையும் ஆசியையும் வழங்கி உரையாற்றினார்



கடந்த 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று கனடாவிலிருந்து இணையவழி ஊடாக நடத்தப்பெற்ற எமது உதயன் பத்திரிகையின் 24வது ஆண்டு நிறைவு விழாவில் உலகெங்கிலும் இருந்து பல அறிஞர்கள் மற்றும் கவிஞர்கள் கலந்து கொண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள். அத்துடன் பல வாசகப் பெருமக்களும் கலந்து கொண்டு தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

அவர்களோடு எம்மோடு இணையவழி ஊடாக இணைந்து வாழ்த்துக்களையும் ஆசியையும் வழங்கி ஜகக்குரு பகவான் ஸ்ரீ செ நித்தியானந்த பரமசிவம் அவர்கள் உரையாற்றினார். அவரது உரையில் "சைவ சமயத்தையும், தமிழ் மொழியையும் காப்பாற்ற நான் எனது உயிரைக் கொடுத்தேனும் உழைப்பேன். பாதுகாப்பேன். குனடா உதயன் பத்திரிகையின் சேவையை நான் நாலா பக்கங்களிலிருந்தும் தெரிந்து கொண்டே இந்த நிகழ்ச்சியில் பங்கெடுக்கின்றேன்.' என்று முகத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்தார்.

மேற்படி இணையவழி ஆண்டு விழாவிற்கு கனடாவில் வதியும் முன்னாள் அதிபர் தங்கராசா சிவபாலு அவர்கள் தலைமை தாங்க, உரைகளையும் கவிதைகளையும், திருவாளர்கள், போராசிரியர் சங்கரநாராயணன் (தமிழ்நாடு) , வினாசித்தம்பி துரைராஜா (கனடா), பொ. ஐங்கரநேசன் (யாழ்ப்பாணம்), சஞ்சிகை ஆசிரியர் தி. ஞானசேகரன் (இலங்கை) வா.மு.சே.திருவள்ளுவர்(தமிழ்நாடு) பேராசிரியை சுப செல்வி (தமிழ்நாடு) கவிஞர் அகணி (கனடா) சிந்தனைப் பூக்கள் பத்மநாதன்(கனடா) கவிஞர் திருமலை ரூபன்( இலங்கை) சட்டத்தரணி ஜேசுதாசன் (கனடா), எழுத்தாளர் நக்கீரன்(மலேசியா) ஆகியோர் தந்தனர். உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் பதிலுரை வழங்கினார். அருண் கதாகரன் நன்றியுரை வழங்கினார். இனிதான பாடல் நிகழ்ச்சிகளும் அடங்கியிருந்தன.

# கனடா TORONTO VOICE OF HUMANITY மனித நேய அமைப்பின் சார்பில் யாழ்ப்பாணத்தில் பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசப் கொப்பிகள் வழங்க ஏற்பாடு

Toronto Voice Of Humanity

கனடாவின் TORONTO VOICE OF HUMANITY மனித நேய அமைப்பின் சார்பில் யாழ்ப்பாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்க 6 இலட்சம் ரூபாய்கள் அனுப்பிவைக்கப்பட்டன. முன்னாள் வடக்கு மாகாண விவசாய அமைச்சரும், தமிழர் பசுமை இயக்கத்தின் தலைவரும் எழுத்தாளருமான பொ. ஐங்கரநேசன் அவர்களின் வேண்டுகோளிற்கு இணங்க கனடாவில் இயங்கும் 'ரொரன்ரோ கைலாச நித்தியானந்த தியானக் கல்வி நிலையம்' மற்றும் பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு அம்மையார், திருவாளர்கள் சங்கர் நல்லதம்பி, ஆர். லோகேந்திரலிங்கம் ஆகியோரின் பங்களிப்புக்கள் அடங்கிய இந்த 6 இலட்சம் ரூபாய்கள் மூலம் யாழ்ப்பாணத்திலுள்ள சுமார் 1500 மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்படவுள்ளதாக திரு பொ. ஐங்கரநேசன், TORONTO VOICE OF HUMANITY அமைப்பின் நிர்வாகிகளுக்கு அறிவித்துள்ளார்.



இலங்கை செய்திகள்

# பாலமுனையில் கத்திக் குத்துச் சம்பவத்தில் மரணமடைந்த இஸ்லாமிய பொலிஸ் உத்தியோகத்தர்

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் உள்ள அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, பாலமுனைப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற கத்திக் குத்துச் சம்பவத்தில், குடும்பஸ்தரான பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

தாஹீர் தஸ்பீக் (33) எனும் 3 பிள்ளைகளின் தந்தையான பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு கத்திக்குத்தக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். பாலமுனையைச் சேர்ந்த இவர், ஒலுவிலில் திருமணம் முடித்துள்ள அதேவேளை காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்துள்ளார்.

சம்பவ தினமான நேற்று முன்தினம் புதன்கிழமை பாலமுனையிலுள்ள தனது மூத்த சகோதரரரின் வீட்டுக்கு சென்றபோது, அங்கு தனது சகோதர-ரின் குடும்பத்திற்கும் சகோதரி ஒருவரின் குடும்பத்திற்கும் இடையில் தகராறு நடைபெறுவதை அவதானித்த இவர், சமாதானம் செய்ய முயற்சித்துள்ளார். இந்த சந்தர்ப்பத்தில் அங்கு இடம்பெற்ற வாக்குவாதம் முற்றியதையடுத்து, உறவினர் ஒருவரின் கத்திக் குத்துக்கு இலக்கான அவர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும்போது உயிரிழந்துள்ளார்.

மிக நீண்டகாலமாக இருந்துவந்த குடும்ப பகையின் பின்னணியிலேயே இக்கொலைச்சம்பவம் நடைபெற்றிருக்கலாமென ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வருகிறது.

இதேவேளை, இச்சம்பவத்தில் கொலை செய்யப்பட்டவரின் சகே-ாதரர் மற்றும் அவரது மகன் ஆகிய இருவரும் கத்தி குத்துக்கு இலக்காகி, அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ-ார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பில் 21 வயதான இளைஞர் ஒருவரை அக்கரைப்பற்று பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தொடர்ந்து சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு இன்று (10) நேரடியாகச் சென்ற அக்கரைப்பற்று மாவட்ட/நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம். ஹம்ஸ-ா சம்பவ இடத்தை பார்வையிட்டதோடு, இது தொடர்பாக பிரேத பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பணித்துள்ளார்.

நீதவானுடன் சட்ட வைத்தியதிகாரி எஸ்.எம். றிபாஸ்தீன், அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோரும் சமூகமளித்திருந்தனர். அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள மரணித்தவரின் சடலத்தையும் நீதிபதி பார்வையிட்டதுடன் மெலதிக விசாரணைக்குப் பணித்துள்ளார். கைது செய்யப்பட்ட குறித்த சந்தேகநபரை, அக்கரைப்பற்று நீதவான் ஹம்சா முன்னிலையில் ஆஜர்படுத்திய போது, அவரை எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# இலங்கையில் தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு உறுப்பினர்கள் பதவியேற்றனர்



இலங்கையில் மிகுந்த அத்தியாவசிய அரச நிறுவனம் என்று கருதப்படும் இலங்கைக்கான தேர்தல்கள் ஆணைக்குழுவின் புதிய உறுப்பினர்கள் தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டனர். இந்நிகழ்வு நேற்று வியாழக்கிழமை முற்பகல் தேர்தல்கள் ராஜகிரியிலுள்ள ஆணைக்குழுவின் அலுவலகத்தில் தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வில் ஓய்வு பெற்ற ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய உள்ளிட்டோர் பங்குபற்றியிருந்தனர்என்பது குறிப்பிடத்தக்கது. தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்ட உறுப்பினர்கள் பெயர்கள் பின்வருமாறு: தேர்தல்கள் ஆணைக்குழு நிமல் ஜீ புஞ்சிஹேவா - தலைவர் எம். எம். மொஹம்மட் எஸ்.பி. திவாரத்ன கே.பி.பி. பத்திரண ஜீவன் தியாகராஜா ஆகியோர். இதேவேளை, தேசி-ய பொலிஸ் ஆணைக்குழுவின் உறுப்பினர்களும் நேற்று வியாழக்கிழமை முற்பகல் தமது கடமையினை பொறுப்பேற்றுக் கொண்டனர். இந்நிகழ்வு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்திலுள்ள அதன் அலுவலகத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. தேசிய பொலிஸ் ஆணைக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு: சந்திரா பெனாண்டோ - தலைவர் லியனகம ஏ.எஸ். பீ.எஸ். பிரியந்த சஞ்சீவ என்.எஸ்.எம். சம்சுதீன் குணபால விக்ரமகே பிரேமசிறி பெரேரா டீ.பீ. பரமேஸ்வரன்ஆகியோர்.

# எமது விடுதலைக்காக ஒன்றுபடுங்கள் என தமிழ் அரசியல் கைதிகள் வேண்டுகோள்!



தங்களது விடுதலைக்கு ஒன்றிணைந்து செயற்படுமாறு அனைத்து தரப்பினருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். "நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடி நிலைமையினையடுத்து, ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய அரசாங்கம் சில நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக அறிய முடிகிறது.

அந்தவகையில் சுமார் எட்டாயிரம் கைதிகளை விடுவிப்பதற்கும் மரண தண்டனை மற்றும் ஆயுள்தண்டனைக் கைதிகளின் தண்டனைக் காலத்தை வரையறுப்பதற்குமான முன்னாயத்தங்களை மேற்கொண்டிருப்பதாக சிறைத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். இந்நிலையில், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சில சிறுபான்மை நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் அரசியல் கைதிகள் விடயம் தொடர்பாக கரிசனை காட்டத் தொடங்கி இருக்கின்றார்கள்.

அதற்குச் சாதகமான இந்த சந்தர்ப்பத்தில் அனைத்து சிறுபான்மைத் தரப்பினரும் இனம், மதம், கட்சி, அரசியல், பிரதேச வேறுபாடுகளை ஒருபுறம் வைத்துவிட்டு மனித நேயத்திற்கு மதிப்பளித்து கொள்கையளவில் ஒன்றுபட்டு, எமது விடுதலைக்கு வழி சமையுங்கள். இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக சிறையே வாழ்க்கை எனச் சீரழிந்து கொண்டிருக்கும் அரசியல் கைதிகளாகிய நாம் உயிரை மட்டுமே கையில் பிடித்துக்கொண்டு நிகழ் காலத்தை நகர்த்துகிறோம்.

நாட்டில் தேர்தல்கள் வருகின்ற போதும், ஆட்சியதிகாரங்கள் மாறுகின்றபோதும் எங்களது சிறைவாழ்வுக்கு விடிவு பிறக்குமென கண்ட கனவுகள் எல்லாம் கானல் நீராகிப் போயின. விடுதலையை வலியுறுத்தி நாம் உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டபோதெல்லாம் திறந்த வாக்குறுதிகளும், தீராத நோய்களுமே எமக்கு மிஞ்சிப் போயின. இதுவரை தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டு எம்மோடு சிறையிருந்த பத்திற்கும் மேற்பட்ட அரசியல் கைதிகள் சிறைக்குள்ளேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளார்கள். அதுதவிர, சிறை வன்முறைகளின்போது நூற்றுக்கணக்கான தமிழ் அரசியல் கைதிகள் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

தற்போது உயிர்க் கொல்லித் தொற்று நோயான கொவிட்-19 சிறைக் கொத்தணியாக மாறி ஆயிரக்கணக்கான கைதிகளை அச்சுறுத்துவதுடன், சில உயிர்களையும் பலிகொண்டிருக்கின்றது. எமது குடும்ப உறவுகள் உழைக்கும் கைகளை இழந்து நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள். எமது பிள்ளைகள் தந்தையரின் பாசத்திற்காக ஏங்கித் தவிக்கின்றார்கள். வயதான பெற்றோர் தமது இறுதிக்காலத்திலாவது "என் பிள்ளை கொள்ளியிட உயி-ரோடு வருவானா?" என கண்ணீரோடு காத்திருக்கிறார்கள். எனவே, சந்தர்ப்பச் சூழ்நிலைகளின் காரணிகளால் சிறை வைக்கப்பட்டுள்ள எமது விடுதலைக்கு வழிசமைக்க அனைவரும் முன்வாருங்கள். இன்று சிறைகளில் வாடுகின்ற நாம் சுகபோகமாக வாழத்தெரியாமல் சிக்குப்பட்டுப் போயிருப்பவர்கள் அல்ல. எமது சொந்த சுயநல இலாபத்திற்காகச் செயற்பட்டு சிறைவந்தவர்களுமல்ல என்பதைத் தயவுசெய்து சற்றுப் புரிந்து கொள்ளுங்கள்.

மூன்றரை கால யுத்தம் முடிவுறுத்தப்பட்டு, 12 ஆயிரம் முன்னாள் போராளிகள் விடுவிக்கப்பட்டு தசாப்தமொன்று கடந்துள்ள நிலையிலும்கூட, 20 வருடங்களாகச் சிறையிருக்கும் எமது விடுதலை வாசல் திறக்கப்படவில்லை என்பது பெருந்துக்கமல்லவா? எனவே, சர்வமதத் தலைவர்கள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் மனித உரிமை ஆர்வலர்கள் சமூக நல அமைப்புக்கள் என அனைத்துத் தரப்புக்களும் அரசியல் கைதிகளான எமது விடுதலை விடயத்தில் தத்தமது மனிதாபிமானத்தை வெளிப்படுத்த வேண்டும்.

அரசியலமைப்பின் பிரகாரம் சிறைக்கைதிகளின் விடயத்தில் தீரமானம் எடுக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடமே இருக்கின்றது. அந்தவகையில் "ஜனாதிபதி-யின் ஆலோசனைக்கமைய விடுதலை செய்யப்படுவோர்" பட்டியலுக்குள் தமிழ் அரசியல் கைதிகளையும் உள்வாங்குமாறு, அரசியல் அமைப்புக்களும் சிவி-ல் அமைப்புக்களும் தனித்தனியான கருணை மனுக்களை ஜனாதிபதியின் கவனத்திற்கு முன்வைக்க வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

இதன்மூலம், எமக்கும் சமூகத்துடன் இணைந்து வாழ ஒரு சந்தர்ப்பம் கிடைப்பதுடன் எம்மைப் பிரிந்து நித்தமும் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் எமது உறவுகளின் கண்ணீருக்கும் ஒரு முடிவு கிட்டும் என எதிர்பார்க்கிறோம்" என்று குறிப்பிட்டுள்ளனர்.

# கிழக்கில் 400 க்கு மேல் கொரோனா தொற்றாளர்கள்

கிழக்கு மாகாணத்தில் கொரோனாத்தொற்றுகளின் எண்ணிக்கை நான்கு சதத்தையும் தாண்டியது. இங்கு தொற்றானது நாளுக்குநாள் அதிகரித்துச் செல்கிறது. கிழக்கில் இதுவரை 441பேர் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்றுவருகின்றனர். அதேவேளை கல்முனைப்பிராந்தியத்தில் 290பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். அந்தப்பிராந்தியத்தில் புதிதாக உருவான அக்கரைப்பற்றுக் கொத்தணி மூலமாக இதுவரை 255பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவ் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம்.

கல்முனைப்பிராந்தியத்தில் புதிதாக அட்டாளைச்சேனையில் திடீர் அதிகரிப்பு காணப்பட்டுள்ளது. அங்கு இதுவரை 22பேர் தொற்றிலுள்ளனர். இவர்களில் மினுவாங்கொட கொத்தணி மற்றும் ஏனைய இடங்கள்மூலமாக 23பேரும் பேலியகொட கொத்தணி மூலமாக 418 பேரும் தொற்றுக்கிலக்காகியிருந்தனர். இறுதியாக அக்கரைப்பற்றில் 11பேரும் ஆலையடிவேம்பில் 3பேரும் உப்புவெளியில் மூவமாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இதுவரை கிழக்கில் பேலியகொட கொத்தணி மூலமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 95பேரும் கல்முனை பிராந்தியத்தில் 290பேரும் திருமலை மாவட்டத்தில் 18பேரும் அம்பாறைபிராந்தியத்தில் 15பேரும் தொற்றுக்கிலக்காகியுள்ளனர். கிழக்கில் தற்போதைய நிலைவரப்படி கல்முனைப்பிராந்தியம் 290தொற்றுக்களுடன் முன்னிலைவகிக்கிறது. அதிலும் புதிதாக உருவான அக்கரைப்பற்று கொத்தணி 255 அதிகூடுதலான தொற்றுக்களை கொண்டிருக்கிறது.

கிழக்கிலே அதிகூடிய தொற்றுள்ள தனியொருபிரதேசமாக அக்கரைப்பற்று மாறியுள்ளது. அக்கரைப்பற்றுக்கொத்தணிக்குள் அக்கரைப்பற்றில் மாத்திரம் 201பேருக்கு இதுவரை அதிகூடியதொற்று உறுதிசெய்யப்பட்டிருக்கின்றன. அடுத்ததாக வாழைச்சேனை கோறளைப்பற்று மத்திபிரிவில் அதிகூடிய தொற்றுக்கள் 60 இனங்காணப்பட்டிருந்தன. அடுத்தபடியாக சாய்ந்தமருதில 14பேரும் ஆலையடிவேம்பில் 11பேரும் இறக்காமத்தில் 11பேரும் ஏறாவூரில் 10பேரும் இனங்காணப்பட்டிருந்தனர்.

- சிகிச்சை நிலையங்களில் 1402 அனுமதி

கிழக்கிலுள்ள ஐந்து கொரோனா சிகிச்சை நிலையங்களில் தற்போது 323கொரோனாத் தொற்றாளர்கள் சிகிச்சை பெற்றுவருகின்றனர். நேற்று (08.12.2020) நண்பகல் வரை 1402பேர் மேற்படி 5 வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு அவர்களில் 1072பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 07பேர் இடமாற்றப்பட்டுள்ளனர். இன்னும் 140கட்டில்கள் எஞ்சியுள்ளன.

காத்தான்குடி சிகிச்சை நிலையத்தில் நேற்றுவரை 513பேர் அனுமதிக்கப்பட்டு 440பேர் குணமடைந்து வெளியேறியதால் தற்போது 69பேர் தங்கியிருந்து சிகிச்சைபெற்று வருகின்றனர். நால்வர் இடமாற்றப்பட்டிருந்தனர். இன்னும் 51கட்டில்கள் எஞ்சியுள்ளது.

மேலும் கரடியனாறு சிகிச்சை நிலையத்தில் 26 பேரும் பதியத்தலாவ சிகிச்சை நிலையத்தில் 68பேரும் பாலமுனை சிகிச்சை நிலையத்தில் 83 பேரும் சிகிச்சை பெற்றுவருகின்றனர். 17583பேருக்கு பிசிஆர் பரிசோதனை இதுவரை கிழக்கில் 17583பேருக்கு பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவற்றுள் அக்கரைப்பற்று கொத்தணிப்பகுதியில் மட்டும் 6014 பிசிஆர் அன்ரிஜன்ற் சோதனை நடாத்தப்பட்டது.

கல்முனைப்பிராந்தியத்தில் 7881 சோதனைகளும் மட்டக்களப்பில் 6300 சோதனைகளும் அம்பாறையில் 1878சோதனைகளும் திருகோணமலையில் 1524சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# உலக நாடுகளும் ஆவலுடன் எதிர்பாத்திருக்கும் தடுப்பூசிகளை கொண்டு செல்ல விமான நிறுவனங்கள் "தயார்"

உலக நாடுகளும் உலகெங்கும் வாழும் மக்களும் மிகுந்த ஆவலுடன் எதிர்பாத்து காத்திருக்கும் தடுப்பூசி மருந்துகளின் எண்ணிக்கை த எவ்வளவு இருந்தாலும் பிரச்சினை இல்லை அவற்றைச் சரியாகக் கொண்டு சேர்க்கும் வசதிகள் தங்களிடம் உள்ளதாகச் சரக்குகளை கொண்டு சேர்க்கும் விமான நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. அமெரிக்கச் சரக்கு விமான நிறுவனங்களான பெடெக்ஸ் கோர்ப், யுனைடட் பார்சல் சேர்விஸ் ஆகியவை அந்தத் தகவலை உறுதிப்படுத்தியுள்ளன.

தற்போது கொவிட்-19 நோய்த் தொற்றுக்கு எதிரான தடுப்பூசித் தயாரிப்பு இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. அதனால் வரும் நாட்களில் உலக அளவில் தடுப்பூசிகள் பல நகரங்களுக்கு அனுப்பப்படலாம். அவற்றைக் கொண்டு செல்லும் சரக்கு விமானங்களுக்கும் மற்ற போக்குவரத்து வசதிகளுக்கும் பெரிய சவால்கள் காத்திருக்கின்றன. அமெரிக்காவுக்கு மட்டும் சுமார் 65,000 தொன் அளவுக்குத் தடுப்பூசிகள் விமானம் மூலம் விநியோகிக்கப்படலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

# பிரிட்டனில் 90 வயது மூதாட்டிக்கு முதல் தடுப்பூசி

இங்கிலாந்தில் 90 வயதுள்ள மூதாட்டிக்கு கொரோனா தடுப்பூசி முதலில் செலுத்தப்பட்டது. தடுப்பு மருந்து சோதனையில் 40க்கும் மேற்பட்ட உலக நிறுவனங்கள் மூன்றாம் கட்ட சோதனை நிகழ்த்திவரும் இந்த நிலையில் பைசர் - பயோன்டெக் நிறுவனங்கள் இணைந்து தயாரித்த கொரோனா தடுப்பு மருந்து பெரும்பாலான நோயாளிகளை குணப்படுத்துவதாக விஞ்ஞானிகள் உறுதி அளித்தனர்.

இந்த தடுப்பூசி 95 சதவீதம் பலனளிப்பதாகவும் அந்நிறுவனம் தெரிவித்தது. மேலும் பிரிட்டன் அரசு பைசர் தடுப்பூசிக்கு அவசரகால அனுமதியும் அளித்தது. அதன்படி இங்கிலாந்தில் இன்று (டிச.08) முதல் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

பரிசோதனைகள் தவிர்த்து மக்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ள கொரோனா தடுப்பூசி உலகிலேயே முதல்நபராக 90 வயது மூதாட்டியான மார்க்ரெட் கீனென் என்பவருக்கு போடப்பட்டுள்ளது. இதன் மூலம் அதிகாரப்பூர்வமாக கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்ட உலகின் முதல் நபர் என்ற பெருமையை மார்க்ரெட் கீனென் பெற்றுள்ளார்.

இங்கிலாந்து நேரப்படி சரியாக காலை 6.31 மணிக்கு மார்க்ரெட்டுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டது. தற்போது முதல் டோஸ் செலுத்தப்பட்டுள்ளது. தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் 21 நாட்களுக்கு பின்னர் செலுத்தப்பட உள்ளது. அடுத்த வாரம் தனது 91வது பிறந்தநாளை கொண்டாட உள்ள தனக்கு இது சிறந்த பிறந்தநாள் பரிசு என கீனென் கூறியுள்ளார்.

# ஞாயிறு தாக்குதல் - மைத்திரிபால சிறிசேன விற்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு

ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கிறிஸ்தவ பொது அமைப்பு ஒன்றின் சார்பில் கரையோர பொலிஸ் நிலையத்தில் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குற்ற விசாரணை திணைக்களத்தில் முறைப்பாடு செய்யமுயற்சித்தபோதும்அதுபலனளிக்கவில்லை என தெரிவித்துள்ள கிறிஸ்தவ அமைப்பு அதனால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததாக குறிப்பிட்டுள்ளது.

# கினிகத்தேனை பிளக்வோட்டர் தோட்டம் இராணுவ பாதுகாப்புக்கு மத்தியில் முடக்கப்பட்டது

நுவரெலியா மாவட்டத்துக்குட்பட்ட கினிகத்தேன பிளக்வோட்டர் தோட்டத்தில் மேலும் 19 பேருக்கு கொரோனாவைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் அப்பகுதி முழுமையாக முடக்கப்பட்டுள்ளது. தோட்டத்தில் இருந்து எவரும் வெளியேறுவதற்கும் அத்தோட்டத்தின் கீழ் மற்றும் மேல்பிரிவுகளுக்கு வெளியார்வருவதற்கும் தடைவி திக்கப்பட்டுள்ளது. பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுவருகின்றனர்.

கொரோனா வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கும் சுகாதார அதிகாரிகள் மறுஅறிவித்தல் விடுக்கப்படும்வரை தனிமைப்படுத்தல் நடைமுறைகள் தொடரும் எனவும் கூறினர். பிசிஆர் பரிசோதனையில் ஐவருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ள நிலையில் மேலும் 600 பேரிடம் பிசிஆர் பரிசோதனைக்கான மாதிரிகளை பெறும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது. ஹட்டன் அம்பகமுவ பொது சுகாதார காரியாலயத்துக்குட்பட்ட பகுதியில் நேற்று மாத்திரம் 25 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

TRADITIONAL CHINESE
ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்பந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

MONEY PROBLEMS?™

ஓர் சிறிய தொகையை மாதாந்தம் செலுத்துவதன் மூலம் உங்கள் கடனில் இருந்து விடுதலை பெறலாம்



உங்களைக் கேளுங்கள்?

- நீங்கள் எப்பொழுதும் உங்கள் வங்கி தருகின்ற OVER DRAFT ஐ உபயோகிக்கின்றீர்களா?
- கடன் கொடுத்தவர்களால் உங்கள் வீட்டிற்கு அல்லது வேலைத்தளத்திற்கு தொலைபேசி அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு செய்வதுண்டா?
- வாடகை, மோட்கேஜ், வாகனங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் சிரமப்படுகின்றீர்களா?
- நிதிப்பிரச்சனை உங்கள் திருமணத்தையோ அல்லது உடல் நலத்தையோ பாதிக்கின்றதா?
- CREDIT RATING உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கின்றதா?
- உங்கள் கார், வீடு, RRSP, பங்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்துவிடுவோம் என அஞ்சுகின்றீர்களா?
- உங்களுக்கு எதிராக நீதிமன்ற கட்டளைகள் உண்டா?
- உங்களுக்கு CRA உடன் தனிப்பட்ட வருமானவரிகள் அல்லது வேறு வரிகளினால் பிரச்சனைகள் உண்டா?

gta™ credit

மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான உங்கள் பதில் "ஆம்" என்று இருந்தால் நீங்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தனிப்பட்ட பிரத்தியேக சந்திப்பொன்றை மேற்கொள்ள வேண்டும். உங்கள் சந்திப்பு எமது அலுவலகத்தில் உள்ள அரச அங்கீகாரம் பெற்ற ஆலோசகர் ஒருவரோடு இடம்பெறும்

Scarborough / Downtown Toronto: 416-489-2000
Mississauga / Brampton: 416-650-5400





| Scarborough | Toronto/Downtown | North York | Mississauga | Brampton |
|---|---|---|---|---|
| 201-4433 Sheppard Ave. E | 800-120 Eglinton Ave. E | 306-1280 Finch Ave. W | 110-93 Dundas Street E. | 201-7990 Kennedy Rd. South, |
| Scarborough, ON, M1S 1V3 | Toronto, ON, M4P 1E2 | North York, ON, M3J 3K6 | Mississauga, ON, L5A 1W7 | Brampton, Ontario, L6W 0B3 |

Mark Shamly
Tamil Consultant

Proudly Served over 15,000 clients since 2004
Visit : GtaCredit.Com

Ajay Oberoi
Experienced
Credit Counsellor

# மஹர துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டவர்களின் உடல்களை எரிக்கத் தடை

**சிவா பரமேஸ்வரன் - மூத்த செய்தியாளர்**

மஹர சிறைச்சாலையில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த 11 கைதிகளின் உடல்களை தகனம் செய்ய அரசாங்கம் மேற்கொண்ட முயற்சி நீதிமன்ற உத்தரவால் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதால் அவர்களின் உடல்கள் தகனம் செய்யப்பட வேண்டுமென சட்டமா அதிபர் திணைக்களம் அளித்த அறிக்கையை வெலிசர நீதவான நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

கொலை செய்யப்பட்ட 11 கைதிகளின் உடல்கள் தொடர்பிலான




தடயவியல் மற்றும் பிரேத பரிசோதனை முடிவடையும் வரை சடலங்களை எதுவும் செய்யக்கூடாது என மனித உரிமைகள் ஆணைக்குழு இதற்கு முன்னதாக பரிந்துரைத்திருந்தது.

பிரேத பரிசோதனை அறிக்கை கிடைக்கப்பெறும் வரை சடலங்களை அடக்கம் செய்வது அல்லது தகனம் செய்வது குறித்து தீர்மானிக்க முடியாது என அறிவித்துள்ள நீதவான் புத்த ஸ்ரீ ராகலா, இதுத் தொடர்பிலான அறிக்கையை உடனடியாக சமர்பிக்குமாறு, மஹர சம்பவம் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஐந்து உறுப்பினர்கள் கொண்ட குழுவிற்கு அறிவித்துள்ளார்.

துப்பாக்கிச் சூட்டை நடத்தியது யார்?

சிறை ஊழியர் ஒருவரின் உதவியுடன் உயிர் பிழைத்த கைதியை மேற்கோள்காட்டி செய்தி வெளியிட்டுள்ள, இலங்கை ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள் அமைப்பு, சிறை அதிகாரிகளாலேயே அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாக தெரிவித்துள்ளது.

"சிறைச்சாலை அதிகாரிகளே எம்மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். துப்பாக்கிச் சூட்டுக்கு முன்னர், கைதிகளின் கைகால்கள் உடையும் வகையில் தாக்கப்பட்டனர். பின்னர் கைதிகள் கிளர்ந்தெழுந்தபோது சுடப்பட்டனர். உயிர் தப்பியவர்களும் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஏனைய கைதிகள் யாரும் சிறைக்கூடங்களில் இருந்து வெளியே வரவில்லை. அவ்வாறு அவர்கள் வந்ததாகக் கூறுவது பொய்" என இலங்கை ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள் அமைப்பின் ஊடகவியலாளர் கித்சிறி விஜேசிங்கவிடம் கைதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கொல்லப்பட்ட கைதிகளின் உடல்களை பிரேத பரிசோதனை செய்யாமல் எரியூட்டுவதற்கு தடை உத்தரவைக் கோரி, உயிரிழந்த கைதிகளின் உரிமைகளுக்காக நீதிமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் தொடர்ந்து போராடிவரும் சிறைக்கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் சட்டத்தரணி சேனக பெரேரா, வெலிசர நீதவான் நீதிமன்றத்தில் டிசம்பர் 4ஆம் திகதி மனுத்தாக்கல் செய்திருந்தார்.

உறவினர்கள் சார்பாக ஒரு சட்ட வைத்திய அதிகாரி



பிரேத பரிசோதனை இடம்பெற்ற வேளையில், வேதனை அடைந்த தரப்பு சார்பாக, சட்ட வைத்திய அதிகாரி ஒருவரை பிரதிநிதித்துவப்படுத்த விடுத்த வேண்டுகோளுக்கு பதிலளித்த நீதவான், சட்ட வைத்திய கல்லூரியின் உறுப்பினரான வைத்தியர் ஜீன் பெரேராவை நியமித்துள்ளதாக சட்டத்தரணி சேனக பெரேரா ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

11 பேர் உயிரிழந்த மஹர சிறைச்சாலையில் இடம்பெற்ற படுகொலைதுப்பாக்கிச் சூட்டால் இடம்பெற்றது என குற்றப் புலனாய்வு பிரிவின் அறிக்கைகளை மேற்கோள்காட்டி சட்டமா அதிபர் திணைக்களம் முதன் முறையாக நேற்று அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

கைதிகளின் பிரேத பரிசோதனைகளை, மூன்று சிரேஷ்ட தடயவியல் நோயியல் நிபுணர்கள் அரச இராசாயன பகுப்பாய்வு திணைக்களத்தின் துப்பாக்கி நிபுணர் குழுவினால் மேற்கொள்ள அனுமதிக்க வேண்டுமென கடந்த 8 மற்றும் 9ஆம் திகதிகளில், சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான அரச சட்டத்தரணி, நிஷாரா ஜயரத்ன நீதவானிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுவரை நான்கு உடல்கள் தொடர்பில் பிரேத பரிசோதனை நடத்தப்பட்டுள்ள போதிலும், அனைத்து உடல்கள் மீதான பிரேத பரிசோதனைகளை விசேட நிபுணர்கள் முன்னிலையில் மீண்டும் நடத்துமாறு சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றத்தை கோரியுள்ளார்.



இறந்த கைதிகளின் உடல்கள் கொரோனா நோயால் பாதிக்கப்பட்டுள்ளதால் ராகம வைத்தியசாலையில் இருந்து அவற்றை, தேசிய் தொற்று நோயியல் வைத்திசாலைக்கு கொண்டு செல்ல வேண்டிய அவசியம் காணப்படுவதாகவும் அவர் நீதிமன்றத்திற்கு தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலை கட்டிடத்திற்கு பல்லாயிரக்கணக்கான ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதால், மேலதிக விசாரணைகளுக்காக சொத்து சேதங்கள் குறித்து அரசின் தலைமை மதிப்பீட்டாளரின் அறிக்கையைப் பெற சிறைச்சாலையில் ஆய்வினை மேற்கொள்ள அனுமதி கோரிய அரச தரப்பு சிரேஷ்ட சட்டத்தரணிக்கு நீதவான் அனுமதி வழங்கியுள்ளார்.

இந்த வழக்கு மீண்டும் 16 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.



# Health Canada எனப்படும் கனடிய மத்திய சுகாதார பணியகம் முதலாவது கோவிட்-19 தடுப்புமருந்தை அங்கீகரித்துள்ளது




கோவிட்-19 இற்கான முதல் தடுப்புமருந்துக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டதையடுத்துக் கோவ-ிட்-19 இற்கு எதிரான போராட்டத்தின் முக்கிய மைல்கல் ஒன்றைக் கனடா இன்று அடைந்தது. விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகியவற்றில் ஏற்பட்ட முன்னேற்றங்களும், முன்னொருபோதும் காணப்படாத உலகளாவிய ஒத்துழைப்பும், கனடாவின் பொதுச் சுகாதாரத்துறை அதிகாரிக-ளின் அர்ப்பணிப்புள்ள சேவையும் காரணமாக இந்த அங்கீகாரம் இன்று சாத்தியமாகியது.

Health Canada எனப்படும் கனடிய மத்திய சுகாதார பணியகத்திற்க்கு இவ்வாண்டு ஒக்ரோபர் 9 ஆந் திகதி ஃபைஸர் (Pfizer) அதன் தகவல்களை வழங்கியது. சான்றுகள் மீதான முழுமையானதும், சுதந்திரமானதுமான மீளாய்வின் பின்னர், Pfizer-BioNTech தடுப்பு மருந்து கனடாவில் பயன்படுத்தப்படுவதற்கான தமது திணைக்களத்தின் கடுமையான பாதுகாப்பு, செயற்திறன் மற்றும் தராதரம் தொடர்பான எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதாக Health Canada எனப்படும் கனடிய மத்திய சுக-ாதார பணியகம் முடிவு செய்துள்ளது. Pfizer தடுப்புமருந்தின் முதல் தொகுதி - 249,000 மருந்தளவுகள் - இந்த மாதத்தின் இறுதிக்கு முன்பாகக் கனடாவை வந்தடையுமெனக் கனேடியர்கள் எதிர்பார்க்கலாமெனப் பிரதம மந்திரி ஜஸ்ரின் ட்ரூடோ நேற்று அறிவித்தார்.



மீளாய்வு நடவடிக்கை மிகவும் கடுமையானதாக இருந்ததெனவும், உறுதியான கண்காணிப்புப் பொறிமுறைக-ளைக் கனேடிய அரசு கொண்டிருக்கிறதெனவும் கனேடியர்கள் நம்பிக்கை கொள்ளலாம். தடுப்புமருந்து பயன்பாட்டுக்கு வந்தவுடன் Health Canada எனப்படும் கனடிய மத்திய சுகாதார பணியகமும் கனேடிய பொதுச் சுகாதார முகாமையும் அது பாதுகாப்பானதாவெனக் கவனமாகக் கண்காணிப்பதுடன், பாதுகாப்புக் குறித்த கவலைகள் அடையாளம் காணப்பட்டால் நடவடிக்கை எடுக்கவும் தயங்கமாட்டா.




Pfizer-BioNTech தடுப்புமருந்து தொடர்ந்து பயனளிப்பதை அதன் பயன்பாட்டின் மூலம் செய்துகாட்டுவதற்குத் தடுப்புமருந்தின் பாதுகாப்பு, செயற்திறன் மற்றும் தராதரம் என்பன குறித்த தகவல்களை உற்பத்தியாளர் தொடர்ச்சியாக Health Canada எனப்படும் கனடிய மத்திய சுகாதார பணியகத்திற்க்கு வழங்கவேண்டுமென்ற நிபந்தனையின் அடிப்படையிலேயே இந்தத் தடுப்புமருந்துக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தடுப்புமருந்து 16 வயதானோருக்கும், அதற்கு மேற்பட்டோருக்கும் உரியதென ஆரம்பத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. Pfizer-BioNTech அனைத்து வயதான சிறுவர்களிலும் மேலதிக மருத்துவ ஆய்வுகளை மேற்கொள்வதால், ஆய்வுகளின் தரவுகளைப் பொறுத்துச் சிறுவர்களுக்கும் எதிர்காலத்தில் இந்தத் தடுப்பு மருந்து வழங்கப்படலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கோவிட்-19 இற்குப் பயன்படுத்துவதற்கான மருந்துகளின் இறக்குமதி, விற்பனை மற்றும் விளம்பரம் தொடர்பான Health Canada எனப்படும் கனடிய மத்திய சுகாதார பணியகத்தின் இடைக்கால உத்தரவுக்கு அமைவாக இந்தத் தடுப்புமருந்துக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை, மருந்துத் தயாரிப்பாளர் மருந்தைத் தயாரித்தபோது அந்தந்த நேரங்களில் வழங்கிய தகவல்களை அந்தந்த நேரத்திலேயே ஆராய்ந்து பார்ப்பதற்கு ஹெல்த் கனடாவுக்கு அனுமதியளித்தது. கனடாவின் உயர்ந்த தராதரங்களைப் பேணியே இது இடம்பெற்றது.

- 30 -

*மேலதிக தகவல்களுக்கும் ஊடகங்களின் கேள்விகளுக்கும்:*
*டொறீன் சவுந்தரநாயகம்*
*Gary.Anandasangaree.C1A@parl.gc.ca*

# தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதில் வறுமை நிலவும் நாடுகளை "நசுக்கும்" செல்வந்த நாடுகள்

உலகில் உள்ள செல்வந்த நாடுகள் பல, அதிக அளவில் கொரோனா தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதால் ஏழை நாடுகளில் உள்ள மக்களுக்குப் பற்றாக்குறை ஏற்படலாம் என "மக்களுக்கான தடுப்பு மருந்துக் கூட்டணி" அமைப்பு எச்சரித்துள்ளது.

வருமானம் குறைந்த சுமார் 70 வறிய நாடுகளில் வசிக்கும் மக்களில் 10 வீதத்தினர் மட்டுமே தடுப்புமருந்தைப் பெறும் வாய்ப்புக் கிட்டும் என்று கூட்டணி நம்புகிறது. இதனால் அந்த நாடுகளில் 10இல் 9 பேருக்கு அடுத்த ஆண்டில் தடுப்பு மருந்து கிடைக்க வாய்ப்பு இல்லாத சூழல் உள்ளது.

உலக மக்களுக்கு நியாயமான அளவில் தடுப்புமருந்து கிடைப்பதை உறுதிசெய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இருப்பினும் போதிய அளவில் தடுப்பு மருந்துகள் இல்லை என்று நிறுவனங்கள் குறிப்பிடுகின்றன.

மருந்தாக்க நிறுவனங்களுக்கு இடையே தொழில்நுட்பம் பகிரப்பட்டால் மேலும் தடுப்புமருந்துகளை உற்பத்தி செய்யலாம் என நம்பப்படுகிறது. கூட்டணி நடத்திய ஆய்வில், பணக்கார நாடுகள் தங்கள் மக்களுக்கு மூன்று முறை பயன்படுத்தத்தக்க தடுப்புமருந்துகளை வாங்கியிருப்பதாகத் தெரியவந்தது. உதாரணத்திற்கு கனடா தமது நாட்டு மக்களுக்கு ஐந்து தடவைகள் பயன்படுத்தும் அளவுக்கு தடுப்பு மருந்துகளை வாங்குவதற்கு முன்பதிவு செய்திருப்பதாக ஒக்ஸ்பேர்ம் அமைப்பு குறிப்பிட்டுள்ளது. உலக மக்கள் தொகையில் 14 வீதத்தினரை மட்டுமே கொண்டுள்ள பணக்கார நாடுகள், 53 வீதமான தடுப்பு மருந்தைப் பெற உறுதி செய்துள்ளன.

எனினும் ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ராசெனாகா மேம்படுத்தும் தடுப்பு மருந்தில் 64 வீதத்தை அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு வழங்க அது உறுதி அளித்துள்ளது. நியாயமான முறையில் தடுப்பு மருந்தை உலகெங்கும் பகிரும் நடவடிக்கைகளும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

"கோவெக்ஸ்" என்று அழைக்கப்படும் இந்தத் திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் கொண்ட 92 நாடுகளுக்கு 700 மில்லியன் டோஸ் அளவு தடுப்பு மருந்தை விநியோகிக்க சர்வதேச ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தாகியுள்ளது.

"தாம் வாழும் நாடு அல்லது தம்மிடம் இருக்கும் பணத்தின் அளவு காரணமாக உயிர்காக்கும் தடுப்பு மருந்து ஒன்றை பெறுவதில் இருந்து எவரும் தடுக்கப்படக்கூடாது" என்று ஒக்ஸ்பம் அமைப்பின் சுகாதாரக் கொள்கை முகாமையாளர் அன்னா மரியோட் தெரிவித்தார்.

"எனினும் அதிரடியாக மாற்றங்கள் செய்யப்படாத பட்சத்தில், உலகில் பில்லியன் கணக்கான மக்களுக்கு அடுத்துவரும் பல ஆண்டுகளுக்கு பாதுகாப்பான மற்றும் செயல்திறன் கொண்ட கொவிட்-19 மருந்து கிடைக்காமல் போய்விடும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தால் மேம்படுத்தப்படும் கொவிட் தடுப்பு மருந்தை இலாபநோக்கற்று அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு விநியோகிக்க அந்த நிறுவனம் உறுதி அளித்துள்ளது. ஏனைய மருந்துகளை விடவும் அந்த மருந்து மலிவானது என்பதோடு அதனை சேமிப்பதற்கு ஒரு குளிர்சாதனப் பொட்டியின் தட்பவெப்பநிலை போதுமானதாக இருப்பதால் உலகெங்கும் இலகுவாக விநியோகிக்க முடியும்.

எனினும் ஒரு நிறுவனத்தால் மாத்திரம் முழு உலகுக்கும் போதுமான தடுப்பு மருந்துகளை விநியோகிக்க முடியாது என்று ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். பைசர் - பயோஎன்டெக் தடுப்பு மருந்து ஏற்கனவே பிரிட்டனில் முதல் நாடாக அதன் விநியோகத்தை ஆரம்பித்துள்ளது. இதற்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் விரைவில் அனுமதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே இந்த மருந்து வறிய நாடுகளுக்குச் செல்ல சில காலம் எடுத்துக்கொள்ளும் என்று நம்பப்படுகிறது. மொடர்னா மற்றும் ஒக்ஸ்போர்ட் ஆகிய இரு தடுப்பு மருந்துகளும் பல நாடுகளிலும் அனுமதியை பெற காத்துள்ளன. ர'யாவின் ஸ்புட்னிக் தடுப்பு மருந்து சோதனைகளில் சாதகமான முடிவை காட்டி இருப்பதோடு மேலும் நான்கு மருந்துகள் மருத்துவ சோதனையில் கடைசி சட்டத்தில் உள்ளன.

# தடுப்பூசி தொடர்பானஜோ பைடனின் "பயங்கரமான" திட்டம் பதவியேற்றதும் நடைமுறைக்கும் வரும்


தனது பதவியேற்கும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கும் அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜோ பைடன், தாம் பதவியேற்ற முதல் 100 நாட்களில், 100 மில்லியன் கொவிட்-19 தடுப்பூசிகள் போடப்படும் என உறுதியளித்துள்ளார்.

நோய்ப்பரவலைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்கான தமது 3 முக்கிய இலக்குகளில் அது முதன்மையானது என அவர் குறிப்பிட்டார். இயன்றவரை முகக்கவசங்கள் அணிவதைக் கட்டாயமாக்குவது, மாணவர்களைப் பாடசாலைக்கு திரும்பச்செய்வது ஆகியவை பைடனின் மற்ற 2 இலக்குகளாகும்.

தடுப்புமருந்து விநியோகம் மிகப் பெரிய சவாலாக இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்டிய பைடன், அதற்கான நிதியை வழங்க பாராளுமன்றம் ஆதரவு அளிக்குமாறு வலியுறுத்தினார். தாம் பதவியேற்ற முதல் நாளிலிருந்தே, சவீர் பி-சேராவின் தலைமையில் செயல்படும் தமது சுகாதாரக் குழுவினர் தயார்நிலையில் இருப்பார்கள் என அவர் கூறினார்.

புதிய தலைமை மருத்துவ ஆலோசகராக, டொக்டர் அண்டனி பௌச்சியை பைடன் நிர்வாகம் நியமித்துள்ளது. அவர் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப்பின் கொவிட் குழுவில் முக்கிய பங்காற்றி வருகிறார். எனினும், சுமுகமான ஆட்சி மாற்றத்தை உறுதிசெய்யும் முயற்சியை தற்போதைய ஜனாதிபதி டிரம்ப் எளிதாக்கப்போவதில்லை. வொிங்கனில் நடைபெறும் தடுப்புமருந்து தொடர்பிலான மாநாட்டை அவர் வழிநடத்தியுள்ளார். மாநாட்டில் கலந்துகொள்ள பைடனின் குழுவினருக்கு அழைப்பு விடுக்காததைத் டிரம்ப் தற்காத்துப் பேசியுள்ளார். அடுத்த அரசாங்கத்தை அமைக்கப்போவது யார் என்பதை உறுதிசெய்ய வேண்டும் எனக் கூறிய அவர், ஜனாதிபதி தேர்தலில் முக்கியமான மாநிலங்களில் தாம் வெற்றி பெற்றதாக மீண்டும் தெரிவித்தார். அங்கு பல முறைகேடுகள் நேர்ந்தன என அவர் மீண்டும் குறைகூறினார்.

# ஜோ பைடனின் பாதுகாப்புச் செயலாளராக ஓய்வுபெற்ற இராணுவ ஜெனரல் லொயிட் ஒஸ்டின் தெரிவு



தனது பதவியேற்கும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கும் அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாக வெற்றிபெற்ற ஜோ பைடன், ஓய்வுபெற்ற இராணுவ ஜெனரல் லொயிட் ஒஸ்டினை தனது பாதுகாப்புச் செயலாளராக தேர்வு செய்துள்ளார். இதன்படி அமெரிக்க பாதுகாப்பு தலைமையகமான பெண்டகனுக்கு தலைமை வகிக்கும் முதல் ஆபிரிக்க அமெரிக்கராக 67 வயது ஜெனரல் ஒஸ்டின் பதிவாகவுள்ளார்.

ஒபாமா நிர்வாகத்தில் அமெரிக்க மத்திய கட்டளை தலைமையகத்தின் தலைவராக இருந்த ஜெனரல் ஒஸ்டின், தாம் ஓய்வு பெற்று ஏழு ஆண்டுகளுக்கு குறைவாக இருப்பதால் இந்தப் பதவ-ியை ஏற்பதற்கு கொங்கிரஸ் அவையின் உர-ிமை விடுப்பு ஒன்றை எதிர்பார்த்துள்ளார்.தமது தேசிய பாதுகாப்புக் குழுவின் முத்த அதி-காரிகளின் விபரத்தை வெளியிட்டு இரண்டு வாரங்களின் பின்னரே பைடன் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். கடந்த நவம்பர் 3ஆம் திகதி நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் பதவியில் உள்ள குடியரசுக் கட்சியைச் சேர்ந்த ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப்பை தோற்கடித்த பைடன் வரும் ஜனவரி 20 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதியாக பதவி ஏற்கவுள்ளார்.



இந்திய செய்திகள்




# அசல் தேனுடன் சர்க்கரைக் கரைசல் கலப்பட்டத்தால் இந்திய நுகர்வோர் துறை நடவடிக்கை

சந்தையில் விற்கப்படும் பெரும்பாலான தேன் வகைகளில் சர்க்கரைக் கரைசலை கலந்து விற்கப்படுவதாக மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறைக்கு தகவல் கிடைத்தது. தற்போதைய சிக்கல் மிகுந்த கொவிட்-19 காலகட்டத்தில் இவ்வாறு செய்வது நமது ஆரோக்கியத்திற்கு ஊறு விளைவிக்கும் என்பதால் இதைத் தீவிர கவனத்தில் எடுத்துக்கொண்ட நுகர்வோர் விவகாரங்கள் துறை, இதுகுறித்து நடவடிக்கை எடுக்குமாறு மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையத்தைக் கேட்டுக்கொண்டது. நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 2019-இன் 19(2) பிரிவின் படி, ஆரம்ப கட்ட ஆய்வுக்குப் பிறகு, உணவு ஒழுங்குமுறையாளரான இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிலை ஆணையத்தின் கவனத்துக்கு உரிய நடவடிக்கைக்காக மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் அனுப்பியது. மேலும், இது தொடர்பான விசாரணையிலும், நடவடிக்கைகளிலும் முழு ஒத்துழைப்பை வழங்குவதாகவும் மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் உறுதி அளித்துள்ளது. இவ்வாறு, நுகர்வோர் நலன்களைப் பாதுகாப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசின் நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்தின் கீழ் செயல்படும் நுகர்வோர் விவகாரங்கள் துறை எடுத்துள்ளது.



# சின்னத்திரை சித்ரா சாகடிக்கப்பட்டாலென கூறுகிறார் அவரது தாய்



தனது மகள் சித்ரா தற்கொலை செய்ய அவள் கோழை அல்ல அவளை ஹேம்நாத் கொலை செய்துவிட்டான் என்று சித்ராவின் அம்மா நிருபர்களிடம் தெரிவித்தார். அவர் மேலும் கூறும்போது "அவன் சாகடித்து விட்டான். என் மகள் கோ-ழை அல்ல. அவன் சாகடித்து விட்டான். அவனை நானே கொன்று விடுவேன். முல்லை ரசிகர்கள் அவனுக்கு பாடம் புகட்டணும். என்று நிருபர்களிடம் சித்ராவின் தாய் ஆவேசமாக பேசியபடி கதறி அழுதார். ஹேம்நாத் ஒரு சைக்கோ என்று சித்ராவின் தந்தை நிருபர்களிடம் கூறினார்.

# இலங்கையில் கொரோனாவிற்கு கைக்குழந்தை ஒன்று பலியாகியது

இலங்கையில் முதல் முறையாக கொரோனா வைரஸ் தாக்கத்திற்கு உள்ளாகி கைக்குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளதாக சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது. இந்த மரணம் இன்றையதினம் பதிவாகியுள்ளது. பொரளை ரிஜ்வே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 20 நாட்கள் வயதுடைய கைக்குழந்தை ஒன்றே இவ்வா றுஉயிரிழந்துள்ளது.

நேற்று இரவு வைத்தியசாலையில் அனுமதிக்கும் போதே கடுமையான நிமோனியா நோயால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரி-சோதனையில் குறித்த குழந்தைக்கு வைரஸ் தொற்று இருப்பது தெரியவந்துள்ளது. கொழும்பு தொட்டலக பகுதியை சேர்ந்த குறித்த குழந்தையின் பெற்றோருக்கு கொரோனா தொற்று இல்லை என பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

# சென்னை - சேலம் 8 வழிச்சாலை திட்டத்திற்கு அனுமதி – உச்சநீதிமன்றம்

ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை-சேலம் இடையே 8 வழி பசுமை சாலைத் திட்டம் அமைக்கும் திட்டத்துக்காக காஞ்சிபுரம் திருவண்ணாமலை வேலூர் தருமபுரி சேலம் உள்ளிட்ட மாவட்டங்களில் 1900 ஹெக்டேர் நிலத்தை கையகப்படுத்த தமிழக அரசு அறிவிப்பாணை வெளியிட்டது.

இந்த திட்டத்துக்கு நில உரிமையாளர்கள் விவசாயிகள் பல்வேறு அமைப்புகளின் சார்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. திட்டத்துக்கு தடை விதிக்கக்கோரி பாதிக்கப்பட்ட நில உரிமையாளர்கள் விவசாயிகள் பூவுலகின் நண்பர்கள் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வக்கீல் சூர்யபிரகாசம். உள்ளிட்டோர் சார்பில் 50-க்கும் மேற்பட்ட வழக்குகள் சென்னை ஐகோர்ட்டில் தொடரப்பட்டிருந்தன.

இந்த வழக்குகளை விசாரித்த சென்னை ஐகோர்ட்டு கடந்த ஆண்டு ஏப்ரல் 8-ம் தேதி தீர்ப்பு அளித்தது. அதில் சென்னை-சேலம் இடையிலான 8 வழிச்சாலைத் திட்டம் தொடர்பாக தமிழக அரசு பிறப்பித்த அறிவிப்பாணையை ரத்து செய்து அதிரடியாக உத்தரவிட்டது.

மேலும் 8 வழிச்சாலைக்கு நிலம் கையகப்படுத்த தடை விதிக்கப்பட்டது. மேலும் இந்த திட்டத்துக்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்களை 8 வார காலத்துக்குள் திரும்ப ஒப்படைக்கவும் உத்தரவிட்டது.

சென்னை ஐகோர்ட்டின் இந்த உத்தரவுக்கு எதிராக மத்திய அரசின் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்யப்பட்டது. விவசாயிகள் பாதிக்கப்பட்ட நில உரிமையாளர்கள் உள்ளிட்டோர் சார்பில் கேவியட் மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த வழக்கு தொடர்பாக இரு தரப்பு வாதங்களும் முடிவடைந்து இன்று தீர்ப்பு வெளியானது. சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி ஏ.எம். கான்வில்கர் தலைமையிலான அமர்வு இந்த வழக்கின் தீர்ப்பை இன்று வழங்கியது.

- தீர்ப்பில் கூறியதாவது:
- 8 வழிச்சாலை திட்டம் தொடர்பான சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவுரத்து செய்யப்படுகிறது.
- சென்னை - சேலம் 8 வழிச்சாலைக்கு நிலம் கையகப்படுத்த விதிக்கப்பட்ட தடை தொடரும்.
- ஆனால் சென்னை - சேலம் 8 வழிச்சாலை திட்டத்தை செயல்படுத்த அனுமதி அளிக்கப்படுகிறது.
- புதிய அறிக்கை வெளியிட்டு நிலங்களை கையகப்படுத்தலாம்
- 8 வழிச்சாலைக்கு நிலம் கையகப்படுத்த தமிழக அரசு பிறப்பித்த அரசாணை ரத்து செய்யப்படுகிறது.
- ஏற்கனவே நடைபெற்ற நிலம் கையகப்படுத்தல் நடவடிக்கை செல்லாது.
- மீண்டும் நிலம் கையகப்படுத்த புதிய அரசாணையை வெளியிட வேண்டும்
- உரிய துறைகளில் அனுமதி பெற்று வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி 8 வழிச்சாலை திட்டத்தை புதிதாக தொடங்கலாம்.
- நெடுச்சாலை அமைப்பது தொடர்பாக சுற்றுச்சூழல் துறையிடம் உரிய அனுமதி பெறவேண்டும்.

# மஹர சிறைச்சாலைக் கைதிகள் ஒருவகை மாத்திரை உட்கொண்டே வன்முறையில் ஈடுபட்டனர்

மஹர சிறைச்சாலை வன்முறை குறித்து தான் வெளியிட்ட கருத்தை பலரும் கேலி செய்த நிலையில் கைதிகள் ஒருவகை மாத்திரரை உட்கொண்டுள்ளமை மோதலின் போது எடுக்கப்பட்டதாக பொலிஸார் வெளியிட்டுள்ள காணொளியை பார்க்கும் போதும் எந்தவொரு முட்டாளுக்கும் தெரியவரும் என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் விமல் வீரவன்சமேற்படி கருத்தைத் தெரிவித்தார். அவர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில் சிறை கைதிகளுக்குள் மோதல் இடம்பெற்றுள்ளதை நம்மால் அவதானிக்க முடிகி-றது. கைதிகள் மற்றும் அதிகாரிகளுக்கு இடையில் பிரச்சினை ஏற்பட்டிருந்தால் மோதலும் அவர்களுக்கு இடையிலேயே ஏற்பட்டிருக்க வேண்டும். அதன்மூலம் இது எவ்வாறான மோதல் என்பது தெரிகிறது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் அரசாங்கம் என்ற வகையில் அதனை கட்டுப்படுத்தக் கூடிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த வீடியோவை பாருங்கள். சாதாரண மனிதர்கள் போலவா நடந்து கொள்கின்றனர்? தனது சகோதர கைதிகள் மீது தாக்குதல் நடத்தி அங்கும் இங்கும் ஓடித் திரிகின்றனர்.

கைதிகள் கைதிகளையேகொலைசெய்வதில்லை. அப்படி நடந்தால் அது சாதாரண மனநிலையில் இருக்காது. அந்த வீடியோவை பார்க்கும் எந்தவொரு முட்டாளுக்கும் அது தெரிய வேண்டும் என்றும் தெரிவித்தார்.

# கனடா TORONTO VOICE OF HUMANITY மனித நேய அமைப்பின் சார்பில் திருகோணமலையில் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்




HUMANITY என்னும் மனித நேய அமைப்பின் சார்பில் அண்மையில் திருகோண-மலை மாவட்டத்தில் உள்ள மூதூர் - வெருகலம்பதி இந்து மகா வித்தியாலயம் மற்றும் மூதூர் - துவாரகா மகா வித்தியாலயம் ஆகிய இரண்டு பாடசாலைகளில் பயிலும் சிறிய மற்றும் வளர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

திருகோணமலையில் வாழும் கவிஞரும் ஆசிரியரும் "சிகரம் கல்வி நிலையத்தின்" நிர்வாகிகளில் ஒருவருமான த. ரூபன் அவர்களின் வேண்டுகோளிற்கு அமைய கனடா சமுக ஆர்வலர் நரேன் விவேகானந்தா மற்றும் TORNTO VOICE ழுகு HUMANITY அமைப்பின் தலைவர் லோகேந்திரலிங்கம். பொருளாளர் சங்கர் நல்லதம்பி ஆகி-யோரின் ஏற்பாட்டில் இந்த திட்டத்திற்குரிய நிதி அங்கு அனுப்பப்பட்டது.



கற்றல் உபகரணங்கள் வழங்கும் வைபவத்தில் மேற்படி இரு பாட-சாலைகளின் அதிபர்கள் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர் இங்கு காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.

# இனப்படுகொலைகளுக்கு எதிரான கூட்டணி ஈழத்தமிழர்களுக்கு அவசியம் தேவை என்கிறார் கொசோவோ துணைப்பிரதமர் Haki Abazi

புடம் நாடுகளுக்கு இடையே, இனங்களுக்கு இடையேயான சிக்கல்கள் அதிகமாகிக் கொண்டிக்கும் இவ்வேளையில், இனப்படுகொலைகளுக்கு எதிரான கூட்டணியொன்று உலகத்தின் இன்றைய தேவையாக உள்ளதென கொசோவோ நாட்டு துணைப்பிரதமர் அக்கி அபாசி (Haki Abazi) அவர்கள் தெரிவித்துள்ளார்.

கடந்த டிசெம்பர் 5.6ம் தேதிகளில் நடந்து முடிந்த நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவை அமர்வின் தொடக்க நிகழ்வில் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே, இக்கருத்தினை அவர் தெரிவித்துள்ளார். குறிப்பாக சிரியா, லிபியா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்து அகதிகள் பெருமளவில் வெளியேறிவரும் நிலையில், ஏதிலிகளின் குரல்களுக்கு நடுவேயே இனச்சிக்கல்குறித்தான் குரல்கள் ஓங்கி ஒலிக்க வேண்டியதாகவுள்ளதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.



கொசோவைவின் துணைப் பிரதமராகவும், ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பு அமைச்சராகவும் பணியாற்றிய அக்கி அபாசி அவர்கள், ஐரோப்பாவில் சிவில் சமூகத்தினை வளர்த்தெடுப்பதில் அக்கறை செலுத்தியவர் மட்டுமல்லாது பல சர்வதேச மனிதாபிமான தொண்டு நிறுவனங்களிலும் உயர்பொறுப்புக்களை வகித்தவர்.

கொசோவா மக்களது அரசியல் தலைவிதியை நிர்ணயிக்க அங்கு நடந்த பொதுவாக்கெடுப்பு பொறிமுறை போன்றே, ஈழத்தமிழ் மக்களது அரசியல் தலைவிதியை தீர்மானிக்கின்ற பொறிமுறையாக பொதுவாக்கெடுப்பொன்று நடத்தப்பட வேண்டும் என்ற நிலையில், ஈழதமிழர்களுக்கான தனது தேசத்தின் தோழமையினை தெரிவித்து அவர் ஆற்றிய உரையின் பிழிவு: நாடுகளுக்கு இடையே, இனங்களுக்கு இடையே சிக்கல்கள் அதிகமாகிக் கொண்டே இருக்கின்றன. சிக்கல்களை களைவதும் இன்னல்கள் நிறைந்த பாதையாகவே இருக்கின்றது. 21ம் நூற்றாண்டில் இந்த உலகமயமாதலின் பின்னராக தற்போதைய சமூக ஊடகங்களின் வளர்ச்சிக்கு பின்னராக இப்பணி எளிதாகவே இருக்க வேண்டும். ஆனாலும் இந்த இனச்சிக்கல்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

இந்த காலகட்டத்தில் இனச்சிக்கல்களுக்கு எதிரான ஒரு கூட்டணி ஒன்று தேவையாகவுள்ளது. குறிப்பாக இனப்படுகொலைகளுக்கு எதிரான கூட்டணி தேவையாகவுள்ளது. அகதிகளின் அலைந்துழ்வு அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. ஜேர்மன் நாடுபோன்று பிற நாடுகளும் அகதிகளை திறந்த கதவுகளுடன் ஏற்றுக் கொண்டால் சிறப்பாக இருக்கும். ஆனால் நிலைமைகள் அவ்வாறு இல்லை.

இனச்சிக்கல்கள் குறைந்தால்தான் குறிக்கீடுகளும் குறையும். குறிப்பாக சிரியா, லிபியா, ஆப்பாகானிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்து அகதிகள் பெருமளவில் வெளியேறிவரும் நிலையில், இந்த குரல்களுக்கு நடுவேயே இனச்சிக்கல்குறித்தான குரல்களை ஓங்கி ஒலிக்க வேண்டியுள்ளது.

கொசோவோ தனிநாடாகவிட்டது என்பதால் அதன் பிரச்சனைகள் முடிந்துவிட்டதா என்றால் இல்லை என்றே சொல்ல வேண்டும். நாட்டைக் கட்டியெழுப்புவது என்பது பெரும் பணியாகவுள்ளது.கொசோவோவில் 90 வீதம் அல்பேனியர்களே உள்ளதோடு, அல்பேனிய மக்கள் ஐந்து நாடுகளில் சிதறுண்டு உள்ளனர். கொசோ விடுதலைப் போராட்ட தடம் ஓட்டமான் பேரசு காலத்தில் இடம்பெற்ற ஆக்கிரமிப்பின் போதுதான் அல்பேனிய மக்களை கொண்ட கொசாவோ மற்றவர்களின் கையில் வீழ்ந்தது. ஆக்கிரமிக்கப்பட்டது.

1989ம் ஆண்டு பேர்லின் சுவர் வீழ்ந்தது. அதில் இருந்துதான் பால்கன் பிராந்தியத்தில் அரசியல் மாற்றங்கள் நிகழத்தொடங்கின. அவ்வேளையிலே கொசோவோ அல்பேனியவர்கள் செர்பிய சிறைகளில் காரணங்களன்றி பல் லாயிரணக் கணக் கில் சிறைப்பிடிக்கப்பட்டார்கள். 1989ல் இருந்து 1999 வரை கொசோவோ விடுதலைப் போர் உக்கிரமாக நடந்தது. அங்கிருந்து கொசோவோ அர்பேனியர்கள் தொடர்ந்து அகதிகளாக வெளியேற்றப்பட்டனர். குறிப்பாக 1.5 மில்லியன் மக்கள் கொசோவாவில் இருந்து அகதிகளாக வெளியேற்றப்பட்டனர். அவ்வேளையில் 1999ல் அமெரிக்கா, மேற்கு ஐரோப்பிய நாடுகள் தலைமையிலான நோட்டோ அமைப்பு செர்பியா மீது போரைத் தொடுத்தது. 79 நாட்கள் இடம்பெற்ற போருக்கு பின்னராக யுத்த நிறுத்தம் வந்தது. ஐ.நாவின் தீர்மானம் 1854 சரத்துக்கு அமைய பொதுவாக்கெடுப்பு மூலம் கொசோவோ தனிநாடாகியது. அல்பேனியவர்கள் சுதந்திர காற்றை சுவாசித்தார்கள் என அவர் தனதுரையில் தெரிவித்திருந்தார்.

கொசோவை மக்களது போராட்டமும், அப்போராட்டம் காரணமாக கொசோவா தனிநாடாக உருவான விதமும் எமது போராட்டத்துக்கும், எமது அரசியல் குறிக்கோளுக்கும் உற்சாகம் தருகின்றது என தெரிவித்த நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் அவர்கள், கொசோவா மக்களது அரசியல் தலைவிதியை நிர்ணயிக்க அங்கு நடந்த பொதுவாக்கெடுப்பு பொறிமுறை போன்றே, எங்களுடைய ஈழத்தமிழ் மக்களது அரசியல் தலைவிதியை தீர்மானிக்கின்ற பொறிமுறையாக பொதுவாக்கெடுப்பு கோரி போராடிவருகின்றோம் எனத் தெரிவித்தார்.

கொசோவாவில் நடந்தது ஒரு இனப்படுகொலை. அங்கு இனப்படுகொலை மீண்டு நடந்து விடக்கூடாதிருக்க சுதந்திரமும் இறையும் கொண்டதாக ஈடுசெய் நீதியினை விளைவாக அங்கு பொதுவாக்கெடுப்பு நடந்திருந்தமை இங்கு குறிப்பிடதக்கது.



# இலங்கையில் பக்கச்சார்பு நீதியே நிலவி வருகிறது என்று சாடுகிறார் விக்னேஸ்வரன் எம்.பி



அனைவருக்குமான நீதி என்பது இந்த நாட்டில் இல்லை. பக்கச்சார்பான நீதியே காணப்படுகின்றது. சிங்கள பௌத்த மக்களின் நல்வாழ்வுக்காக "நீதி" தெரிவு செய்யப்பட்டு வழங்கப்படுகின்றது. என்று நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருமான சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நீதி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு குறித்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

"நீதியே இந்த நாட்டின் எல்லா மக்களினதும் இன்றைய எதிர்பார்ப்பாகும். நீதியானது தவிர்க்கமுடியாத வகையில், தமிழ் மக்களின் நாளாந்த வாழ்வுடனும் எதிர்காலத்துடனும் பிணைந்துள்ளது. யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் கொடூரமாகவும் இரக்கம் இன்றியும் கொலைசெய்யப்பட்ட அப்பாவி மக்களுக்கான நீதியை அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவினர்களுக்கான நீதியை அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். தமிழ் அரசியல் கைதிகள் நீண்டகாலமாக தமக்கான நீதியை எதிர்பார்க்கிறார்கள். தமது சமூகத்தை சார்ந்த ஒருவர் நீதிக்கு அமைச்சராக இருக்கின்றபோதிலும் முஸ்லிம்கள் தமது ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கான நீதியை எதிர்பார்க்கிறார்கள். 2010 ஏப்பிரல் 21 ஆம் திகதி குண்டுவெடிப்புக்களில் கொல்லப்பட்டவர்களுக்கான நீதியை கத்தோலிக்க மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

நீதியும் சமாதானமும் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளன. உடல், உள, புத்தி ரீதியாகவும் தாற்காலிகமாகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் சமாதானத்தை அடைவதற்கான முதல் படி அவர்களுக்கு நீதியை பெற்றுக்கொள்வதாகும். இந்த சந்தர்ப்பத்தில் 1972 ஆம் ஆண்டு 6 ஆவது போப்பாண்டவர் போல் உலக சமாதான தினம் அன்று கூறிய ஒரு பிரபல்யமான கூற்றை இங்கு கூறுவது பொருத்தமானது.

"மனிதனுக்கான உண்மையான மரியாதையின் நிமித்தம் காரணமாக அமையாத சமாதானம் உண்மையான சமாதானம் அல்ல. மனிதனுக்கான நேர்மையான இந்த உணர்வை நாம் எப்படி அழைக்கின்றோம்? இதை நாம் "நீதி" என்று அழைக்கின்றோம். உனக்கு சமாதானம் வேண்டுமானால், நீதிக்காக உழை" என்று அவர் கூறினார்.

இன்றைய அரசாங்கம் சமாதானத்தை அடைவதற்கும் அதனால் நீதிக்காக உழைப்பதற்கும் தயாராக இருக்கிறதா?

இலங்கைக்குள் உங்களின் சக பிரஜைகளான சுதேச தமிழ் மக்களின் துன்பங்கள், துயரங்கள், பிரச்சினைகள் பற்றி உங்களுக்கு உண்மையான கரிசனை உணர்வு இருக்குமானால் அவர்களின் நிலங்களை அபகரிக்க மாட்டீர்கள். எமது கலாசார சின்னங்களை அழிக்க மாட்டீர்கள். தமிழ் பேசும் மக்கள் வாழும் வடக்கு கிழக்கில் பெரும் எண்ணிக்கையான சிங்கள இராணுவத்தை வைத்திருக்கமாட்டீர்கள். பாதிக்கப்பட்டவர்கள் மீதும் நலிந்தவர்கள் மீதும் உணர்வு இருக்குமானால் அவர்களிடம் இருந்து அபகரிக்கமாட்டீர்கள். மாறாக, அவர்களுக்கு கொடுத்து உதவிசெய்து ஆறுதல் கூறுவீர்கள். ஆனால், நீங்கள் எமது நிலங்கள், எமது பாரம்பரிய வாழ்வு மற்றும் சுதந்திரம் ஆகியவற்றை இல்லாமல் செய்வதில் அக்கறை கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் எம்மை சக மனிதர்களாக அன்றி தோற்கடிக்கப்பட்ட மக்களாகவே இந்த தீவில் எம்மை தொடர்ந்து நடத்துகிறீர்கள். நாங்கள் எவரும் தோற்கடிக்கப்படவில்லை. எமது இதயங்களில் இன்னமும் நாம் சுதந்திரத்துக்கான தீபத்தை ஏந்திக்கொண்டிருக்கிறோம்.

அப்பாவிகள் பக்கமாக அன்றி தவறிழைப்பவர்கள் பக்கமாகவே இந்த நாட்டில் நாம் செயற்படுவதை நீதி தொடர்பாக பேசுகின்றபோது நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். 1956, 1958, 1961, 1977, 1981 மற்றும் 1983 ஆண்டு இனக்கலவரங்களின்போது கொலைகள், சித்திரவதைகள், தீவைப்பு மற்றும் பாலியல்வல்லுறவுகளில் ஈடுபட்ட ஒருவரையேனும் நாம் தண்டித்திருக்கிறோமா? 97,000 நூல்களையும் ஓலைச்சுவடிகளையும் கொண்டிருந்த யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டமைக்கு ஒருவரையாவது தண்டித்திருக்கிறோமா? அப்போது தென்கிழக்கு ஆசியாவிலேயே மிகச்சிறந்த நூலகமாக அது திகழ்ந்தது. அண்மைக்காலங்களில் முஸ்லிம் மக்களுக்கு எதிரான குற்றச்செயல்களில் ஈடுபட்ட எவரையாவது தண்டித்திருக்கிறோமா? ஆகக்குறைந்தது இந்த விடயங்களில் பொறுப்புக்கூறலுக்காவது முயற்சித்திருக்கிறோமா? தொடர்ந்துவந்த அரசாங்கங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை அமுல்படுத்தி இருக்கிறோமா? இவை எல்லாமே வசதியாக தட்டுக்களில் வைக்கப்பட்டுள்ளன.

ஒரு முஸ்லிம் மற்றும் ஒரு தமிழர் அமைச்சர்களாக இருக்கின்றபோதிலும் அதிகாரம் பெரும்பான்மை சமூகத்தின் கைகளிலேயே இருக்கிறது. தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் எமக்கு எது நல்லது என்பதை அவர்களே தீர்மானிக்கிறார்கள். சுதந்திரம் கிடைத்த நாள் முதல் இதுதான் நிலைமை. அனைவருக்குமான நீதி (inclusive justice) என்பது இந்த நாட்டில் இல்லை. பக்கச்சார்பான நீதியே (selective justice) காணப்படுகின்றது. சிங்கள பௌத்த மக்களின் நல்வாழ்வுக்காக "நீதி" தெரிவுசெய்யப்பட்டு வழங்கப்படுகின்றது.

இங்கு ஒரு புதுமையான அரசியல் கலாசாரம் வளர்க்கப்படுகின்றது. எண்ணிக்கை அடிப்படையில் சிறுபான்மை மக்களுக்கு எவ்வளவுக்கு எவ்வளவு ஒருவர் கூடுதலான குற்றங்களையும் துன்பங்களையும் செய்கிறாரோ அவ்வளவுக்கு அவ்வளவு அவருக்கு வெகுமதிகளும் பதவி உயர்வுகளும் கொடுக்கப்படுகின்றன. இதன் தாக்கத்தை இந்த சபையிலும் உணர முடிகின்றது. அதனால் தான் படித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் முஸ்லிம் மக்களின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது சமூகம் பற்றியும் அரசாங்கம் பற்றியும் உண்மைகளை பேசும்போது கூச்சல் போட்டு குழப்புகிறார்கள்.

இந்த நாட்டிலே தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் எதிராக காணப்படுவது முழுமையான ஒரு இனவாதமாகும் (Systemic Racism). அரச நிறுவனங்களின் செயற்பாடுகளின் ஊடாக இது முன்னெடுக்கப்படுகின்றது. இந்த இனவாதம் என்பது ஒரு சித்தாந்தம் (Ideology) ஆகியுள்ளது. இந்த சபையில் முறைகேடாக நடக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த சித்தாந்தத்தை காவுகிறார்கள். இனவாதத்தை விதைக்கும் கருவிகளாக ஊடகங்களும் மாறிவிட்டன. இந்த இனவாதம் எம்மை எங்கேயும் கொண்டுசெல்லப்போவதில்லை. இது இந்த நாட்டின் சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்கும் பெரும் குந்தகத்தையும் ஒட்டுமொத்த நாட்டுக்கும் பேரழிவையும் ஏற்படுத்தப்போகின்றது.

இன்றைய விவாதம் நீதி அமைச்சு பற்றியது என்பதால், நிதி அமைச்சின் இணையத் தளத்துக்கு சென்று பார்த்தேன். அதில் பூகோள முன்னேற்றங்கள் மற்றும் மக்களின் அபிலாஷ'களுக்கு அமைவாக சமூகங்களின் தேவைககளை பூர்த்திசெய்யும் வகையில் சட்ட மறுசீரமைப்பு செய்தல்" இந்த அமைச்சின் நோக்கம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நாங்கள் இந்த நோக்கத்தை முன்னெடுக்கிறோமா? இந்த நாட்டில் நீதியுடன் சம்பந்தமான எல்லா விடயங்களுமே உலக நடப்புக்கள், உலக நியதிகள், ஒழுக்க எதிர்பார்ப்புக்கள் ஆகியவற்றில் இருந்து முரண்பட்டு செல்வதே யதார்த்தமாக இருக்கிறது. தனி மனித உரிமைகள், சமூகங்களின் கூட்டு உரிமைகள், நல்லிணக்கம் , சமாதானம், சகவாழ்வு போன்ற பண்புகளை முன்னிலைப்படுத்தி நாகரிகத்தின் வளர்ச்சிப்பாதையில் எவ்வாறு முன்னேறிச்செல்லலாம் என்று சிந்தித்து அவற்றுக்கு ஏற்ப தமது பாராளுமன்றங்களில் சட்டங்களை இயற்றி உலக நாடுகள் பயணம் செய்கையில் இந்த பண்புகளுக்கு முரணாக அல்லவா இந்த நாடு பயணம் செய்கின்றது? குறிப்பிட்ட ஒரு சமுகத்தை சார்ந்த மக்களின் நிலங்களை பறிப்பதுடன் அவர்களின் கலாசாரம், பாரம்பரியம் மற்றும் வாழ்க்கை முறைகளை இல்லாமல் செய்வதற்கு முயலுகின்றது. சிங்கள பௌத்த தொல்பொருள் எச்சங்களை பாதுகாப்பது என்ற போர்வையில் எமது சமூகத்தின் நிலங்களை அபகரிக்கும் நோக்குடன் அவசர அவசரமாக விசேட ஆணைக்குழுக்கள் அமைக்கப்படுகின்றன. பௌத்த எச்சங்கள் இருக்கின்றன என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால், அந்த புராதன எச்சங்கள் தமிழ் பௌத்த காலத்தில் இருந்தானவை. சிங்கள மொழி பிறப்பதற்கு முன்னரேயே தமிழ் மக்கள் பௌத்தத்தை தழுவியிருந்தனர். தமிழ் பௌத்தர்கள் காலத்தில் இருந்தான எச்சங்களை நீங்கள் பேணி பாதுகாக்க விரும்பினால் இந்த ஆணைக்குழுக்களில் பெரும்பான்மையானவர்கள் தமிழ் அணையாளர்களாகவே இருக்க வேண்டும். தமிழ் மக்களின் நிலங்களை அபகரித்து சிங்கள மக்களுக்கு கொடுக்கவா முயலுகிறீர்கள்? இதுவா இந்த ஆணைக்குழுக்களின் நோக்கம்? 3000 ஆண்டுகளாக தொடர்ச்சியாக வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் இணக்கம் மற்றும் இசைவு இன்றி எந்த ஒரு செயற்பாடும் வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்படக்கூடாது.

சிங்கள மக்களுக்கு எதிராகவோ அல்லது அவர்களின் இறைமைக்கு எதிராகவோ எமது இளையோர்கள் ஆயுதம் ஏந்தவில்லை. அதேநாட்டில் தமது பகுதிகளின் இறைமைக்கு ஆபத்து ஏற்பட்டதாலேயே அவர்கள் ஆயுதம் ஏந்தினார்கள். அவர்கள் தமது அடையாளத்தை பாதுகாக்க வேண்டியிருந்தது. ஆனால், அவர்கள் பயங்கரவாதிகளாக அழைக்கப்பட்டு 20க்கும் அதிகமான நாடுகளின் உதவியுடன் கொடூரமாக அழிக்கப்பட்டார்கள்.

ஒன்றை தெளிவாக புரிந்துகொள்ளுங்கள். நாட்டின் இறைமையை விட மக்களின் இறைமையே மேலானது. இன்றைய சர்வதேச உறவில் அப்படித்தான் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் தான் சர்வதேச சட்டங்களும் கோட்பாடுகளும் உருவாக்கப்பட்டுவருகின்றன. நாட்டின் இறைமையின் பின்னால் ஒளிந்துநின்றுகொண்டு எமது மக்களின் இறைமையை இல்லாமல் செய்யலாம் என்று கனவு காணாதீர்கள். 18 ஆம் நூற்றாண்டு காலத்துக்குரிய நாட்டின் இறைமையை பாதுகாக்கும் கோட்பாடு இன்று பொருத்தம் அற்றதாகி வலுவிழந்துவிட்டது. ஒரு நாட்டின் மனித உரிமைகள் மோசமாக மீறப்படும்போது மனித உரிமைகளை பாதுகாப்பதற்காக அந்த நாட்டின் இறைமையை உதாசீனம் செய்யலாம் என்பதே இன்றைய உலக நடப்பு என்பதை புரிந்துகொள்ளுங்கள்.

இறுதிப் போரில் மனிதக் கேடயங்களாக அப்பாவி மக்களை விடுதலைப்புலிகள் பயன்படுத்தியதாகவும், அந்த மக்களை நீங்கள் மீட்டதாகவும், எந்த ஒரு போர்க்குற்றத்தையும் படையினர் செய்யவில்லை என்றும் கூறுகிறீர்கள். இது உண்மையானால், இதை நீங்கள் கூறவேண்டியதில்லை. பாதிக்கப்பட்ட மக்கள் தான் கூறவேண்டும். ஆனால், இறுதி யுத்தத்தில் நீங்கள் காப்பாற்றியதாக கூறும் மக்கள் நீங்கள் தமது உறவுகளை கொலை செய்ததாக அல்லவா கூறுகிறார்கள். நீங்கள் அந்த மக்களை உண்மையாக மீட்டு அவர்களுக்கு வாழ்வு அளித்திருந்தால், 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் பின் வந்த சகல தேர்தல்களிலும் உங்களையல்லவா அவர்கள் ஆதரித்திருந்திருப்பார்கள்? ஆனால், தங்களை மனித கேடயங்களாக பயன்படுத்தியதாக நீங்கள் கூறும் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் என்று நீங்கள் இன்றும் கூறும் தமிழ் தேசிய கூட்டமைப்பை அல்லவா மக்கள் தேர்தல்களில் பல தடவைகள் வெல்ல வைத்துள்ளார்கள்? எவ்வாறு 2013 ஆம் ஆண்டு முதன்முதலாக நடைபெற்ற வட மாகாண சபை தேத்தலில் வட மாகாணத்தின் ஆகக்கூடுதல் சாதனை வாக்குகளாக 133,000 வாக்குகளை மக்கள் எனக்கு அளித்தனர்?

விடுதலைப்புலிகள் மக்களை மனித கேடயங்களாக பயன்படுத்தினார்கள் என்றும் படையினர் மக்களை பாதுகாத்தார்கள் என்றும் நீங்கள் சொல்வது உண்மையானால் ஏன் சர்வதேச சுயாதீன விசாரணைக்கு தயங்குகிறீர்கள்? நீங்கள் சொல்வது உண்மையானால் சர்வதேச விசாரணை மூலம் அது நிரூபிக்கப்பட்டு உங்கள் மீதான விமர்சனங்கள் களையப்படவேண்டும். நீங்கள் அப்போது உங்கள் சர்வதேச அரங்கில் உங்கள் தலையை நிமிர்த்திக்கொண்டு வலம்வரமுடியும்.

ஆனால் உண்மை மாறாக இருக்கிறது. அதனால் தான் சர்வதேச விசாரணையை முகம்கொடுக்க நீங்கள் அஞ்சுகிறீர்கள். நீங்கள் சர்வதேச விசாரணைக்கு அஞ்சுவதும் சீனாவின் பின்னால் ஓடுவதும் உங்கள் படையினர் போர்க்குற்றங்கள், மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலையை இழைத்திருக்கிறார்கள் என்பதையே காட்டுகின்றது.

அடுத்தவருடம் மார்ச் மாதம் நாம் ஐ. நா மனித உரிமைகள் சபையை எதிர்கொள்கின்றோம். சர்வதேச சமுகத்தின் பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு. மார்ச் மாத நடுப்பகுதி தொலைவில் இல்லை என்பதை குறித்து வைத்துக்கொள்ளுங்கள். தப்புவதற்கு சிறிய சந்தர்ப்பமே உள்ளது.

ஆனால் ஒரு வழி உண்டு. அரசாங்கம் புதிய அரசியல் அமைப்பை கொண்டு வருகின்றது. இந்த நாட்டின் எல்லா சமூகங்களும் சமத்துவம், ஒற்றுமை, சுதந்திரம், ஒத்துழைப்பு ஆகியவற்றுடன் வாழும் வகையில் ஒரு சமஷ்டி அல்லது அரை சமஷ்டி அல்லது கூட்டு சமஷ்டி அரசியல் அமைப்பை தயாரித்து நிறைவேற்றுங்கள். உங்கள் அரசாங்கம் மட்டுமே இதை செய்ய முடியும். பெரும்பான்மை சமூகத்துடன் சமத்துவம் மற்றும் சக வாழ்வுடன் வடக்கு கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்கள் மற்றும் மலையக மக்களும் கூட வாழும்வகையில் உண்மையான அதிகார பகிர்வை ராஜபக்ஸ குடும்பம் உறுதிசெய்யட்டும்.

நீங்கள் தவறினால், யுத்தம் நடைபெற்றபோது பேச்சுவார்த்தைகளுக்காக நாடுகளின் தலை நகரங்களுக்கு ஏறி இறங்கியதுபோல மீண்டும் ஏறி இறங்குவீர்கள். இந்த நாட்டில் இந முரண்பாடுகளை மேலும் கூர்மையாக்கி சர்வதேச வல்லரசுகள் காலூன்றுவதற்கு (இதுவரை அப்படி செய்திருக்கவில்லை என்றால்) இடமளிக்காதீர்கள் என்று இந்த அரசாங்கத்திடம் வேண்டிக்கொள்கின்றேன்.




**நீங்கள் கனடாவுக்கு வந்த நாள் முதல் 5 ஆண்டுகள் வரை புதிய குடிவரவாளர்களுக்கான எமது சலுகைகளில் இருந்து பயன் பெறலாம்**

முதல் 3 ஆண்டுகளுக்கு உங்கள் வங்கிக் கணக்குக்கு நிரந்தர வங்கி கட்டணம் இல்லை

புதிய வாடிக்கையார்களுக்கான எங்களின் சலுகையின் மூலம் $650 வரை சேமியுங்கள்*

தெரிவு செய்யப்பட்ட வங்கிகளில் உள்ள எங்கள் மொழி ஆலோசர்கள் உரையாடுவார்கள் அல்லது புதிய வாடிக்கையாளர்களுக்கான எங்கள் சலுகைகளை இணையத்தில் தேடுங்கள்

உங்கள் கேள்விகளுக்கு பதிலளிக்க நாங்கள் இருக்கின்றோம்

**nbc.ca**/tamil

*Our banking offer for newcomers is available to immigrants who have been living in Canada for less than 5 years. Savings of $650 over three years based on: no flat monthly fee for our banking package for three years ($14.95/month), first order of cheques free ($56.98/order) and small safety deposit box rent-free for the first year ($55.00/year).To enjoy the full savings, you must sign up for specific additional products and services, keep them and carry out all required transactions for a minimum of 36 months. Some conditions apply.


Amma
Brand
இப்பொழுது கனடாவிலும்
கிடைக்கின்றது!


Amma
Apple Cider
with Mother Vinegar
LOOSE
WEIGHT
HELPS IN :
WEIGHT MANAGEMENT
GLOWING SKIN
GOOD FOR HEART
BLOOD PRESSURE
URIC ACID
NOW IN
CANADA
100%
Natural
Amma
Apple Cider
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471


Premium
Quality
Amma
Gingelly Oil
(Contains Permitted Anti-Oxidants)
சுத்தமான நல்லெண்ணெய்
NOW IN
CANADA
Import and Deliver
AMMA FOOD INC. 647-832-5471
750ml
375ml


Amma
Herbal
Juices
NOW
IN
CANADA
Jamun
with
Karela
Juice
Aloe
Vera
Juice
Karela
Juice
Amla
Juice
Super Energizer
Neem
Leaf
with Aloe Vera
Juice
Body
Pain
Relax Juice
with Aloe Vera
Aloe
Noni
with
Aloevera
Juice
100% HERBAL
100%
NATURAL
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471

# COVID-19க்கான தீர்வு உங்களின் கைகளில் இருக்கிறது.

- முக மறைப்பொன்றை அணியுங்கள்
- உங்களின் வீட்டில் இல்லாதவர்களுடன் 2 மீ இடைவெளியைப் பேணுங்கள்
- உங்கள் வீட்டு அங்கத்தவர்களை மட்டும் உங்களின் நெருங்கிய தொடர்பில் வைத்திருங்கள்
- அடிக்கடி உங்கள் கைகளைக் கழுவுங்கள்



**பரவலைத் தடுத்தல் உங்களில் ஆரம்பிக்கிறது**
மேலும் அறிவதற்கு ontario.ca/coronavirus ஐப் பார்வையிடுங்கள்.

ஒன்ராறிரோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது.

Ontario

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private – Work Insurance
- MVA – WSIB
- ODSP – Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle – Knee – Back Braces

**ENGLISH & TAMIL – SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறாார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**



# Carefirst Family Health Team

## Accepting New Patients



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்


- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com



# பெங்களூருவில் அனுமன் கோயிலுக்காக ரூ.1 கோடி மதிப்புள்ள நிலத்தை தானம் வழங்கிய இஸ்லாமியர்



பெங்களூருவில் இஸ்லாமியர் ஒருவர் தனக்கு சொந்தமான ரூ.1 கோடி மதிப்புள்ள நிலத்தை அனுமன் கோயிலுக்கு தானமாக கொடுத்துள்ளார். பெங்களூரு ஹொசக்கோட்டை அருகேயுள்ள பெலத்தூரைச் சேர்ந்தவர் ஹெச்.எம்.ஜி.பாஷா (65). ஏற்றுமதி தொழிலில் ஈடுபட்டுள்ள இவருக்கு ஓல்ட் மெட்ராஸ் சாலையை ஒட்டி 2 ஆயிரம் சதுர அடி நிலம் இருந்தது. இதில் அப்பகுதி மக்கள் சிறிய அளவில் அனுமன் கோயிலை கட்டி வழிபட்டு வந்தனர்.

கோயில் உள்ள நிலம் இஸ்லாமியருக்கு சொந்தமானது என்பதால் நீண்ட காலமாக அந்த கோயிலை புதுப்பிக்காமலும், திருவிழா நடத்தாமலும் இருந்துள்ளனர்.இதனிடையே, முக்கிய சாலையை ஒட்டி இருந்ததால் இந்த நிலத்தை பல நிறுவனங்கள் பாஷாவிடம் ரூ.1 கோடி வரை விலைக்கு கேட்டுள்ளனர். இதற்குமறுப்பு தெரிவித்த அவர், அனுமான் கோயில் கட்டுவதற்காக அந்த நிலத்தை பெலத்தூர் கிராமத்தினருக்கு இலவசமாக வழங்கி உள்ளார். இதனால் மகிழ்ச்சி அடைந்த கிராம மக்கள் அனுமான் கோயிலை புதுப்பிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இஸ்லாமியர் ஒருவர் அனுமன் கோயிலுக்கு நிலம் கொடுத்த செய்தியை அறிந்த ஏராளமானோர் பாஷாவை பாராட்டி வருகின்றனர். இதுகுறித்து பாஷா கூறும்போது, "கடவுளுக்கு சாதி, மதம், மொழி, இனம் என எதுவும் இல்லை. எனக்கு அல்லாவும் ஒன்றுதான். அனுமனும் ஒன்றுதான்.

அதனால் தான் என் நிலத்தை இலவசமாக கொடுத்தேன். எல்லா கடவுளும் அன்பைத்தான் போதிக்கிறார்கள். இந்துக்களும் இஸ்லாமியர்களும் சகோதரர்கள். ஆனால் ஒரு சிலர்தங்களின் சுயநலத்துக்காக கடவுளை வைத்து மக்களை பிரிக்கிறார்கள். அதை அரசியல்வாதிகள் தங்களுக்கு ஏற்றவாறு மாற்றிவிடுகிறார்கள்" என்றார்.

# அரசியல் கட்சி அறிவிப்பைத் தொடர்ந்து ரஜினிகாந்த் வீட்டுக்கு போலீஸ் பாதுகாப்பு அதிகரிப்பு

புதிய அரசியல் கட்சி தொடங்க உள்ள நிலையில் சென்னை போயஸ் கார்டனில் உள்ள நடிகர் ரஜினிகாந்த் வீட்டுக்கு போலீஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.நடிகர் ரஜினிகாந்த் சென்னை போயஸ் கார்டனில் குடும்பத்துடன் வசித்து வருகிறார். ஜனவரி மாதம் புதிய அரசியல் கட்சி தொடங்கப் போவதாகவும் அதற்கான தேதியை டிச.31ம் தேதி அறிவிக்க இருப்பதாகவும் ரஜினிகாந்த் ஏற்கெனவே அறிவித்துள்ளார். இதனால், அவரது ரசிகர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

அவருக்கு நேரில் வாழ்த்து தெரிவிக்கவும் ஆதரவு தெரிவிக்கவும் அவரது வீடு நோக்கி ஏராளமானவர்கள் தினமும் திரண்டு



வருகின்றனர். இதையடுத்து நடிகர் ரஜினி வீட்டை சுற்றி போலீஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக அவரது வீடு இருக்கும் தெரு பகுதியிலும், வீட்டின் முன்பும் 15 போலீஸார் சுழற்சி முறையில் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டுள்ளனர். தெருவின் நுழைவு பகுதியில் தடுப்பு அமைத்து அத்தெருவிலுள்ள வீடுகளின் உரிமையாளர்களின் வாகனங்களை மட்டுமே அனுமதிக்கின்றனர்.மேலும், முன் அனுமதி பெற்றோரின் வாகனங்கள் மட்டுமே ரஜினி வீட்டுக்கு செல்ல அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது.

அதுமட்டுமல்லாமல் ரஜினி வீட்டை சுற்றி ரோந்துபோலீஸாரும்கண்காணித்துவருகின்றனர்.முன் அனுமதி பெற்றோரின் வாகனங்கள் மட்டுமே ரஜினி வீட்டுக்கு செல்ல அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது. ரோந்து போலீஸாரும் கண்காணித்து வருகின்றனர்.

# தமிழகத்தில் கொரோனா தடுப்பூசி ஆயத்த பணிகள் தீவிரமாக்கப்பட்டுள்ளது சுகாதாரத்துறை செயலாளர் தகவல்



தமிழகத்தில் கொரோனா தடுப்பூசி ஆயத்த பணிகள் தீவிரமாக்கப் பட்டுள்ளது. மேலும் முதற்கட்டமாக 5 லட்சம் மருத்துவ பணியாளர்களுக்கு போடுவதற்கு திட்டம் உள்ளதாக சுகாதாரத்துறை செயலாளர் தகவல் கூறினார்.

இது குறித்து சுகாதாரத்துறை செயலாளர் டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறியதாவது: முதல்அமைச்சர் உத்தரவின் பேரில் மத்திய அரசு, கொரோனா தடுப்பூசியை தமிழகத்துக்கு அனுப்புவதற்கு முன்பாக, முதற்கட்டமாக யார்யாருக்கு தடுப்பூசி செலுத்த வேண்டும் என்ற கணக்கெடுக்கும் பணியை தொடங்கி உள்ளோம்.

அந்தவகையில், கொரோனா முன்கள பணியாளர்களான அரசு மற்றும் தனியார் மருத்துவமனை டாக்டர்கள், செவிலியர்கள், மருத்துவ பணியாளர்கள், சுகாதாரப்பணியாளர்கள் உள்ளிட்ட 5 லட்சம் பேருக்கு முதற்கட்டமாக தடுப்பூசி போட திட்டமிட்டுள்ளோம். இதையடுத்து 65 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களும், பின்னர் 50வயதுக்கு குறைவான இணை நோய் உள்ளவர்களுக்கும் தடுப்பூசி போட முன்னுரிமை அளிக்கப்படும். இதைத்தொடர்ந்து பொதுமக்களுக்கு இந்த தடுப்பூசி போட திட்டமிட்டுள்ளோம்.

மேலும் இந்த கொரோனா தடுப்பு மருந்துகளை வழங்குவதற்கு 46 இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த மருந்துகள் வந்ததும், இதனை சேமிக்க 51 இடங்களில், நடந்து செல்லும் குளிர்சாதன சேமிப்பு கிடங்குகள் நிறுவப்பட்டுள்ளது.

இதையடுத்து, அடுத்தகட்டமாக தடுப்பு மருந்துகளை வினியோகம் செய்யக்கூடிய இடங்களில் 2 ஆயிரத்து 800 சேமிப்பு கிடங்குகள் நிறுவப்பட்டு வருகிறது. கொரோனா தடுப்பு மருந்து வந்தாலும், பொது மக்கள் முககவசம், சமூக இடைவெளியை கட்டாயம் கடைபிடிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# சென்னை சேலம் 8 வழிச்சாலை திட்டத்தில் மக்கள் பாதிக்கப்படவில்லை: அமைச்சர் கடம்பூர் ராஜூ



சென்னை சேலம் இடையே 8 வழிச்சாலை திட்டத்தில் மக்கள் பாதிக்கப்படவில்லை என அமைச்சர் கடம்பூர் ராஜூ தெரிவித்தார். கோவில்பட்டியில் அமைச்சர் கடம்பூர் ராஜூ செய்தியாளர்களிடம் கூறும்போது: தமிழ் திரையுலகில், நடிகர், தயாரிப்பாளர் உள்ளிட்ட எந்த சங்கமாக இருந்தாலும் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட சங்கம் தான் அங்கீகரிக்கப்பட்ட சங்கமாக இருக்கிறது.

சங்கங்கள் தோற்றுவிப்பதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. ஆனாலும், அவர்கள் ஒற்றுமையாக செயல்பட வேண்டும் என்பது தான் அரசின் கருத்து.

திமுகவுக்கு பாடம் புகட்ட மக்கள் தயாராக உள்ளார். மு.க.ஸ்டாலின் அனைத்து வளர்ச்சி திட்டத்துக்கும் தடைக்கல்லாக உள்ளார். ஆட்சி பொறுப்பில் இருந்த நேரத்தில் அவர்கள் செய்யாததை நாங்கள் செய்யும் போது அதனை பாராட்ட வேண்டும்.

சென்னை சேலம் 8 வழிச்சாலை விவசாயிகள் பாதிக்கப்படாத அளவுக்கு கையகப்படுத்தப்பட்டு நிலத்துக்கு சந்தை நிலவரத்துக்கு ஏற்ப இழப்பீடு வழங்கப்படும் என அரசு தெரிவித்துள்ளது.

அந்தசாலைகளைஉள்ளடக்கிய5மாவட்டங்களில் பலமுறை கருத்துகேட்பு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இதனை அரசியலாக்கி சிலர் தூண்டுகிறார்களே தவிர, அங்குள்ள மக்கள் பாதிக்கப்படவில்லை.

ரூ.10 ஆயிரம் கோடி செலவில் 8 வழிச்சாலை என்பது மத்திய அரசு தமிழகத்துக்கு வழங்கிய அற்புதமான திட்டம். இதனால் போக்குவரத்து விரிவடையும், வணிக தொடர்பு அதிகரித்து தமிழகத்தின் வளர்ச்சிக்கான முதல் சாலையாக அமையும். வடமாநிலங்களை போல் தமிழகமும் முன்னேற வேண்டிய நேரத்தில் அதனை வரவேற்க வேண்டும். இங்கே தூண்டி விடுபவர்களை பொதுமக்கள் நம்ப மாட்டார்கள்.

அதிமுக ஆட்சியில் குற்றச்சாட்டு இருந்தால் தானே கனிமொழியால் கூறமுடியும். அவருக்கு தான் 2ஜி அலைக்கற்றை வழக்கில் மீண்டும் திகார் சிறைக்கு செல்ல வேண்டுமோ என்ற பயம். 10 ஆண்டுகள் தொடர்ந்து அதிமுக ஆட்சி பொறுப்பில் உள்ளது. இதில், சட்டப்பேரவையில் அவர் பேசி உள்ளார். குற்றச்சாட்டுகள் யார் மீது வேண்டுமானாலும் கூறலாம். ஆனால், ஆதாரத்துடன் நிரூபிக்கப்பட்டதா என்றால் இதுவரை ஒரு குற்றச்சாட்டு கூட நிரூபிக்கப்படவில்லை.

அரசியலில் பழிவாங்கும் எண்ணத்துடன் நாங்கள் செயல்பட்டிருந்தால், திமுகவில் ஒரு தலைவர் கூட வெளியே இருந்திருக்க முடியாது. அத்தனை பேர் மீதும் குற்றச்சாட்டுகள் உள்ளன.

அவர்கள் பாணியில் சொல்வதாக இருந்தால், 2021ம் ஆண்டு ஆட்சி வந்தால் அவர்கள் அனைவரும் சிறை செல்லக்கூடிய வாய்ப்பு உள்ளது. அதற்கு பயந்து தான் ஸ்டாலின் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அவர்களை சிறைக்கு அனுப்புவோம் என கூறி வருகிறார். ஆனால், காலம் பதில் சொல்லும்.

அவர்கள் மண்டல வாரியாக வாரிசுகளை வைத்து ஆட்சி நடத்தினர். அந்தளவுக்கு இன்று அதிகார பகிர்வு இல்லை. முதல்வர் தலைமையில் ஒருமித்த ஆட்சி. அங்கே கனிமொழி, மு.க.ஸ்டாலின், மு.க.அழகிரி, செல்வம் என அதிகாரத்தை பகிர்ந்து கொண்டு தமிழகத்தை பட்டா போட்டு விற்கத்தான் செய்யவில்லை. அந்த நிலையை தமிழக மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். அப்படிப்பட்ட நிலையை மீண்டும் அனுபவிக்க மாட்டார்கள், என்றார்.




# கனடா சபரிமலை ஐயப்பன் ஆலய நிர்வாகத்தின் ஏற்பாட்டில் உணவு வங்கிக்கு உணவுப் பொருட்கள் சேகரிக்கும் திட்டம்

கனடாவில் ஸ்காபுறோ நகரில் மார்க்கம் வீதியில் இயங்கிவரும் சபரிமலை ஐயப்பன் ஆலய நிர்வாகத்தின் ஏற்பாட்டில் உணவு வங்கிக்கு உலர் உணவுப் பொருட்கள் சேகரிக்கும் திட்டம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை 2721 Markham Rd. - யுனிட் 30, Scarborough, ON M1X 1L5 என்னும் விலாசத்தில் அமைந்துள்ள சபரிமலை ஐயப்பன் ஆலய வளாகத்தில், பொதுமக்களிடமிருந்து உலர் உணவுப்பொருட்கள் மற்றும் ரின்களில் அடைக்கப்பெற்ற பழங்கள் அல்லது உணவுப் பொருட்கள் ஆகியன ஏற்றுக் கொள்ளப்படும். இதற்காக தொண்டர்கள் பலர் அன்றைய தினம் பணியில் இருப்பார்கள்.

அன்றைய தினத்திற்கு முன்னரும் உணவுப் பொருட்களை வழங்க விரும்பும் அன்பர்கள் மற்றும் அடியார்கள் ஆலயத்திற்கு நேரடியாக வந்து உணவுப் பொருட்கள் ஒப்படைக்கும் இடத்தில் கையளிக்கலாம். கனடாவில் பல வருடங்களாக இயங்கிவரும் உணவு வங்கி ஒன்றிடம் அலுவலக நிர்வாகத்தினால், சேகரிக்கப்படும் பொருட்கள் ஒப்படைக்கப்படும்.

கனடாவில் உணவின்றி தவிக்கும் குடும்பங்களுக்கு உதவும் வகையில் நடைபெறும் இந்த நற்காரியத்தில் அனைவரும் நேரடியாகப் பங்கெடுக்குமாறு அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

மேலதிக விபரங்களுக்கு:-
நவநேசன்: (416) 648-3373
குலசிங்கம்: (416) 565-3000
ஆலயம்: (416) 335-7700
தனிநாயகம்: (416) 457-4300
மதிவாசன்: (416) 843-8424 மற்றும்
ஆகிய இலக்கங்களை அழைக்கவும்.

# Youth Credit Management is Very Important for Families in Canada

## கனடிய இளைஞர்களின் Credit Management ல் அவர்களின் குடும்பத்திற்கும் பொறுப்புக்கள் உண்டு

"நாம் வாழும் கனடா தேசத்தில் எமது எதிர்காலத்தை பொருளாதார ரீதியாக திட்டமிட்டுச் செல்வதற்கு Credit Management மிக அவசியம் ஆகும். இந்த Credit Management விடயத்தில் வளர்ந்தவர்கள் மாத்திரமல் இளையோரும் மிகுந்த கவனம் எடுக்க வேண்டும். அவ்வாறு இளையோர் கவனம் செலுத்தாது இருந்தால் அவர்களின் குடும்பத்தில் உள்ளவர்கள் அவர்களை வழி நடத்தவேண்டும். ஏனெனில் இளையோரின் Credit Management தொடர்பாக அவர்களுக்கு தகுந்த வழி முறைகளைச் சொல்லிக் கொடுப்பதன் மூலம், எதிர்காலத்தில் அவர்களுடைய தனிப்பட்ட வாழ்வும் திருமணத்திற்குப் பின்னரான அவர்களுடை குடும்ப வாழ்வும் சிறப்பாக இருக்கும். சிறியவர்கள் தானே என்று அவர்களின் சிக்கல்கள் இருந்தால் இக்காலத்தில் தொழில் பெறுவதும் கூட தடையேற்படும் சந்தர்ப்பங்கள் உண்டு. மேலும் இல்லங்கள் வாங்கும் போதும் அவசர தேவைகளுக்கு கடன்பெறும் போதும் இந்த Credit Management மிக அவசியமானதொன்று என்பதை கவனிக்க வேண்டும்".




இவ்வாறு தெரிவித்தார் கனடாவின் ஸ்காபுறோ நகரில் இயங்கிவரும் பிரபல நிதி ஆலோசனை நிறுவனமான Debt Free Credit Solution இன் அதிபர் த. இளங்கீரன் அவர்கள். கடந்த 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்ற இணைய வழி Clhd Family & Youth Credit Management என்னும் தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் முக்கிய உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தத் துறையில் அனுபவம் உள்ள சிலர் அங்கு கலந்து கொண்டனர். திருமதி. Doreen கருத்தரங்கை நெறிப்படுத்தினார். கனடிய தமிழ் சட்டத்தரணியும் Nava Wilson சட்ட நிறுவனத்தின் பங்காளருமான குபேஸ் நவரத்தினம், கடன் தொடர்பான ஆலோசனைகளை வழங்கும் யுனயஅ குளைாநச ஆகியோர் அங்கு பல பயனுள்ள கருத்துக்களை வழங்கினார்கள்.

அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் திரு. இளங்கீரன் தனது உரையில் பல பயனுள்ள விடயங்களை கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களோடு பகிர்ந்து கொண்டார். பல பெற்றோர்களும் கலந்து கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

"கிறடிட் தொடர்பாக உள்ள பல விடங்களை தெளிவாக பெற்றோர்களோ அன்றி மூத்த சகோதர சகோதரிகளோ இளையவர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு நிதி தொடர்பான நெருக்கடிகள் வரும் போது அவர்களை சரியான முறையில் வழி நடத்த வேண்டும். அப்போது தான் அவர்கள் எதிர்காலத்தில் மகிழ்ச்சியான வாழ்க்கையை கொள்ளலாம். அத்துடன் நிதி நெருக்கடிகள் அவர்களை நெருங்கவே மாட்டாது." என்றார்.

அங்கு உரையாற்றிய சட்டத்தரணி குபேஸ் நவரத்தினம் தனது உரையில் "ஒருவருடைய Credit Management என்பது சாதாரணமான ஒன்றல்ல. அது ஒருவரின் எதிர்காலத்திற்கு முக்கியமான தொன்றாகும். நல்ல Credit உள்ளவர்களுக்கு பல நன்மைகள் கிட்டும். இல்லங்கள் அல்லது சொத்துக்கள் வாங்கும் போது, குறைந்த வட்டி வீதத்தில் கடன் பெறும் வாய்ப்புக்கள் கிட்டும்.நிதி நிறுவனங்களின் வரவேற்பு அவர்களுக்கு எப்போது வீடு தேடி வரும். எந்தளவு தொகையையும் அவர்கள் வங்கியிலிருந்து எந்நேரமும் பெற்றுக் கொள்ளலாம். எனவே இளையவர்களின் Credit விடயத்தில் அவர்களை சரியாக வழி நடத்த வேண்டும்" என்றார்.

அங்கு உரையாற்றிய ஆடம என்னும் நிதி ஆலோசகர் "கடன் பெறுவது அவசியமென்றால் அதைப் பெற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் தேவையற்ற வகையில் அதிக வட்டியைச் செலுத்தி கடன்பெறவேண்டிய அவசியமே இல்லை. நாம் நல்ல Credit வைத்திருந்தால், எப்போதும் குறைந்த வட்டியில் கடனை பெறலாம். உதாரணமாக Pay Day Loan என்னும் கடன் பெறும் முறை மிகவும் ஆபத்தானது. சிலர் அதைக் கவனிக்காமல் சென்று மேலும் மேலும் கடனாளியாகின்றார்கள். 100 டாலர்கள் இந்த 6 Pay Day Loan முறையில் கடனாகப் பெற்றால் ஒரு வாரத்தின் பின்னர் 150 டாலர்களாக மீளச் செலுத்த வேண்டும். இவ்வாறு Pay Day Loan இல் மிகுந்த நஸ்டமடைந்து எமது பணத்தை தேவையற்ற வகையில் இழக்க வேண்டி வரும். எனவே இளங்கீரன் போன்ற தகுந்த நிதி ஆலோசகர்களிடம் குறித்த நேரத்தில் Credit Management ஆலோசனைகளைப் பெற வேண்டும்" என்றார்.

(416) 834-7227 அல்லது (416) 434-1522

# கனடா ஒன்றாரியோ மாகாணத்தில் கல்வி பயிலும் பிள்ளைகளுக்கு அரச உதவிகள்

கோவிட்-19 நோய்த்தொற்றுக் காலத்தில் ஒன்ராறியோவில் வாழும் குடும்பங்களுக்கு ஏற்படக்கூடிய கல்விக்கான மேலதிக செலவுகளை எதிர்கொள்ளும் வகையில் ஒன்ராறியோ மாகாண அரசாங்கம் மீண்டும் மொத்தமாக 380 மில்லின் டொலர்கள் நிதியை வழங்கியுள்ளது.

இன்று முதல், ஒன்ராறியோவில் வசிக்கும் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் கல்வி பயிலும் பிள்ளைகளுக்கு உதவி வழங்கவென ஏற்படுத்தப்பட்டுள்ள (Support for Learners Web Page) இணையத்தளத்தினூடாக தமது விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்துகொள்ளலாம். ஜனவரி 15, 2021 வரையும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேற்படி திட்டமானது, பாடசாலைக்குச் சென்று கல்விபயிலும் பிள்ளைகள் அல்லது மெய்நிகர் இணைய வகுப்புகளினூடாக கல்வி பயிலும் பிள்ளைகள், அல்லது இரண்டும் இணைந்த முறையில் கல்வி பயிலும் பிள்ளைகள் உள்ள குடும்பத்தினருக்கு ஏற்படும் மேலதிகமான கல்விச் செலவினை ஈடுசெய்ய உதவும் முறையில் ஒரு தடவை மட்டும் வழங்கப்படவுள்ள உதவித் திட்டமாகும். இந்நிதி, கோவிட்-19 காலத்தில் புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், தொழில்நுட்ப மற்றும் கல்வி மேம்பாட்டு வளங்கள் போன்றவற்றுக்கென ஏற்படும் மேலதிக செலவுகளைச் சமாளிப்பதற்கு உதவியாக அமையும். அத்துடன் குழந்தை பராமரிப்புக்கான செலவுகளுக்கும் இந்நிதி உதவியாக அமையும். இந்த முயற்சியானது, இக்கட்டான காலகட்டத்துக்கான ஒன்ராறியோவின் செயற்றிட்டத்தின் வரவுசெலவுத் திட்டம் 2020இன் ஒரு பகுதியாகும்.



ஒன்ராறியோவில் வசிக்கும் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் ஒரு குழந்தைக்கு ஒரு விண்ணப்பப்படிவம் என்ற முறையில், ஒரு குழந்தைக்கு ஒருமுறை மட்டும் பின்வரும் தகவல்களின் அடிப்படையில் விண்ணப்பிக்கலாம்:

- 12 வயது வரையான குழந்தை ஒன்றுக்கு 200 டொலர்கள்
- 21 வயது வரையான விசேட உதவிகள் தேவைப்படும் பிள்ளைகள் இருந்தால், ஒரு பிள்ளைக்கு 250 டொலர்கள்

விஜய் தணிகாசலம், மானில சட்டமன்ற உறுப்பினர்.
ஸ்காபரோ - றூஜ் பார்க்




# 'புலம்பெயர் தமிழ்ச் சமூக வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பு' என்ற தலைப்பில் ஒரு கலந்துரையாடல்

புலம்பெயர் தமிழ்ச் சமூக வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பு என்ற தலைப்பில் zoom ஊடான ஒரு கலந்துரையாடல் அமெரிக்கா, நியூ ஜெர்செயில் அமைந்துள்ள கல்வி, கண்டுபிடிப்பு, மாணவ தலைமைத்துவ அமைப்பின் ஸ்தாபகர் திரு ஞானசேகரன் செல்லையா தலைமையில் வருகின்ற ஞாயிறு டிசம்பர் 13ம் திகதி அமெரிக்க, கனேடிய நேரம் காலை 11 மணிக்கு இடபெறவுள்ளது.

இந்நிகழ்வு இச்சமூக சேவை அமைப்பின் முக நூலூடாக நேரடி ஒளி பரப்பு செய்யப்படும். Education, Innovation, Leadership என்ற முகநூலில் சென்று பார்வையிடலாம்.

இலங்கை, ஜெர்மனி, பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்து பன்முக திறன், அனுபவமிக்க பெண்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டு புலம்பெயர் வாழ்க தமிழ்ச் சமூகத்தின் வளர்ச்சியில் பெண்களின் பங்கு என்ற விடயத்தை பற்றிய தங்களுடைய கருத்துக்களை பகிர்ந்து கொள்ளவுள்ளார்கள். இக் கருத்தரங்கு வெற்றிபெற கன்டா உதயன் மற்றும் நண்பன் ஊடகக் குழுமம் வாழ்த்துகின்றது.

மேலதிக விபரங்களுக்கு 973 666 2105 என்ற இலக்கத்துக்கு அழைக்கவும்.

# ஈழத்துத் திருக்கோவில்கள்

924



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## புதிய கதிர்வேலாயுதசுவாமி கோயில் பம்பலப்பிட்டி, கொழும்பு

'' குன்றம் எறிந்தாய் குரைகடலில் சூர்தடிந்தாய்
புன்தலைய பூதப் பொருபடையாய் – என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாய் என் உள்ளத்துறை.''

பம்பலப்பிட்டி புதிய கதிர்வேலாயுதசுவாமி கோயிலின் உட்சுவர்களிலே, புராண நிகழ்வுகளைச் சித்தரிக்கும் வண்ணப்படங்கள் தீட்டப்பட்டுள்ளன. கோயில் கட்டிடத்தைச் சுற்றியுள்ள நிலப்பகுதியை பூங்காவாக அமைத்ததோடு, வெளிவீதியில் வெறுங்காலுடன் நடந்து கோயிலைச் சுற்றி வலம்வந்த வழிபட ஏதுவாக பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான அமைவுகளோடு கட்டிமுடிக்கப்பட்ட கோயில் திருப்பணிகளோடு, சமூகம் சார்ந்த தேவைகளையும் நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினர் சிந்திக்கத் தவறவில்லை. இந்துக்களின் சமயம்சார்ந்த முக்கிய நாளாக திருமண நாள் காணப்படுகின்றது. இந்நாளை வெகுசிறப்பாக உற்றார் உறவினர், நண்பாகளோடு கொண்டாடக் கூடிய பெரிய மண்டபம் அக்காலப்பகுதியிலே காணப்படவில்லை. புதிய கதிரேசன் மண்டபத்தினை அமைத்துதவிய நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினர், ஆயிரம்பேர் ஒரே சமயத்தில் உட்கார்ந்து போசனம் உண்ணக்கூடியவகையில், சகல வசதிகளையும்கொண்ட கல்யாண மண்டபம் ஒன்றினையும் கட்டி முடித்தனர்.

நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினரால் கட்டப்பட்ட பல இந்தக்கோயில்கள் கொழும்பு நகரத்திலே காணப்படுகின்றன. இக்கோயில்களிலே ஆண்டுதோறும் விழாக்கள் மிகச் சிறப்பாக நடைபெறுவது வழக்கம். இவ்விழாக்களுள் கொழும்பிலே நடைபெறும் ஆடிவேல் விழா மிக விமரிசையாக நடைபெறும். ஏறக்குறைய 160 ஆண்டுகளுக்கு முன்னர் கொழும்பிலே ஆடிவிழா ஆரம்பிக்கப்பட்டதாக, நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினரின் கோயில் ஆவணங்கள் மூலம் அறியமுடிகின்றது.

கொழும்பு மாநகரிலே வாழ்கின்ற தமிழர்கள், தமது சமயம் சார்ந்த கலாச்சார விழாவாக, வருடந்தோறும் கொண்டாடி வருகின்றனர். இவ்விழா நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினர் கட்டிய பல கோயில்களோடு தொடர்புகொண்ட பெருவிழாவாகக் காணப்படுகின்றது. இவ்வேல் விழா ஆடிமாதம் பௌர்ணம-யுடன் கதிர்காமக்கந்தனின் தீர்த்தோற்சவத்துடன் கொண்டாடப்படும் பெருமையைப் பெற்றுள்ளது. வர்த்தகநோக்கில் இலங்கைக்கு வந்த நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினர், தமது மதம், மொழி, கலாச்சாரத்தை மறவாது பல அரிய பணிகளைப் புரிந்துள்ளனர்.

முருகப்பெருமானின் வேண்டுதலுக்கிணங்க கொழும்பில் உள்ளவர்களுக்கு வேல்விழாவின் மகிமையை உணாத்தும் நோக்குடன், கொழும்பிலே வேல்விழா ஆரம்பமானது. இவேல்விழா ஆரம்பத்தில் செட்டியார்தெருவில் இலக்கம் 239 இல் உள்ள, ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயிலிலேயே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இக்கோயிலே பின்னர் பழைய கதிர்வேலாயுத சுவாமிகோயில் என அழைக்கப்பட்டது. கி.பி 1839 இல் இவ்வீதியில் உள்ள 251 ஆம் இலக்கத்தில் புதிய கதிர்வேலாயுத சுவாமி கோயில் கட்டப்பட்டது.

அதன் பின்னர் ஒரு வருடம் பழைய பழைய கதிர்வேலாயுத சுவாமி கோயிலில் இருந்து தங்க இரதத்தில் கதிர்வேலாயுதப்பெருமானும், அடுத்த ஆண்டு புதிய கதிர்வேலாயுத சுவாமி கோயிலில் இருந்து வெள்ளி இரதத்தில் முருகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதரராய் எழுந்தருளுவர். இவை முறையே 123 காலிவீதி பம்பலப்பிட்டியிலுள்ள உபய கதிர்காமங்களான பழைய கதிர்வேலாயுதர் கோயிலையும், 339 காலிவீதி பம்பலப்பிட்டியிலள்ள புதிய விநாயகர் கதிர்வேலாயுதர் கோயிலையும் வந்தடையும். வேல்விழாவின்போது இந்த இரதங்களிலே ஆரம்பகாலத்தில் கதிர்காமத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட பிரம்பு, மயில்தோகை போன்றவற்றையும் எடுத்துச்செல்வர். இவற்றை வெள்ளிப்பேழைகளிலே வைத்து செட்டியார்கள் பேணுவர். இக்கோயில்களின் நிலங்கள் 1852 க்கும் 1872 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிகளிலேயே வாங்கப்பட்டன. வருடாவருடம் இவ்வேல்விழா ஆர்பமாவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர், முதலாம் குறுக்குத் தெருவிலுள்ள செம்மாங்கோட்டார் ஆலயத்திலிருந்து காவடி இரதத்தில், முருகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதரராய் எழுந்தருளி, 359 காலிவீதியிலுள்ள செம்மாங்கோட்டுப்பிள்ளையார் கோயிலை வந்தடைவர். அங்கு இரு தினங்கள் வீற்றிருந்து பின்னர் பழைய இடத்தைச் சென்றடைவது வழக்கம்.

உபய கதிர்காமக் கோயிலில் இருதினங்கள் தங்கிய பின், பௌர்ணமி தினத்தில் கதிர்காமக்கந்தன் மாணிக்ககங்கையில் தீர்த்தமாடிய தீர்த்தத்தை எடுத்துவந்து சுவாமிக்கு அபிடேகம் செய்வர். பின்னர் மூன்றாம் நாள் மாலை மீண்டும் வேல், இரதமேறி செட்டியார் தெருவிலுள்ள பழைய இடத்தைச் சென்றடையும். பின்னர் இடும்பன் பூசையுடன் வேல்விழா இனிதே நிறைவுபெறும். வேல்விழா நடைபெறும் ஐந்து நாட்களும், தமிழ் நாட்டிலிருந்து வருகைதரும் இசைக்கலைஞர்களும், ஈழம்வாழ் கலைஞர்களும் இன்னிசைக் கச்சேரிகளை நடத்துவர். வேல்விழாவினை பல்லின மக்களும் ஒன்றிணைந்து கோலாகலமாகக் கொண்டாடுவர். தற்காலத்தில் இவ்வாலயத்திலே பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்தபோதிலும், ஆலயத்தின் அடிப்படை விதிகளில் எவ்வித மாற்றமும் ஏற்படாது, தனித்தன்மையுடன் விளங்கும் ஆலயமாக கொழும்பு பம்பலப்பிட்டி புதிய கதிர்வேலாயுத சுவாமி கோயில் விளங்குகின்றது.

'' உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன் பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தி வாழ்வே.''

வளரும்...

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உன்ளது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077




ALL DEBT SOLUTIONS CR PLAN

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# *குடும்ப வன்முறை - மணவிலக்கு வழக்கு* *கொரோனா காலத்தில் தொடர்ந்து அதிகரிப்பு* *காரணம் கணவனா? மனைவியா?*

(மலேசிய மடல்) - நக்கீரன்

கோலாலம்பூர், டிச.11:

மலேசிய இந்தியக் குடும்பங்களில் தற்போதைய கொரோனா காலத்தில் அதிகமான குடும்ப வன்முறையும் மணவிலக்கு கேட்டு வழக்கறிஞர்களை நாடுவதும் அதிகரித்து வருவதாக தகவல்கல் தெரிவிக்கின்றன.

இந்திய சமுதாயத்தில் கணவன் - மனைவி இடையே ஏற்படும் பிணக்கும் பூசலும் இந்த பத்து மாத காலத்தில் அதிகரித்து வருவது உண்மைதான் என சமூக ஆர்வலர்களும் வழக்கறிஞர்களும்கூட தெரிவிக்கின்றனர்.

பொதுவாக, கணவன் - மனைவி இருவரும் குடும்ப வாழ்க்கையில் நன்முறையைக் கையாண்டு வருவதால்தான் குடும்பம் என்னும் பல்கலைக்கழகம் காலம் காலமாக ஆல் போல் தழைத்து வருகிறது. அதேவேளை, சிற்சில குடும்பங்களில் நன்முறையைவிட வன்முறை அதிகரிக்கும்போது குடும்பத்தில் பல்வேறு சிக்கல் எழுகின்றன.



குடும்பங்களில் நிகழும் வன்முறை திடீரென்று நிகழ்ந்து விடாது. அது பலகட்டங்களைக் கடந்து முற்றும்போதுதான், அது கணவன் - மனைவி இருவருக்கும் இடையேயான வன்முறையாக மாறுகிறது என்று சிலாங்கூர் இந்தியர் மேம்பாட்டு இயக்கத்தின் தலைவர் முனைவர் திலகா சுப்பிரமனியன் தெரிவிக்கிறார்.

கணவன் - மனைவி இடையே ஏற்படும் மனக்கசப்பு, வெறுப்பு, தான் புறக்கணிக்கப்படுவதாக மனைவிக்கு ஏற்படும் எண்ணம், தான் அவமானப்படுத்தப் படுவதாக கணவனுக்கு தோன்றுவது, குடும்ப சுமை, பணியிடத்தில் ஏற்படும் மன அழுத்தம், ஷி'.ப்ட் வேலைக்கு செல்லும் கணவன் மனைவியிடையே ஏற்படும் சலிப்பு, பெரியவர்களை வீட்டில் பராமரிப்பது போன்ற காரணங்களால் கணவன் அல்லது மனைவிக்கு மனதில் காயம் ஏற்படுகிறது என்று சமூக ஆர்வலரும் பெண்ணியவாதியுமான திலகா சொல்கிறார்.



வாழ்க்கைப் பரபரப்பில் இதைப்பற்றி பகிர்ந்து கொள்ளவவோ அல்லது கலந்து பேசவோ நேரம் இல்லாமல் இருந்தது. வீட்டு வேலைகளைப் பார்த்து கொண்டு பிள்ளைகளையும் கவனித்துக் கொள்ளும் குடும்பப் பெண்கள் சுமக்கும் பளு அதிகமானது. இதில், வேலைக்கு செல்லும் பெண்களின் நிலை இன்னும் மோசம். காலையில் பிள்ளைகளைத் தயார்ப்படுத்தி பள்ளிக்கு அனுப்புவதில் ஆரம்பிக்கும் பரபரப்பு இரவு டியுஷன் வகுப்பில் இருந்து பிள்ளைகளை அழைத்துவருவதுவரை நீடிக்கும். இத்தகைய பரபரப்பில் பாதி பிரச்சினை மறந்தேவிடும். சில தானாக ஆறிவிடும். எந்த நேரமும் விறுவிறுப்பு தொற்றிக் கொண்டிருப்பதால் பிரச்சினைகளை ஒத்திப்போடுவது வழக்கமாக இருந்தது.

இப்போது அப்படி இல்லை பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்பும் வேலை இல்லை வகுப்புகளும் இணையம் ஊடாக நடைபெறுகிறது. இந்தச் சுழலில் கனவன் - மனைவி இருவருக்கும் முன்பைவிட அதிர நேரம் வீட்டில் ஒன்றாக இருப்பதால், கருத்துப் பரிமாற்றம் செய்யவும், வாக்குவாதம் புரியவும் தாராளமாக முடிகிறது.

இதில் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டால் சிக்கல் தீரும். மாறாக, ஒருவரை மற்றவர் புரிந்துகொள்ளவில்லை என்றாலோ, தான் சொல்வதுதான் சரியென்று வாதிட்டாலோ அங்குதான் மனதில் விரிசல் ஏற்படும்.



மனதளவில் பட்டும் படாமல் வேர்விடும் விரிசல் நிலை மாறி, இப்போது நேருக்கு நேர் சந்திப்பதால் கணவன் - மனைவி இருவரிடையே மனக்கசப்பும் வெறுப்பும் அதிகமாகி அது வன்முறையில் முடிகிறது என்று திலகா சொல்கிறார்.

இதற்கெல்லாம் சரியான தீர்வு, கணவன் - மனைவியிடமே இருக்கிறது. இருவரும் திறந்த மனதோடு இருக்க வேண்டும் இன்பம் - துன்பம் எதுவாயினும் சமமாக பகிர்ந்து கொள்ள வேண்டும் குறிப்பாக, ஒருவர்மீது மற்றவர் பற்று கொண்டிருக்க வேண்டும். இந்த மூன்றையும் கடைப்பிடிக்கும் எந்தத் தம்பதியும் பிரியவே மாட்டார்கள் என்றார் ஷா ஆலமைச் சேர்ந்த திலகா.

குடும்ப வன்முறை என்னும் எல்லையைக் கடந்து, மணவிலக்கு கோரும் தம்பதியர் இந்திய சமுதாயத்தில் அதிகரித்து வருவதாக மணவிலக்கு வழக்குகளை அதிகமாக கையாளும் இராஜேஸ்வரி தெரிவிக்கிறார்.

குடும்ப வன்முறை என்பது இதுதான் என வரையறுக்க முடியாது. மனதை காயப்படுத்தும் சொற்களை கணவனோ அல்லது மனைவியோ யார் பயன்படுத்தினாலும் அதுகூட வன்முறைதான் அடிக்க கையை ஓங்கினால், அதுவும் வன்முறைக் கூறுதான் என்று சொல்லும் வழக்கறிஞர் இராஜேஸ்வரி, சில குடும்பங்களில் கணவனைவிட அதிகமாக சம்பாதிக்கும் மனைவி, கணவனை சிறுமைப்படுத்துவம் உண்டு நாளடைவில் அதுகூட வன்முறைக்கு வித்திடலாம்.

சில மனைவியர், பாதி வேலையை கணவனுக்கு ஒதுக்கிவைத்துவிட்டு, அதை அவர்கள் முடிக்கும்வரை காத்திருப்பார்கள். சில குடும்பங்களில், மனைவியை அடிப்பதுதான் கணவனுக்கு அடையாளம் என்ற போக்கில் கணவர் செயல்படுவார்.

இன்னும் சில குடும்பங்களில், கணவன் மனைவி இருவருமே பேசிக் கொள்வதில்லை வேறு பல குடும்பங்களில் கணவனோ அல்லது மனைவியோ குடும்ப பந்தத்தைக் கடந்து மூன்றாம் தரப்பினருடன் தொடர்பில் இருப்பார்கள்.

இப்படி பற்பல காரணங்களாலும் கணவனும் மனைவியும் ஒருவர்மீது மற்றவர் வன்முறையை புரிவதுடன் மணவிலக்கையும் நாடுகின்றனர். இதில் குடும்ப வன்முறைக்குக் காரணம் கணவனா மனைவியா என்பதை சரியாக சொல்ல முடியாது. அதேவேளை, திடீரென்று வன்முறை நிகழாது. அது, முதலில் மனதளவில்தான் துளிர்விடும். அது முற்றும்போதுதான் உடல்வழி வெளிப்படும். அதற்கு இன்னொரு தரப்பும் காரணமாக இருக்கலாம்.



இந்த வகையில், மனைவியால் மனதாலும் உடலாலும் காயப்படும் கணவன்மாரும் பல குடும்பங்கலில் உண்டு என்று சொல்லும் இராஜேஸ்வரி, இத்தகையப் போக்கு கடந்த ஒன்பது மாத கால கொரோனா பருவத்தில் அதிகரித்திருக்கிறது என்பதுதான் வேதனை.

கொரோனாவின் தாக்கம் உலகத்திற்கே பொதுவானது. வேலை இழப்பு அல்லது சம்பளக் குறைப்பினால் ஏற்படும் நிதி பற்றாக்குறை உள்ளிட்ட சிக்கலை ஏற்றுக்கொண்டு சமாளிக்கவும் எதிர்காலத்தையும் குடும்ப நலனையும் குறிப்பாக பிள்ளைகளையும் நினைத்து வாழ்க்கையை வாழத்தான் முற்பட வேண்டுமேத் தவிர, எதிர்கோணத்தில் சிந்திப்பது, மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்தும். அது, சம்பந்தப்பட்ட கணவன் மனைவியோடு வரையறுக்கப்படுவதில்லை. ஒட்டுமொத்த குடும்பத்தையே குலைத்துவிடும் என்பதால் கணவன்-மனைவிக்கு நிதானமும் பொறுமையும் அதிகம் தேவை. அதைவிட, ஒருவருக்கொருவர் உண்மையும் நேர்மையும் இன்னும் அதிகம் தேவையென்று மின்னல் பண்பலை வானொலியில் இராஜேஸ்வரி தெரிவித்தார்.

குடும்ப வன்முறை குறித்து சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு மின்னல் பண்பலை வானொலியில் அதன் அறிவிப்பாளர்கள் சுகன்யா சதாசிவமும் திரேசாவும் சமூக அக்கறையுடன் ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில் திலகாவும் இராஜேஸ்வரியும் தங்களின் கருத்தை மேற்கண்டவாறு பதிவு செய்தனர்.

**நக்கீரன்** - Nakkeeran 013-244 36 24


உங்கள் பணத்தேவைகளுக்கு
குறைந்த வட்டிவீதத்தில் அடைவு பிடிக்கப்படும்



PAWN BROKERING

பழைய பவுண்கள் நியாயமான விலையில்
பெற்றுக்கொள்ளப்படும்

Cash Point



துரித பணமாற்றுச்சேவை
வெளிநாட்டு நாணயங்கள்
வாங்கவும் விற்கவும்.

Cash Point

3852 FINCH AVENUE EAST,. UNIT G30,
SCARBOROUGH, ON, M1T 3T9
TEL: 416-284-7000

- மொன்றியல் வீணைமைந்தன் எழுதுகின்றார்

#25

# சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

தமிழ்த் திரையுலகின் பல வெள்ளிவிழாப் படங்களின் நாயகன் நடிகர் திலகம் அவர்களைப்பற்றிய 25வது வார அதாவது வெள்ளிவிழா கட்டுரை இதுவாகும். தொடர்ந்து வாசித்து வரும் அன்பர்கள் இடையிடையே உங்கள் வாசிப்பு ரசனையை வெளிப்படுத்தினால் இக்கட்டுரை தொகுப்பு நூல் வடிவில் வரும் போது உங்களது குறிப்புகளும் அந்நூலில் இடம் பெற விரும்புகிறேன். எனவேதான் தொடர்ந்து வாசியுங்கள்! நேசியுங்கள்!



நடிகர் திலகத்தின் நாயகிகள் அனைவருமே திறமைவாய்ந்த கலைஞர்கள்தான். சந்தேகமேயில்லை, இவரால் தான் இந்த பாத்திரம் சோடை போகாமல் செய்ய முடிந்தது என அறுதியிட்டுக் கூறக் கூடிய அளவிற்கு ஆற்றல் வாய்ந்த பலர் நடித்துள்ளார்கள். சிலருடன் இணையும்போது அவர்களுக்கிடையே உள்ள கெமிஸ்ட்ரி - ரசாயன பந்தம் அளப்பரியதாகும். குறிப்பாக எனது கணிப்பில் நாட்டிய பேரொளி பத்மினி, சாவித்திரி, தேவிகா, உஷா நந்தினி, வாணிஸ்ரீ, கேஆர்விஜயா, சுஜாதா, சௌகார் ஜானகி போன்றவர்கள் சிவாஜி அவர்கள் பாத்திர உணர்வுகளுக்கும் உடல் மொழிக்கும் ஈடு கொடுப்பதில் வல்லமை படைத்தவர்களாகும். குணசித்திர படைப்புகளில் தோன்றிய திருமதி பி கண்ணாம்பா, திருமதி எம். வி ராஜம்மா இருவரும் மற்றவர்களால் நிரப்ப முடியாத திறமையும் வாய்மொழியும் கொண்டவர்களாகவும் பல படங்களை உதாரணமாக கூறமுடியும். இங்கு நான் சங்க இலக்கியமான முத்தொள்ளாயிரத்தில் பாடப்பெறும் தலைவன் தலைவி காதல் உணர்வுகளைப் பிரதிபலிப்பது போல் ரசாயன மாற்றத்திற்கு உள்ளாகும் ஜோடிகளாக பார்க்கப்பட்ட ஒருவராகிய திருமதி வாணிஸ்ரீ பங்குகொண்ட பாத்திரமாகிய “வசந்த மாளிகை“ லதா முக்கியமானவர் ஆகிறார்.

1952 இல் இருந்து 1987 வரை ஆண்டுதோறும் சராசரி 8 படங்கள் சிவாஜியின் படங்களாக வெளியாகின. சில வருடங்களில் ஆண்டுக்கு பத்துக்கும் மேற்பட்ட படங்கள் வெளிவந்தன. சுமார் 35 ஆண்டுகள் வரை இந்த சாதனையை எந்த நடிகர்களும் முறியடிக்க முடியவில்லை. நடிகர்திலகம் அவர்களது முதலாவது படமான “பராசக்தி“யே வெள்ளிவிழாக் கண்ட படமாகும். 1952 லிருந்து 1993 வரை 41 படங்கள் தீபாவளி வெளியீடாகும். சிவாஜி ஐயா ஒரு தீபாவளி கதாநாயகன். அதாவது 1952-ஆம் ஆண்டு வந்த பட்டாசுகளும் மத்தாப்பு மின்னல்களும் வெடித்து ஒளி சிந்திய ஒரு தீபாவளி நன்னாளில் “பராசக்தி“ திரைப்படத்தின் வண்ணப்பட்டாசுகள் தமிழகமெங்கும் வெடித்து புரட்சி முழக்கமிடத் தொடங்கியது. அதுவரை திருமணம், திருவிழா, பொதுக்கூட்டம், கண்காட்சி போன்ற விழாக்கள், வைபவங்கள் எங்கும் திரைப்பாடல்கள் அல்லது சங்கீத இசை ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தன. கலைஞர் மு க வின் வற்றாத தமிழில் பெருக்கெடுத்து ஓடிய உயிர்த்துடிப்பான புரட்சி வசனங்களை புது நாயகன் தமிழ்ச்செல்வன் சிவாஜி கணேசன் அவர்கள் உச்சரிக்க தொடங்கியதும், பாரதியின் முறுக்கு மீசை போல் தமிழர்தம் முகங்களிலும் நெஞ்சங்களிலும் தமிழ் மீண்டும் உட்கார தொடங்கிவிட்டது. திரைப்பாடல்களும், கர்நாடக இசைப்பாடல்களும் ஒலித்த விழா மேடைகளிலும், வீடுகளிலும்... “நீதிமன்றம் விசித்திரம் நிறைந்த பல வழக்குகளை சந்தித்திருக்கிறது... புதுமையான மனிதர்களைக் கண்டிருக்கிறது.... ஆகவே இவ்வழக்கு விசித்திரமும் அல்ல.... வழக்காடும் நான் புதுமையான மனிதனுமல்ல... வாழ்க்கைப் பாதையிலே சர்வ சாதாரணமாகக் காணக்கூடிய ஜீவன் நான்...”, என்று ஆரம்பிக்கும் “பராசக்தி“ வசனங்கள் தமிழ் மக்களின் இன்னொரு திருக்குறள் ஆயிற்று. அன்று முதல் தமிழர்கள், “தமிழுக்குக் குரல் வடிவமும், ஒலி வடிவமும் ஒழுங்காக கொடுத்து தமிழ்முழக்கம் செய்யப் புறப்பட்டார்கள். நான் கூட பின்னாளில் தமிழ் அறிந்தபின் மனனம் செய்த பதிகம் பராசக்தி உரையாடல்களேயாகும். எங்கள் தாயார் பராசக்தி வெளிவந்த காலத்தில் 1952 பிரசவித்த பெண் குழந்தைக்கு (எனது சகோதரி) “பராசக்தி“ என்றே பெயர் சூட்டி மகிழ்ந்தார். அதுவரை உலக மாதவின் பெயரை தெரிந்திருந்தும் தங்கள் வீட்டுப் பெண் பிள்ளைக்கு பராசக்தி என பெயர் சூட்டுவது அரிது. விபரம் தெரிந்த பின் 1952-1955 ற்கிடையே தமிழர் தம் இல்லங்களில் பிறந்த பலநூறு பெண்குழந்தைகளுக்கு பராசக்தி பெயர் பிரபலமாயிற்று. இந்தப் பாதிப்பை ஏற்படுத்தியவர்கள் கலையுலகில் முதல் மரியாதைக்குரிய பெரியவர் நடிகர்திலகம் அவர்களே!

ஆக, சிவாஜி ஐயா அவர்களுக்கு ஆரம்ப படமாக அமைந்த “தீபாவளி“ வெளியீடு போல் ஆண்டுதோறும் அவரது தீபாவளி வெளியீடுகள் அவரது வளர்ச்சிக்கும், புகழுக்கும் முக்கியமாகிறது. 22 படங்கள் 100 நாட்கள், 8 தடவை 2 படங்கள் தீபாவளி வெளியீடு. 5 படங்கள் 175 நாட்கள், 3 படங்கள் 200 நாட்கள், அந்த வகையில் 52 லிருந்து 93 வரை வெளியான 41 படங்கள் பல நூறு நாட்களை கடந்தது சில வெள்ளிவிழா படங்களாயின. (25 வாரங்கள்) ஒரே சமயத்தில் இரு படங்கள் கூட வெளிவந்து வெற்றி விழா கொண்டாடியது.



தினசரி 3 சிப்ட் (7 - 1), (2 - 6), (7 - 12) என வெவ்வேறு ஸ்டுடியோக்களில் தயாராகும் படங்களில் வெவ்வேறு கதையம்சம் உள்ள பாத்திரங்களில் தோன்றி கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக இடைவிடாது பணிபுரிந்து பல தயாரிப்பாளர்களுக்கும் சினிமாவை நம்பியே தொழில் புரிபவர்களுக்கும் வாழ்வாதாரம் வழங்கிய அட்சய பாத்திரம் சிவாஜி அவர்கள். பூஜை போட்ட நாளிலேயே எல்லா ஏரியாக்களும் விற்பனையாகி விடும். கோடம்பாக்கத்தின் பொன்முட்டையிடும் வாத்து என்பார்கள் விபரம் அறிந்தவர்கள். தமிழக அரசுக்கு வரிப்பணமாக இவரது பங்களிப்பும், இவரை நம்பி முதலீடு செய்பவர்களும் வழங்கிய தொகை அளப்பரியதாகும். வசூல் புள்ளிவிபரங்களை நான் இங்கு குறிப்பிடவில்லை. தமிழ் திரையுலகின் சொத்து என கால் நூற்றாண்டுக்கு மேலாக பணியாற்றிய பெருமகனார் சிவாஜி! இந்திய சினிமா மூலம் அரசுக்கு வருமானம் பெருக்கிய உயரிய புருஷர். இவ்வகையில் 1972ஆம் ஆண்டு வெளியான “ராஜா“ “ஞான ஒளி“ “பட்டிக்காடா பட்டணமா“ “தர்மம் எங்கே“ “தவப்புதல்வன்“ “வசந்தமாளிகை“ “நீதி“ என ஏழு படங்கள் வெளிவந்து 100 நாட்களை கடந்து வெற்றி கண்டது. அதில் “வசந்தமாளிகை“ மதுரையிலும் கொழும்பிலும் 250 நாட்களுக்கும் மேல் ஓடி வெள்ளிவிழா கடந்து வெற்றிப்படமாயிற்று. அதேபோல் மாதவன் இயக்கத்தில் வெளியான “பட்டிக்காடா பட்டணமா“ வெள்ளிவிழா படமாகும். இவற்றுள் வாணிஸ்ரீ கதாநாயகியாக நடித்து வெளிவந்து வெள்ளிவிழா கண்ட “வசந்த மாளிகை“ எவராலும் மறக்க முடியாத காதல் காவியமாகும். முன்பே நான் கூறியவாறு சிவாஜி - வாணிஸ்ரீ ஜோடி இடையே உருவாகும் ரசாயனப் பந்தம் நினைந்து நினைந்து மகிழத்தக்கது. வாணிஸ்ரீ அவர்கள் சிவாஜியுடன் இணைந்து “வாணி ராணி“ “சிவகாமியின் செல்வன்“ “இளைய தலைமுறை“ “ரோஜாவின் ராஜா“ “நல்லதொரு குடும்பம்“ “நிறைகுடம்“ “புண்ணியபூமி“ “உயர்ந்த மனிதன்“ என பல படங்களில் பங்கு பெற்று இருந்தாலும் அம்மையாருக்கு புகழ் தந்த சினிமாவின் சிவாஜியின் 125 வது படமான ஏவிஎம்மின் “உயர்ந்த மனிதனும்“ டி.ராமா நாயுடுவின் “வசந்த மாளிகை“யும் என்றும் பேசப்படக்கூடிய சிறந்த படங்களாகும்.

மீண்டும் இருவரையும் அந்த காதல் மாளிகைக்குள் அழைத்துச் செல்கிறேன். நீங்களும் உடன் வாருங்கள். (இருவரது உரையாடலிலிருந்து...

ஆனந்த்: லதா... இந்த இதயம் இருக்கே அதை ஒருத்தருக்கு கொடுக்காத வரைக்கும் விசாலமாயிருக்கும். கொடுத்ததுக்கு அப்புறம் ரொம்ப சுருங்கிப் போய்விடும். அடுத்தவங்களுக்கு கொடுக்க சம்மதிக்காது.

லதா: அப்படி என்றால் உங்கள் இதயம்...!

ஆனந்த்: அதை ஒரு தேவதைக்கு அர்ப்பணித்து விட்டேன். அந்த அன்பு தெய்வம் குடியிருக்கும் கோயிலை நீ பார்க்க வர்றீயா?

லதா: பார்க்கிறேன்..

ஆனந்த்: வா.. பார்.. பார் என் காதல் தேவதைக்கு நான் கட்டியிருக்கும் இந்த ஆலயத்தை பார்! உள்ளத்திலே படர்ந்திருக்கும் முல்லைக் கொடிக்கு நான் அமைத்திருக்கும் இந்த பந்தலைப்பார்! என் இதய சாம்ராஜ்ஜிய தலைவியின் ஆட்சி ஆரம்பமாகப்போகும் அன்பு மாளிகையைப் பார்! என் கண்களைத் திறந்து விட்ட காதல் தெய்வம் காலமெல்லாம் களித்திருக்க நான் கட்டிய வசந்த மண்டபத்தை பார்! வானத்து நிலா நீராட இறைவன் மேகத்தைப் படைத்தான். என் வாழ்வின் நிலா நீராட இந்த பொய்கையை படைத்தேன். இது இறந்துபோன ராணிக்காக கட்டப்பட்ட தாஜ்மஹால் அல்ல! உயிரோடு இருக்கும் என் காதலிக்காக கட்டப்பட்ட வசந்த மாளிகை! இது சமாதி அல்ல! சன்னிதி! ..ஆண்டவன் மட்டும் எனக்கு பறக்கும் சக்தியை கொடுத்திருந்தால் ஆகாயத்திலே மின்னிக் கொண்டிருக்கும் அத்தனை நட்சத்திரங்களையும் எடுத்து வந்து தோரணமாக கட்டி தொங்கவிட்டு இருப்பேன். வானத்து நிலவைப் பறித்து வந்து இந்த வசந்த மாளிகைக்கு வண்ண விளக்காக அமைத்திருப்பேன்! என்ன செய்வது! எனக்கு அந்த சக்தி இல்லையே..! சக்தி இல்லையே...! என்ன பார்க்கிறாய்...!



லதா: இந்த அளவிற்கு உங்கள் இதயத்தில் குடிகொண்டிருக்கும் அந்த பாக்கியவதி எங்கே என்று பார்க்கிறேன்.

ஆனந்த்: அவளைப் பார்க்க வேண்டுமா... வா என்னோடு... உள்ளே சென்று பார்! ...அங்கு தான் என் இதயம் இருக்கிறது. அவளும் இருக்கிறாள்..! நீ திரும்புகின்ற திசையெல்லாம் அவள் திருவுருவம் தான் காட்சியளிக்கும். காதலிக்கத் தெரியாதவனையும் காதல் செய்ய வைக்கும் பாலமுருகனின் வசனங்கள் நிறைந்தகாட்சி இது!

”சிலப்பதிகாரக் காவியத்தில் வரும்
மனையறம் படுத்த காதையில்
இளங்கோவடிகள் சொல்லிய காதலர் போன்று
...“கழுநீர்ப் பிணையல் முழுநெறி பிறழத்
தாரும் மாலையும் மயங்கிக், கையற்றுத்
தீராக் காதலின் திருமுகம் நோக்கிக்
கோவலன் கூறும் ஓர் குறியாக் கட்டுரை..!
போன்று
நடிகர் திலகமும், தேவிகாவும்
தாரும் மாலையுமாகி மயங்கிய காட்சியை
அடுத்த இதழில் காண்போம்.

## வீணாவின் கிறுக்கல்

### உடலுக்கு உயிர் கூறும் கருத்து

உருவற்ற உயிருக்கு
உரு கொடுத்த உடலே,
நான் உன்னை
விட்டுப்போனால்
பிணமாவாய் நீயே,
பிணத்தோடு வாழ்பவன்
எவனுமில்லை இன்று,
அதை நீயும் மறந்து
ஏன் ஆடுகின்றாய் இங்கு.

# இவ்வார ராசிபலன்

**11-12-2020 வெள்ளி தொடக்கம் 17-12-2020 வியாழன் வரையும்**




**மேஷம்:** வேண்டாத நட்புக்கள் விலகி ஓடக்கூடிய வாரம். புது முயற்சிகள் பலன் அளிக்கும். பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். ஏற்றம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். பாலிய நண்பர் சந்திப்பு கிட்டும். பொருளாதாரம் மேம்படும். பேச்சில் கவனம் தேவை. கடன் பாக்கிகள் வசூலாகும். வாகன யோகமுண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. அதிகாரம் குவியும். சகோதர வழியில் கவனம் தேவை.

வழிபடவேண்டிய தெய்வம்: கைலாசநாதப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S




**ரிஷபம்:** கண்ணும் கருத்துமாக செயல்பட்டு பொன்னும், பொருளும் சேர்க்கக்கூடிய வாரம். கடன்சுமை குறையும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். சுப காரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பணநடமாட்டம் கூடும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப் பயணம் இனிக்கும். அணிமணிகள் சேரும்.பெண்களுக்கு யோகம் கூடும். பணப்புழக்கம் சரளமாகும். பைரவ வழிபாட்டால் பாவம் தீரும்.

வழிபடவேண்டிய தெய்வம்: அங்காள பரமேஸ்வர், அதிர்ஷ்ட எண்: 4,2,1,0
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**மிதுனம்:** வெறுப்புக்கள் விலகி பொறுப்புக்கள் சேரக்கூடிய வாரம். சுப காரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். தென்றல் வீசும். எதிர்ப்புகள் விலகும். நோய் அகலும். பெயர், புகழ், கௌரவம், செல்வாக்கு உயரும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டமாகும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும்.

வழிபடவேண்டிய தெய்வம்: கனக துர்க்கை அம்மன், அதிர்ஷ்ட எண்: 5,1,5,0
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J




**கடகம்:** கலக்கமான சூழ்நிலைகள் விலகி இணக்கமான சூழ்நிலைகள் ஏற்படக்கூடிய வாரம். பழைய பகை மாறும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பிள்ளைகளால் பெருமை கூடும். புது முயற்சிகள் தள்ளி வைக்கவும். தனவரவுகள் தடைப்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். உற்சாகம் அதிகரிக்கும். திடீர் செலவு ஏற்படும். மங்கல செய்தியால் மனம் மகிழும்.

வழிபடவேண்டிய தெய்வம்: அய்யனார் சுவாமி, அதிர்ஷ்ட எண்: 9,3,2,7
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,R




**சிம்மம்:** துயரங்களை துடைத்தெறிந்து உயரங்களை சந்திக்கக்கூடிய உன்னதமான வாரம். ஆடம்பர செலவு அதிகரிக்கும். மாற்று இன நட்பு பெருகும். வயிற்று உபாதை வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிவிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். ஆனந்தம் குடிக்கொள்ளும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். பேச்சில் கனிவு தேவை. களவுப் போன பொருள் திரும்ப கிடைக்கும்.

வழிபடவேண்டிய தெய்வம்: அக்னிலிங்கப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 3,2,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,V




**கன்னி:** நட்டமில்லாத நன்மைகளை சந்திக்கக்கூடிய வாரம். இடமாற்றம் நன்மைத் தரும். குடும்ப அன்யோன்யம் பலப்படும். உத்தியோக உயர்வு கிட்டும்.பூமி வாங்கும் யோகம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். உடன் பிறப்புகளால் உதவி கிட்டும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். மேன்மையான நாள். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும்.

வழிபடவேண்டிய தெய்வம்: பட்டத்தரசியம்மன், அதிர்ஷ்ட எண்: 7,1,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,F




**துலாம்:** பொறுமையை கடைப்பிடித்து பொறாமையை விரட்டியடிக்கக் கூடிய நாளாக உள்ள வாரம். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். உற்சாகம் கலை கட்டும். உறவினர் வருகை உண்டு. ஆறுதலான சூழ்நிலை அமையும். பணியில் உயர்வு கிட்டும். கஷ்டகாலம் மறையும். பணிவும், துணிவும் கூடும். விவேகமான வாரம். வெளியூர் பயணம் வெற்றி தரும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும்.

வழிபடவேண்டிய தெய்வம்: ஹோரம்ப கணபதி, அதிர்ஷ்ட எண்: 9,7,1,0
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,Q




**விருச்சிகம்:** உன்னதமான கிருபைகளும் உண்மையான நன்மைகளும் நடக்கக்கூடிய வாரம். வாகன மாற்றம் உண்டாகும். மன அமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர்கள் நலனில் அக்கறை கூடும். எதிரிகளின் தொல்லை குறையும். தொட்டது துலங்கும் நாள். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

வழிபடவேண்டிய தெய்வம்: வீர அண்ணாமலையார், அதிர்ஷ்ட எண்: 5
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M




**தனுசு:** முத்தாய்ப்பான முன்னேற்றங்களை சந்திக்கக்கூடிய வாரம். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். ஆபரணப் பொருள் களவுப் போகும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். உறவினர் வருகை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும்.

வழிபடவேண்டிய தெய்வம்: ஜலகண்டேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 4,1,7,8
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,J




**மகரம்:** விருப்பங்கள் நிறைவேறி திருப்பங்கள் நடக்கக்கூடிய வாரம். எலக்ட்ரிக்கல் தொழில் லாபம் தரும். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பெயர், புகழ் கௌரவம் செல்வாக்கு உயரும். பொதுப் பணிகளில் ஆர்வம் ஏற்படும். திருமணத் தடைகள் நீங்கும். புதுத் தொழிலை துவங்கும் வாய்ப்பு உள்ளது. வெளியூர் பயணம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். எண்ணிய காரியம் கை கூடும். புண்ணியஸ்தலம் செல்வீர்கள்.

வழிபடவேண்டிய தெய்வம்: தேவி செல்வநாயகி, அதிர்ஷ்ட எண்: 9,4,0,7
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,R




**கும்பம்:** பணவரவும், பாராட்டும் கிடைக்கக்கூடிய வாரம். இனிப்பான செய்திகள் வரும். பழிச்சொல்லிலிருந்து விடுபடுவீர்கள். சொத்துப் பிரச்சனைகள் தீரும். பணியாட்களால் தொல்லை மாறும். கல்வியில் மந்த நிலை மாறும். ஜவுளித் தொழில் உயர்வு தரும். கலைத் தொழில் திருப்பம் வரும். அலுவலகங்களில் பாராட்டு குவியும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மற்றவரின் தொல்லைக் குறையும். பிரித்து குடும்பம் ஒன்று சேரும்.

வழிபடவேண்டிய தெய்வம்: மாங்கல்யேஷ்வரர், அதிர்ஷ்ட எண்: 1,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,U




**மீனம்:** கண்ணியமான புண்ணியம் கிடைக்கக்கூடிய வாரம். மனம் மகிழும் நாள். உழைப்பிற்கான பலனை பெறுவீர்கள். திறமைகள் அதிகமாகும். இன்னல்கள் அகலும். கடன் தீரும். ஆக்கம் அதிகரிக்கும். பழைய பாக்கி வசூலாகும். வியாபாரத்தில் கவனம் தேவை. தன வரவில் தடங்கல் உண்டு. புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். பழைய நட்பு பலன் தரும். உறவினரால் பாதகம் உண்டு. உடல் நலனில் அக்கறை தேவை. உலோகத் தொழில் உயர்வு தரும்.

வழிபடவேண்டிய தெய்வம்: அன்னமார் சுவாமி, அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377


# தமிழகத்தில் தொடரும் சிலை திருட்டு: திருப்போரூர் கோவிலில் மூன்று சிலைகள் மாயம்

**சிவா பரமேஸ்வரன் - மூத்த செய்தியாளர்**

சென்னையை அடுத்துள்ள திருப்போரூரில் பழமை வாய்ந்த கங்கையம்மன் ஆலயத்திலிருந்து மூன்று சிலைகள் காணாமல் போயுள்ளது பெரும் பரபரப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.



பழைய மகாபலிபுரம் சாலையில் சென்னையிலிருந்து சுமார் 30 கிமீ தூரத்திலுள்ள திருப்போரூர் சரித்திர ரீதியாக மிகவும் புகழ்பெற்ற பகுதியாகும். இங்குள்ள முருகன் ஆலயம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பல்லவர்களால் கட்டப்பட்டது என்று நம்பப்படுகிறது.

அதுமட்டுமின்றி திருப்போரூரில் சிறு தெய்வ வழிபாட்டு ஆலயங்கள் பலவுள்ளன. எனினும் அவ்வகையிலுள்ள பல கோவில்களில் போதிய பராமரிப்பும் பாதுகாப்பும் இல்லை என்று பல ஆண்டுகளாக பொதுமக்கள் கூறி வருகின்றனர். இந்நிலையில் கடந்த வியாழனன்று (3/12/20) காலையில் பூசாரி கோவில் கதவைத் திறந்த போது அங்கிருந்த மூன்று சிலைகள் கொள்ளையடிக்கப்பட்ட தைக் கண்ட அவர் உடனடியாக நிர்வாகிகள் மற்றும் காவல்துறைக்குத் தகவல் தெரிவித்தார்.

அந்தக் கோவிலில் தனித்தனி சன்னதிகளிலிருந்த சுமார் ஒன்றரை அடி உயரமுள்ள சாமுண்டி, துர்கை மற்றும் பிரம்மகி ஆகிய தெய்வங்களின் சிலைகளே காணாமல் போயுள்ளன என்று ஆலயப் பூசாரி கூறுகிறார். இது தொடர்பாக வழக்குப் பதிவு செய்த காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தமிழகத்தில் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் பல்வேறு கோவில்களில் உள்ள சிலைகள் தொடர்ந்து மர்ம நபர்களால் கொள்ளையடிக்கப்பட்டு வருகின்றன.

பல கோவில்களில் பாதுகாப்பில்லைக் எனக் கூறி தாக்கல் செய்யப்பட்ட பொதுநல மனுவை சென்னை உயர் நீதிமன்றம் விசாரித்து வரும் நிலையில் தொடர்ச்சியாக பல ஆலயங்களில் சிலைகள் திருடப்படுவதும், உண்டியல்கள் உடைக்கப்பட்டுக் கொள்ளையடிக்கப்படுவதும் தொடர்ந்து நடைபெறுகின்றன. அதிலும் குறிப்பாக புறநகரங்களிலுள்ள கோவில்களிலேயே இப்படியான சமூக விரோதச் செயல்பாடுகளும் கொள்ளைச் சம்பவங்களும் இடம்பெறுகின்றன.

காணாமல் போயுள்ள அந்தச் சிலைகள் எந்த காலகட்டத்தைச் சேர்ந்தவை மற்றும் எந்த உலோகத்தில் செய்யப்பட்டவை என்பது குறித்து இதுவரை தெளிவான தகவல்கள் இல்லையென்றாலும் அவை ஐம்பொன்னாலான சிலைகள் என்று உறுதி செய்யப்படாத தகவல்கள் கூறுகின்றன.

# கொரோனா தொற்று : கிழக்கில் 371, கல்முனையில் 225, அக்கரைப்பற்றில் 192

கிழக்குமாகாணத்தில் கொரோனாத்தொற்றுகளின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துச்செல்கிறது.

- கிழக்கில் இதுவரை 371 பேர் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

அதேவேளை

- கல்முனைப்பிராந்தியத்தில் 225பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.
- அந்தப்பிராந்தியத்தில் புதிதாக உருவான அக்கரைப்பற்றுக் கொத்தணி மூலமாக இதுவரை 192பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவ் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம்.

கல்முனைப்பிராந்தியத்தில் புதிதாக அட்டாளைச்சேனையில் திடீர் அதிகரிப்பு காணப்பட்டுள்ளது. அங்கு இதுவரை 22பேர் தொற்றிலுள்ளனர். இவர்களில் மினுவாங்கொட கொத்தணி மற்றும் ஏனைய இடங்கள்மூலமாக23பேரும்பேலியகொட கொத்தணிமூலமாக348பேரும்தொற்றுக்கிலக்காகியிருந்தனர். கல்முனைப்பிராந்தியத்தில் புதிதாக உருவெடுத்த அக்கரைப்பற்று கொத்தணி மூலம் என்ற 225 தொற்றாளிகளுடன் கல்முனைப்பிராந்தியம் முன்னணி வகிக்கிறது. முதலாவது அலையில் இருவர். ஆக இங்கு கடந்த மார்ச் மாதத்திலிருந்து 225பேர் தொற்றுக்கிலக்காகியுளளனர்.

இறுதியாக சம்மாந்துறையில் 4பேரும் சாய்ந்தமருதில் 4பேரும் நற்பிட்டிமுனையில் ஒருவருமாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இதுவரை கிழக்கில் பேலியகொட கொத்தணி மூலமாக:

- மட்டக்களப்பு மாவட்டத்தில் 94பேரும்
- கல்முனை பிராந்தியத்தில் 225பேரும்
- திருமலை மாவட்டத்தில் 16பேரும்
- அம்பாறை பிராந்தியத்தில் 13பேரும் தொற்றுக்கிலக்காகியுள்ளனர்.

கிழக்கில் தற்போதைய நிலைவரப்படி கல்முனைப்பிராந்தியம் 225 தொற்றுக்களுடன் முன்னிலைவகிக்கிறது. அதிலும் னபுதிதாக உருவான அக்கரைப்பற்று கொத்தணி 192 அதிகூடுதலான தொற்றுக்களை கொண்டிருக்கிறது. கிழக்கிலே அதிகூடிய தொற்றுள்ள தனியொருபிரதேசமாக அக்கரைப்பற்று மாறியுள்ளது.

அடுத்ததாக வாழைச்சேனை கோறளைப்பற்று மத்திபிரிவில் அதிகூடிய தொற்றுக்கள் 60 இனங்காணப்பட்டிருந்தன.அடுத்தபடியாக இறக்காமத்தில் 11பேரும் ஏறாவூரில் 10பேரும் இனங்காணப்பட்டிருந்தனர். - சிகிச்சை நிலையங்களில் 1387 அனுமதி கிழக்கிலுள்ள ஐந்து கொரோனா சிகிச்சை நிலையங்களில் தற்போது 368 கொரோனாத் தொற்றாளர்கள் சிகிச்சை பெற்றுவருகின்றனர். நேற்று (07.12.2020) வரை 1387பேர் மேற்படி 5 வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு அவர்களில் 1012பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 07பேர் இடமாற்றப்பட்டுள்ளனர். இன்னும் 95கட்டில்கள் எஞ்சியுள்ளன. காத்தான்குடி சிகிச்சை நிலையத்தில் நேற்றுவரை 509பேர் அனுமதிக்கப்பட்டு 380பேர் குணமடைந்து வெளியேறியதால் தற்போது 125பேர் தங்கியிருந்து சிகிச்சைபெற்று வருகின்றனர். நால்வர் இடமாற்றப்பட்டிருந்தனர். இன்னும் 5கட்டில்கள் எஞ்சியுள்ளன. மேலும் கரடியனாறு சிகிச்சை நிலையத்தில் 20 பேரும் பதியத்தலாவ சிகிச்சை நிலையத்தில் 67பேரும் பாலமுனை சிகிச்சை நிலையத்தில் 80 பேரும் சிகிச்சை பெற்றுவருகின்றனர். - 15829பேருக்கு பிசிஆர் பரிசோதனை இதுவரை கிழக்கில் 15829பேருக்கு பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவற்றுள் அக்கரைப்பற்று கொத்தணிப்பகுதியில் மட்டும் 5056 பிசிஆர் அன்ரிஜன்ற் சோதனை நடாத்தப்பட்டது.


- கல்முனைப்பிராந்தியத்தில் 6912 சோதனைகளும்
- மட்டக்களப்பில் 5874 சோதனைகளும்
- அம்பாறையில் 1626சோதனைகளும்
- திருகோணமலையில் 1406சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அக்கரைப்பற்று கொத்தணியில் 192.

புதிதாக உருவான அக்கரைப்பற்றுக்கொத்தணியில் இதுவரை 192பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டிருக்கிறது.

அக்கரைப்பற்று பொதுச்சந்தையிலிருந்து இதுவரை அக்கரைப்பற்றில் 139பேரும் அட்டாளைச்சேனையில் 22பேரும் சாய்ந்தமருதில் 11பேரும் ஆலையடிவேம்பில் திருக்கோவிலில் தலா 7பேரும் இறக்காமம் 5பேரும் கல்முனை வடக்கில் ஒருவருமாக மொத்தம் 192பேர் பிசிஆர் மற்றும் அன்ரிஜன் பரிசோதனையின் மூலமாக இனங்காணப்பட்டுள்ளனர்.

# மன்னர் நாயகத்திற்கும் மக்கள் நாயகத்திற்கும் பாலம் சமைத்தவர் தேசத் தந்தை துங்கு அப்துல் ரகுமான்



மலேசிய மடல்

கோலாலம்பூர், டிச.06:

குமரிக் கடலின் ஊடாக பரிமாற்றம் செய்யப்பட்ட தாம்பூல பரிமாற்றம், வெற்றிலைப் பயன்பாடு, மஞ்சள் மகிமை, பள்ளாங்குழி விளையாட்டு உள்ளிட்ட தமிழியப் பண்பாடும் நாகரிகமும் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக பிரதிபலிக்கும் கெடா அரண்மனை வாசத்துடன் வளர்ந்த கோமான் தேசத் தந்தை துங்கு அபப்துல் ரகுமான்.

மலையகவாழ் மக்களால் தேசத் தந்தை என்றும் சுதந்திர தந்தை எனவும் போற்றப்படுகின்ற துங்கு அப்துல் ரகுமான் மலேசியாவின் முதல் பிரதமர். மன்னர் நாயகத்திற்கும் மக்கள் நாயகத்திற்கும் பாலம் சமைத்த இவர், ஆசிய மண்டலத்திலும் மேலை நாடுகளிலும் சமதருமவாதி என்று கருதப்பட்டவர்.



ஈராயிர ஆண்டுகளுக்கு முன்னம் கடார மண்டலத்தில் ஆட்சி செய்த இந்து-பௌத்த கூட்டு அரச பரம்பரையைச் சேர்ந்தவர்தான் துங்கு அப்துல் ரகுமான். இவரின் தந்தையும் கெடா மாநிலத்தின் 24-ஆவது சுல்தானுமாகிய சுல்தான் அப்துல் ஹமீட் ஹலீம் ஷா, உண்மையில் கெடாவின் 32-ஆவது ஆட்சியாளர் ஆவார்.

ஆரம்பத்தில் அங்கு ஆட்சி செய்த இந்து தர்பார் ராஜா வரிசையில், ஒன்பதாவது தர்பார் ராஜாதான் கெடாவின் முதல் சுல்தானாக மாறினார். அந்தக் காலக்கட்டத்தில் இந்த மண்டலத்தில் இஸ்லாம் சமய மறுமலர்ச்சி ஏற்பட்டதன் விளைவாக, 9-ஆவது இந்து மன்னர் இஸ்லாத்தைத் தழுவினார். இந்தோனேசியாவில் இருந்து வந்த ஒரு மார்க்க அறிஞர்தான் ஒன்பதாவது இந்து அரசர் முஸ்லிம் சமயத்தைத் தழுவதற்குரிய சடங்குகளை நிறைவேற்றினார். அந்த மார்க்க அறிஞர்கூட, அரபுத் தந்தைக்கும் இந்தோனேசியத் தாய்க்கும் பிறந்தவர்.

கெடா அரண்மனையில் இடம்பெறும் அரச பாரம்பரிய சடங்குகளில் இந்து, பௌத்த கலாச்சரம் இழையோடி இருப்பதை இப்பொழுதும் காணலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

அப்படிப்பட்ட வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க துங்கு அப்துல் ரகுமானின் சீரிய தலைமையில் 1957 ஆகஸ்ட் 31-இல் ஆங்கிலேய ஆதிக்கத்திலிருந்து விடுதலைப் பெற்ற அந்நாளைய மலாயா, 1963ல் சபா, சரவாக் ஆகிய பெருமாநிலங்களை இணைத்துக் கொண்டு ஒன்றுபட்ட மலேசியா உருவாவதற்கு அரும்பாடாற்றிய பெருந்தகை துங்க அப்துல் ரகுமான்.

துன் டான் செங் லோக், துன் வீ. தி. சம்பந்தன் ஆகிய இரு தலைவர்களையும் துணை கொண்டு மலாய், சீன, இந்திய இனங்களை ஒருமைப்படுத்தி மலேசிய கூட்டணி கட்சியை உருவாக்கி ஆயுதங்களுக்கு அவசியமின்றி, அறிவுப் பூர்வமாக ஆங்கிலேயர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி சுதந்திரத்திற்கு வழி வகுத்தவர், துங்கு அப்துல் ரகுமான்.

சுல்தான் அப்துல் ஹமீட் ஹலீம் ஷாவின் எட்டு மனைவியருள் ஆறாவது மனையியான மஞ்சலாராவிற்கு ஆறாவது குழந்தையாகப் பிறந்தவர்தான் துங்கு அப்துல் ரகுமான். மன்னர் அப்துல் ஹமீட் ஹலீம் ஷாவின் அரண்மனை வளாகத்தில் இருந்த பௌத்த ஆலயத்தில்தான் துங்குவும் அவரின் உடன் பிறப்பினரும் வசித்து வந்தனர்.

குறும்புத்தனமும் துடுக்குத்தனமும் நிரம்பியிருந்த சிறுவனான ரகுமானை (துங்குவை) அவரின் தாயாரால் கண்டிக்க முடியவில்லை. மலேசியாவின் நவீன தந்தை என்று கூறப்படும் துன் மகாதீரின் தந்தையான முகமட் இஸ்கந்தார் என்பார் நிறுவிய சிறிய ஆங்கிலப் பள்ளியில் சேர்க்கப்பட்ட துங்கு அப்துல் ரகுமான் வகுப்பறையைவிட்டு அடிக்கடி ஓடி விடுவாராம்.

அதனால், ரகுமானை குடும்பத்திலிருந்து கொஞ்ச காலம் பிரித்து வைப்பது என்று பெரியவர்கள் எடுத்த முடிவின்படி பேங்காகில் இருந்த "தெப்சிரின்" பள்ளியில் துங்கு சேர்க்கப்பட்டு, அங்கு அவருக்கு கல்வியும் சயாமிய மொழியும் போதிக்கப்பட்டனவாம். பின்னர் பினாங்கு "..ப்ரி ஸ்கூலில்" துங்கு சேர்க்கப்பட்டார். இந்தப் பள்ளிதான் துங்குவின் கல்விப் பயணத்தையே மாற்றி அமைத்தது. கல்வி கேள்விகளில் தீவிரக் கவனம் செலுத்தத் தொடங்கினார்.

இலண்டனில் வரலாறு, சட்டம் என இரு துறைகளில் இளங்களைப் பட்டம் பெற்ற துங்கு கூலிம், அலோர்ஸ்டார் நகரங்களில் அரசப் பணி புரிந்திருக்கிறார். அந்தக் காலக்கட்டத்தில் தாம் மன்னர் பரம்பரையில் தோன்றியவர் என்ற எண்ணமெல்லாம் இன்றி பொது மக்களுடன் இயல்பாகப் பேசி பழகுவாராம். அரசப் பணியில் நெடிய அனுபவம் பெற்ற துங்கு, பின்னர் நாட்டின் விடுதலை இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதை நாடு அறியும். 1908 பிப்ரவரித் திங்கள் 8-ஆம் நாள் தோன்றிய இவர், 1990ஆம் இதே நாளில்(டிசம்பர் 6) இயற்கை எய்தினார். எனினும், மலேசிய வரலாற்றில் துங்கு அப்துல் ரகுமானின் பெயர் எந்நாளும் நிலைத்திருக்கும்.

**நக்கீரன்** - Nakkeeran 013-244 36 24

# வறுமையுடன் சொந்தம் கொண்டாடிய மாகவி பாரதியார்

தமிழன்னையின் அரவணைப்பு ஒன்றுதான் பெருங்கவி பாரதிக்கு நிறைவாகக் கிட்டியதேத் தவிர மற்ற யாவும் குறைவாகவே வாய்த்தன் அவரின் வாழ்நாளும்கூட அப்படித்தான்.



சுப்பையா (சுப்பிரமணியன்) என்னும் இயற்பெயருடன் பிறந்த பாரதியின் அன்னை இலக்குமி அம்மாள், பாரதிக்கு ஐந்து வயதிருக்கும்போதே இறந்து விட்டதால் பாரதிக்கு தாயன்பில் பஞ்சம் ஏற்பட்டது. பாரதிக்கு ஏற்பட்டு முதல் வறுமை தாய் அன்பு குறைவுதான்.

தொழிலில் ஏற்பட்ட நட்டம் தாங்கமாட்டாமல், தந்தை சின்னசாமியோ பாரதி 16 வயதை எட்டியிருந்த நிலையில் மறைந்ததால், மந்திர சொல் உரைக்கும் தந்தையின் வழிகாட்டல் அத்துடன் நின்றுபோனது.

ஆங்கில அதிகாரிகளின் கீழ், தன் மகன் சுப்பையா ஒரு தொழில் வல்லானாகத் திகழ வேண்டுமென்று விரும்பிய சின்னசாமி, பாரதியை ஆங்கிலமும் கணிதமும் பயில நெல்லை சீமைக்கு அனுப்பிவைத்த கொஞ்ச நாட்களிலேயே அவருக்கு செல்லம்மாள் என்ற சிறுமியை பாரதிக்கு (பதினான்கரை வயது) மணம் முடித்திருந்த நிலையில், தந்தை காட்டிய கல்விப் பாதை பிடிக்காததால் அதையும் பாதியிலேயே விட்ட சூழலில், இடக்கையில் தாளையும் வலக்கையில் எழுதுகோலையும் ஏந்துவதைத் தவிர வேறொன்றும் அறியாத பாரதியின் இல்லத்தில் பொருள் வறுமை சிம்மாசனமிட்டு அமர்ந்து கொண்டது.

வறுமையிலும் செம்மை காத்த செல்லம்மாள் துணையாக வாய்த்தது பாரதியார் பெற்ற பெறும்பேறு. சிறு வயது முதலே கல்வி நாட்டமும் இலக்கிய தாயகமும் மிகப் பெற்றிருந்த பாரதியார், அந்தச் சூழ்நிலையிலும் உயர்க்கல்வியை நாடி காசி அலகாபாத் பல்கலைக்கழகத்திற்குச் சென்றார்.

அங்கு சம்ஸ்கிருதம், ஹிந்தி, ஆங்கிலம், வங்காளம் உள்ளிட்ட மொழிகளைக் கற்றுத் தேர்ந்தார். அந்தக் காலக்கட்டத்தில்தான் ஆங்கில கவிமகன் ஷெல்லியின் படைப்புகளின்பால் பாரதிக்கு ஈர்ப்பு ஏற்பட்டது.

அத்துடன் தமிழின் கிளை மொழிகளான தென்னிந்திய மொழிகளிலும் தேர்ந்தார் பாரதி. அதனால்தான், "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாரதியால் பாட முடிந்தது.

ஏழு வயதிலேயே கவிமீது நாட்டம் செலுத்திய பாரதி, 11 வயதில் சிறந்த கவிதைகளை இயற்ற முனைந்தார். இதை அறிந்த எட்டயபுரத்து மன்னர், சுப்பையாவை வரவழைத்து தன்னுடைய புலவர் சபையிலே கொண்டு நிறுத்தினார். அங்கு பாரதியை சோதித்த புலவர் பெருமக்கள் வியப்பில் ஆழ்ந்தனர். பாரதி என்னும் பெயரையும் சூட்டினர்.

அத்தை குப்பம்மாளின் அரவணைப்புடன் காசியில் நான்கு ஆண்டுகளைக் கழித்த பாரதி எட்டயபுரம் திரும்பியதும் அரசவைக் கவிஞர் ஆனார். அந்த காலக்கட்டத்தில் இந்திய விடுதலை வேட்கை நாடெங்கும் பரவியிருந்ததால், பாரதியும் தன்னுடைய பேனா முனையை விடுதலைப் போராட்டத்தின் பக்கம் திருப்பினார்.

இயல்பாகவே புரட்சி மனப்பான்மை கொண்டிருந்த பாரதியார் திலகர், வஉசி, சுப்பிரமணிய சிவா, பாவேந்தர், அரவிந்தர், சுதேசி பத்மநாபன், ஆஷ் துரையைக் கொன்ற குமரன் உள்ளிட்டோரிடம் நட்பு பாராட்டினார்.

பாரதியாரின் குடும்ப வாழ்க்கை, பத்திரிகை வாழ்க்கை, நட்பு வட்டம் என எதுவுமே நிலையாக இல்லாமல் எல்லாமே மாறிக்கொண்டிருந்தன. வசப்பட்ட அத்தனையும் தொடர்ந்து கைவசம் நிலைக்காமல் நழுவிக் கொண்டே இருந்தன. பாரதியும் அடுத்த நாள் வாழ்க்கையைப் பற்றியோ இந்தப் பொருள் நமக்கு நாளை வேண்டுமே என்றோ ஒருபோதும் எண்ணாதவர். அதனால்தான் மனைவி உலைக்காக வைத்திருந்த கொஞ்ச அரிசியையும் எடுத்து வீட்டு முற்றத்தில் வாரி இறைத்து குருவிகள் உண்பதைப் பார்த்து மகிழ்ந்தார்.

அந்த வகையில், அவருக்கு காலம் தந்த வாழ்நாளும் 39 வயதுடன் நின்றுப்போனது. பாரதியாருடன் அவர் வாழ்ந்த காலமெல்லாம் இணை பிரியாமல் ஒட்டி உறாவாடியவை தாளும் கோலும்தான்.

அத்தகைய பெருங்கவிமகன் சுப்பிரமணிய பாரதிக்கு இன்று (1882, டிசம்பர் 11) பிறந்த நாள்.

**நக்கீரன்** - Nakkeeran 013-244 36 24

# அன்பின் தொனி - 590

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபத்தின் வல்லமை.**

**கர்த்தராகிய ஆண்டவரே, நீரே என் நோக்கம்**

கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன், நான் ஒருபோதும் வெட்கம் அடையாதபடி செய்யும். உமது நீதியினிமித்தம் என்னை விடுவித்து, என்னைக் காத்தருளும், உமது செவியை எனக்குச் சாய்த்து, என்னை இரட்சியும். நான் எப்பொழுதும் வந்தடையத்தக்கக் கன்மலையாயிரும், என்னை இரட்சிப்பதற்குக் கட்டளையிட்டீரே, நீரே என் கன்மலையும் என் கோட்டையுமாய் இருக்கிறீர். என் தேவனே, துன்மார்க்கனுடைய கைக்கும், நியாயக்கேடும் கொடுமையுமுள்ளவனுடைய கைக்கும் என்னைத் தப்புவியும். கர்த்தராகிய ஆண்டவரே, நீரே என் நோக்கமும், என் சிறுவயதுதொடங்கி என் நம்பிக்கையுமாயிருக்கிறீர். நான் கர்ப்பத்தில் உற்பவித்தது முதல் உம்மால் ஆதரிக்கப்பட்டேன், என் தாயின் வயிற்றிலிருந்து என்னை எடுத்தவர் நீரே, உம்மையே நான் எப்பொழுதும் துதிப்பேன். அநேகருக்கு நான் ஒரு புது மைபோலானேன், நீரோ எனக்குப் பலத்த அடைக்கலமாயிருக்கிறீர். என் வாய் உமது துதியினாலும், நாள்தோறும் உமது மகத்துவத்தினாலும் நிறைந்திருப்பதாக. முதிர்ந்தவயதில் என்னைத் தள்ளிவிடாமலும், என் பெலன் ஒடுங் கும்போது என்னைக் கைவிடாமலும் இரும். என் சத்துருக்கள் எனக்கு விரோதமாய்ப் பேசி, என் ஆத்துமாவுக்குக் காத்திருக்கிறவர்கள் ஏகமாய் ஆலோசனைபண்ணி: தேவன் அவனைக் கைவிட்டார், அவனைத் தொடர்ந்துபிடியுங்கள், அவனை விடுவிப்பார் இல்லை என்கிறார்கள். தேவனே, எனக்குத் தூரமாயிராதேயும், என் தேவனே, எனக்குச் சகா யம்பண்ணத் தீவிரியும். என் ஆத்துமாவை விரோதிக்கிறவர்கள் வெட்கி அழியவும், எனக்குப் பொல்லாப்புத் தேடுகிற வர்கள் நிந்தையாலும் இலச்சையாலும் மூடப்படவுங்கடவர்கள். நானோ எப்பொழுதும் நம்பிக்கைகொண்டிருந்து, மேன்மேலும் உம்மைத் துதிப்பேன். என் வாய் நாள்தோறும் உமது நீதியையும் உமது இரட்சிப்பையும் சொல்லும், அவைகளின் தொகையை நான் அறியேன். கர்த்தராகிய ஆண்டவருடைய வல்லமையை முன்னிட்டு நடப்பேன், உம் முடைய நீதியைப்பற்றியே மேன்மைபாராட்டுவேன். தேவனே, என் சிறுவயதுமுதல் எனக்குப் போதித்துவந்தீர், இது வரைக்கும் உம்முடைய அதிசயங்களை அறிவித்துவந்தேன். இப்பொழுதும் தேவனே, இந்தச் சந்ததிக்கு உமது வல்ல மையையும், வரப்போகிற யாவருக்கும் உமது பராக்கிரமத்தையும் நான் அறிவிக்குமளவும், முதிர்வயதும் நரைமயிருமுள்ளவனாகும் வரைக்கும் என்னைக் கைவிடீராக. தேவனே, உம்முடைய நீதி உன்னதமானது, பெரிதானவைகளை நீர் செய்தீர், தேவனே, உமக்கு நிகரானவர் யார்? அநேக இக்கட்டுகளையும் ஆபத்துகளையும் காணும்படி செய்த என்னை நீர் திரும்பவும் உயிர்ப்பித்து, திரும்பவும் என்னைப் பூமியின் பாதாளங்களிலிருந்து ஏறப்பண்ணுவீர். என் மேன்மையைப் பெருகப்பண்ணி, என்னை மறுபடியும் தேற்றுவீர். என் தேவனே, நான் வீணையைக் கொண்டு உம்மை யும் உம்முடைய சத்தியத்தையும் துதிப்பேன், இஸ்ரவேலின் பரிசுத்தரே, சுரமண்டலத்தைக் கொண்டு உம்மைப் பாடு வேன். நான் பாடும்போது என் உதடுகளும், நீர் மீட்டுக்கொண்ட என் ஆத்துமாவும் கெம்பீரித்து மகிழும். எனக்குப் பொல்லாப்பைத் தேடுகிறவர்கள் வெட்கி இலச்சையடைந்தபடியால், நாள்தோறும் என் நாவு உமது நீதியைக் கொண்டாடும். - **சங்கீதம் 71: 1-24**

**சகல ராஜாக்களும் அவரைப் பணிந்துகொள்வார்கள்**

தேவனே, ராஜாவுக்கு உம்முடைய நியாயத்தீர்ப்புகளையும், ராஜாவின் குமாரனுக்கு உம்முடைய நீதியையும் கொடுத் தருளும். அவர் உம்முடைய ஜனங்களை நீதியோடும், உம்முடைய ஏழைகளை நியாயத்தோடும் விசாரிப்பார். பர்வ தங்கள் ஜனத்திற்குச் சமாதானத்தைத் தரும், மேடுகள் நீதியின் விளைவோடிருக்கும். ஜனத்தில் சிறுமைப்படுகிற வர்களை அவர் நியாயம் விசாரித்து, ஏழையின் பிள்ளைகளை இரட்சித்து, இடுக்கண் செய்கிறவனை நொறுக்குவார். சூரியனும் சந்திரனுமுள்ளமட்டும், அவர்கள் உமக்குத் தலைமுறை தலைமுறையாகப் பயந்திருப்பார்கள். புல்லறுப் புண்ட வெளியின்மேல் பெய்யும் மழையைப்போலவும், பூமியை நனைக்கும் தூறலைப்போலவும் இறங்குவார். அவருடைய நாட்களில் நீதிமான் செழிப்பான், சந்திரனுள்ளவரைக்கும் மிகுந்த சமாதானம் இருக்கும். ஒரு சமுத்திரந் தொடங்கி மறுசமுத்திரம்வரைக்கும், நதிதொடங்கி பூமியின் எல்லைகள்வரைக்கும் அவர் அரசாளுவார். வனாந்தர த்தார் அவருக்கு முன்பாகக் குனிந்து வணங்குவார்கள், அவருடைய சத்துருக்கள் மண்ணை நக்குவார்கள். தர்ஷீ சின் ராஜாக்களும் தீவுகளின் ராஜாக்களும் காணிக்கைகளைக் கொண்டுவருவார்கள், ஷேபாவிலும் சேபாவிலுமுள்ள ராஜாக்கள் வெகுமானங்களைக் கொண்டுவருவார்கள். சகல ராஜாக்களும் அவரைப் பணிந்துகொள்வார்கள், சகல ஜாதிகளும் அவரைச் சேவிப்பார்கள். கூப்பிடுகிற எளியவனையும், உதவியற்ற சிறுமையானவனையும் அவர் விடுவிப்பார். பலவீனனுக்கும் எளியவனுக்கும் அவர் இரங்கி, எளியவர்களின் ஆத்துமாக்களை இரட்சிப்பார். அவர்கள் ஆத் துமாக்களை வஞ்சகத்திற்கும் கொடுமைக்கும் தப்புவிப்பார், அவர்களுடைய இரத்தம் அவருடைய பார்வைக்கு அரு மையாயிருக்கும். அவர் பிழைத்திருப்பார், ஷேபாவின் பொன் அவருக்குக் கொடுக்கப்படும், அவர்நிமித்தம் இடைவிடா மல் ஜெபம்பண்ணப்படும், எந்நாளும் ஸ்தோத்திரிக்கப்படுவார். பூமியிலே மலைகளின் உச்சிகளில் ஒரு பிடி தானியம் விதைக்கப்பட்டிருக்கும், அதின் விளைவு லீபனோனைப்போல அசையும், பூமியின் புல்லைப்போல நகரத்தார் செழித் தோங்குவார்கள். அவருடைய நாமம் என்றென்றைக்கும் இருக்கும், சூரியனுள்ளமட்டும் அவருடைய நாமம் சந்தான பரம்பரையாய் நிலைக்கும், மனுஷர் அவருக்குள் ஆசீர்வதிக்கப்படுவார்கள், எல்லா ஜாதிகளும் அவரைப் பாக்கியமு டையவர் என்று வாழ்த்துவார்கள். இஸ்ரவேலின் தேவனாயிருக்கிற கர்த்தராகிய தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவ தாக, அவரே அதிசயங்களைச் செய்கிறவர். அவருடைய மகிமைபொருந்திய நாமத்துக்கு என்றென்றைக்கும் ஸ்தோத் திரமுண்டாவதாக, பூமிமுழுவதும் அவருடைய மகிமையால் நிறைந்திருப்பதாக. ஆமென், ஆமென். ஈசாயின் புத்திர னாகிய தாவீதின் விண்ணப்பங்கள் முடிந்தது. - **சங்கீதம் 72: 1-20**

**உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிரு**

என் மகனே, என் போதகத்தை மறவாதே, உன் இருதயம் என் கட்டளைகளைக் காக்கக்கடவது. அவைகள் உனக்கு நீடித்த நாட்களையும், தீர்க்காயுசையும், சமாதானத்தையும் பெருகப்பண்ணும். கிருபையும் சத்தியமும் உன்னை விட்டு விலகாதிருப்பதாக, நீ அவைகளை உன் கழுத்திலே பூண்டு, அவைகளை உன் இருதயமாகிய பலகையில் எழு திக்கொள். அதினால் தேவனுடைய பார்வையிலும் மனுஷருடைய பார்வையிலும் தயையும் நற்புத்தியும் பெறுவாய். - **நீதிமொழிகள் 3: 1-4**

*தொடரும்...*

## 9ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்24-12-1956 தோற்றம் 08.02-1966



மார்க்கண்டு உதயகுமார் உதயகுமார் வசந்திமாலா

(புத்தூர் உபதபால் ஊழியர், நீர்வேலி மேற்கு, இராஜவீதி)

இறைவன் அடியில் 08-12-2011

கண்களில் நீர் பொழிய, கைகள் நடுநடுங்க
இலக்கியம் தடுமாற, இலக்கணம் தமிழ்மாற
எப்படிக் கவிதைகள் எழுதமுடியும்
உங்கள் புகழ் எப்படிப் பாட முடியும்

நோயோடு வந்திருந்தால் நொந்திடோமே
வஞ்சகன் மாய்த்துவிட்டுப் போனானே – என் பெற்றோரே
சாகின்ற வயதா உங்களுக்கு
சாந்தமாய் இருந்த நீங்கள்
சாம்பலாய் போனது ஏன்?

ஒன்பது ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
எங்கள் இதயத்தில் வாழும் தெய்வங்களே
உங்கள் நினைவோடுதான்
தினம் தினம் வாழ்கின்றோம் நாம்

உழைப்பதற்கு உதாரணம் என் தந்தை நீரன்றோ
வடமாகாணத்தில் சிறந்த தபால் அலுவலர் நீரல்லோ
விருதுகள் பல பெற்ற போதும் சோரவில்லையே என் ஐயா
தபாற் கடமையுடன் விவசாயமும் உயிரல்லோ
உழைத்துக் களைத்தாலும் சொந்தங்களை நீ மறந்ததில்லை
வேசமற்ற பாசக்காரன் நீரன்றோ

உறவாகி வந்த அந்த வேசக்காரராகள்
உங்கள் பாசத்தையும் மறந்ததேனோ
இரத்த சொந்தங்கள் மத்தியில்
அர்ப்ப சொந்தங்கள் பெரிதாகிப் போனதோ
உறவான இரத்தம் சிந்திக் கடக்கையில் பாசம் பெருகவில்லை
முழுவேசம் தரித்த கயவர்தனை மன்னிப்பது எவ்வழியோ?

அரக்கன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்
உங்களை மாய்த்த அந்தக் கயவர் இன்று
இவ் உலகில் உயிரோடு இல்லை
அறமென்றும் தோற்றதில்லை என்பதை நாம் அறிவோம்

ஊர் போற்ற வாழ்ந்த என் அன்பு நெஞ்சங்களே
இன்றும் நீங்கள் எம் நெஞ்சத்திலே நிலையாய் வாழ்கின்றீர்கள்
நினைவுகள் சூழ்ந்து கண்ணீரால் உங்கள் காலடியை நனைக்கின்றோம்
அன்பென்ற பூவெடுத்து உங்களைப் போற்றி நிற்கின்றோம்
சாந்தி அற்று போனீர்கள். சாந்தியடைய வேண்டுகின்றோம்
உங்கள் ஆன்மா என்றென்றும் இறைதனில் கலக்கட்டும்!

என்றும் உங்கள் நினைவுடன் பிள்ளைகள்

செந்தூரன் (பிரான்ஸ்), குகதீபன் (கனடா)

சங்கீதன் (கனடா), கோபிகா (கனடா)

289-952-3775

# PRECONSTRUCTION CONDOS & TOWNHOUSES!

Twelve Oaks Towns
GreenCity Development Group Inc.

Ivylea Towns
Marlin Spring Development and Greybrook Realty Partners

King East Estates
Plazacorp Urban Residential Communities

High Point Urban Towns
Laurier Homes

Horizons Modern Towns
Chestnut Hill Developments

Station 3 Condos
Brookfield Residential

The BoatWorks Towns
Andrin Homes

Landing Condos Whitby Harbour
Cortera Private Equities

JAC Condos
Graywood Developments Ltd. and Phantom Developments

181 East Condos
Stafford Homes Ltd. and Greybrook Realty Partners

Daniels Keelesdale Condos and Towns
The Daniels Corporation

Empire Quay House Condos
Empire Communities

199 Church Condos
CentreCourt Developments Inc. and Parallax Development Corp.
Church St & Dundas St E, Toronto
$537,990 - $1,018,990 | 335 sq ft - 860 sq ft
VIP Sale NOW on

Axess Condos
Liberty Homes and Fieldgate Construction

Universal City Condos 4
Chestnut Hill Developments

Bartley Towns
Bela Inc

Artsy Condos
The Daniels Corporation

Field House Towns
The Daniels Corporation

28 Eastern Condos
Alterra Group

Wonderly Park Towns
Kaleido Corporation

Maxx Urban Towns 2
VanMar Developments



## Bala Logendralingam
REALTOR®

EXECUTIVE Award
100% Award

RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Office: 416-287-2222

647-447-1562
info@balalogen.com
Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9



# கனடா உதயன் வாசகர் வட்டம் நடத்தும்
# 2020ம் ஆண்டிற்கு விடைகொடுக்கும் இணையவழிக்
# கவியரங்கம்

ஏழு கவிஞர்கள் பல நாடுகளிலிருந்து கலந்து கொள்கின்றார்கள்

கவியரங்கத் தலைப்பு:- எதைக் கொண்டு வருகின்றாய் இனிய புத்தாண்டே?



கணபதி ரவீந்திரன் (கனடா)
அருட்கவி ஞான கணேசன் (கனடா)
அ. தமிழரசி (தமிழ்நாடு)
மகேந்திரன் பெரியசாமி (அமெரிக்கா)
பிரவீணா (சுவிஸ்)
கோவிலூர் செல்வராஜா (இங்கிலாந்து)
ஜவாத் மரைக்கார் (இலங்கை)

காலம் 26-12-2020 சனிக்கிழமை

கனடா, அமெரிக்கா நேரம்:- காலை 9.00 மணி
இலங்கை, இந்திய நேரம்:- இரவு 7.30 மணி
இலண்டன் நேரம்:- மாலை 2.00 மணி
ஐரோப்பிய நேரம்:- மாலை 3.00 மணி

## Join Zoom Meeting
https://us02web.zoom.us/j/87143269785?pwd=QlJ0LzIrd0lJUkRabHVsQk41dzRWZz09

Meeting ID: 871 4326 9785
Passcode: 863268

மேலதிக விபரங்களிற்கு:-1416 732 1608

Life Insurance
Don't think twice
Life Insurance Group Benefits
Critical Illness RRSP / RESP
Disability
Investments
INFORCE LIFE Financial Services Inc.

RESP Registered Education Saving Plans
40% - 20% Goverment Grant
Plus additional 15-10% on us.
Start Saving Early
Ajanthan (Ajay) Thavayogarajah
Insurance and Investments
Call Ajay: 416.704.8074

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

வீடு வாங்க விற்க
Vijay Muthumani
Sales Representative
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated.
Off: 416-298-3200
Dir 647-963-0705

23rd Years in Publishing

UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கனடிய வாரச் செய்தி இதழ்

Tel : 416-752-1524
Fax: 416-752-6703

NEW CLASS STARTING
புதிய வகுப்புகள் ஆரம்பம்
October 2020
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services

ONLY LOCATION IN GTA
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
1646 VICTORIA PARK AVE., SUITE 1
PARK PLAZA (BETWEEN LAWRENCE & EGLINTON)
TORONTO, ON. M1R 1P7
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
Email: OATC@oceantax.ca Web: www.oceantax.ca
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services

மொன்றியல் நகரில்
உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலசரக்கு மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயம் 1288 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday December 11, 2020




# கனடா சபரிமலை ஐயப்பன் ஆலய நிர்வாகத்தின் ஏற்பாட்டில் உணவு வங்கிக்கு உணவுப் பொருட்கள் சேகரிக்கும் திட்டம்

கனடாவில் ஸ்காபுறோ நகரில் மார்க்கம் வீதியில் இயங்கிவரும் சபரிமலை ஐயப்பன் ஆலய நிர்வாகத்தின் ஏற்பாட்டில் உணவு வங்கிக்கு உலர் உணவுப் பொருட்கள் சேகரிக்கும் திட்டம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. (உள்ளே 16ம் பக்கத்தில் விபரமான செய்தி)

# Youth Credit Management is Very Important for Families in Canada




## கனடிய இளைஞர்களின் Credit Management இல் அவர்களின் குடும்பத்திற்கும் பொறுப்புக்கள் உண்டு

மேற்கண்டவாறு தெரிவித்தார் கனடாவின் ஸ்காபுறோ நகரில் இயங்கிவரும் பிரபல நிதி ஆலோசனை நிறுவனமான Debt Free Credit Solution இன் அதிபர் த. இளங்கீரன் அவர்கள். (உள்ளே..16ம் பக்கத்தில் விபரமான செய்தி)

# கனடா ஒன்றாரியோ மாகாணத்தில் கல்வி பயிலும் பிள்ளைகளுக்கு அரச உதவிகள்



கோவிட்-19 நோய்த்தொற்றுக் காலத்தில் ஒன்ராறியோவில் வாழும் குடும்பங்களுக்கு ஏற்படக்கூடிய கல்விக்கான மேலதிக செலவுகளை எதிர்கொள்ளும் வகையில் ஒன்ராறியோ மாகாண அரசாங்கம் மீண்டும் மொத்தமாக 380 மில்லின் டொலர்கள் நிதியை வழங்கியுள்ளது. (உள்ளே 16ம் பக்கம் விபரமான செய்தி)



# கனடா TORONTO VOICE OF HUMANITY மனித நேய அமைப்பின் சார்பில் திருகோணமலையில் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

கோவிட்-19 நோய்த்தொற்றுக் காலத்தில் ஒன்ராறியோவில் வாழும் குடும்பங்களுக்கு ஏற்படக்கூடிய கல்விக்கான மேலதிக செலவுகளை எதிர்கொள்ளும் வகையில் ஒன்ராறியோ மாகாண அரசாங்கம் மீண்டும் மொத்தமாக 380 மில்லின் டொலர்கள் நிதியை வழங்கியுள்ளது. (உள்ளே 16.ம் பக்கம் விபரமான செய்தி)

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

# 'புலம்பெயர் தமிழ்ச் சமூக வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பு' என்ற தலைப்பில் ஒரு கலந்துரையாடல்

புலம்பெயர் தமிழ்ச் சமூக வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பு என்ற தலைப்பில் Zoom ஊடான ஒரு கலந்துரையாடல் அமெரிக்கா, நியூ ஜெர்செயில் அமைந்துள்ள கல்வி, கண்டுபிடிப்பு, மாணவ தலைமைத்துவ அமைப்பு சார்பாக ஞானசேகரன் செல்லையா தலைமையில் நாளை மறுநாள் ஞாயிறு 13 ம் திகதி அமெரிக்க, கனேடிய நேரம் காலை 11 மணிக்கு இடம்பெறவுள்ளது. விபரமான செய்தி உள்ளே. 16ம். பக்கத்தில்)

